# புது நூல் அறிமுகம்

கால்படி
அரிசி
ஆத்மா

# காலபடி அரிசி ஆத்மா

பூவை எஸ். ஆறுமுகம்

POOVAI S. ARUMUGAM
2-A, VAANILA ... RASU STREET
WEST TAMBARAM, MADRAS 600045

புதுமைப் பிரசுரம்
40, பைகிராப்ட்ஸ் ரோடு,
சென்னை - 600 005,

முதற்பதிப்பு : ஜூலை 1978

(C) பூவை எஸ். ஆறுமுகம்
ஏலக்காய் வாரியம்,
சென்னை – 600 017.

விலை ரூ. 6-00

ஆஷா அச்சகம்,
சென்னை – 600 005.

# எண்ணிப் பார்க்கிறேன்

வாழ்க்கை ஒரு ஜீவநதியென்றால், அந்த வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்ற இலக்கியம் ஒரு ஜீவகாவியமாக அமைகின்றது.

இரண்டுக்குமே பொது : எதிர் நீச்சல் !

ஜீவகாவியத்திற்கு உயிர், நாவல்; உயிர்ப்பு, சிறுகதை.

வாழ்க்கை இல்லையெனில், நவீனமும் இல்லை; சிறு கதையும் இல்லை.

உலகத்திலே, பொழுது விடிந்து பொழுது போனால், நித்த நித்தம் ஆயிரமாயிரம் கதைகள் நடந்து கொண்டேயிருக்கின்றன ; அதாவது, வாழ்க்கை ஆயிரமாயிரம் கோணங்களில் அல்லது, கோலங்களில் உருவாகி, அல்லது, உருவாக்கப்பட்டு, விளையாடிக் கொண்டும் விளையாட்டுக் காட்டிக் கொண்டும் இருக்கிறது. இவ் விளையாட்டின் விதி கட்டுப்படலாம் ; கட்டறுக்கலாம் ; எல்லை காக்கலாம் ; எல்லையும் சொல்லலாம் ; முரண்படுவது உண்டு ; வக்கரிப்பும் நிகழும் ; புதிய அலை கண் சிமிட்டும் ; பழைய அலை விம்மிப் புடைக்கும் !—ஆக, வாழ்வே ஒரு மாயமாக அமைந்தாலும் அமையும் ; அன்றி, வாழ்வு ஒரு சோதனைக் கடலுகப் பூச்சாண்டி காட்டவும் செய்யும். எது எப்படி இருந்தாலும், வாழ்க்கை, வாழ்க்கையாக அதற்குரிய நியாயத்திலும் மனே

தர்மத்திலும் இயங்கிட வேண்டாமா ?—பிறவி எனில், அந்தப் பிறவிக் கடலைத் தாண்ட, அதற்கென்று ஆதர்ச பூர்வமான ஒரு வாழ்க்கை வேண்டும் அல்லவா ?—அந்த வாழ்க்கைக்கும் ஒரு விதி தேவை தானே ?—அந்த விதிக்கும் ஒரு விதியாக அமைகின்ற சித்து விளையாட்டிற்குப் பெயர் தான் கதை !—நடைமுறை வாழ்வியலின் யதார்த்தமான கதையும் அதுவே !

உலகிலே மனித ஜாதி தோன்றிய காலந் தொட்டுக் கதை சொல்லும் ஆசையும், கதை கேட்கும் ஆர்வமும் தோன்றியிருக்க வேண்டும். அப்படியென்றால், அந்த ஆண்டவன் தான் ஆதிக் கதாசிரியனாக இருப்பானோ ?

ஆனால் ஒன்று—அலகிலா விளையாட்டுடையானுக்குக் கதை சொல்ல மட்டும்தான் தெரியும் போலும் !—கதையைக் கேட்கவும் தெரிந்திருக்க வேண்டாமோ ?

சரி !...

முன்னம் நான் எழுதிய முன்னுரை யொன்றில் இவ்வாறு குறித்திருந்தேன். 'வாழ்க்கைக்கு உட்பட்டு, ஆனால் விதிக்கு உட்படாத ஒரு விதியை நிர்ணயப்படுத்தி இயல்பாக ஆரம்பமாகி, இயல்பாகவே முடிகின்ற ஓர் உணர்ச்சியின் ஜீவன்தான் கதை !'—மெய்தான் !

பாரத நாடு பழம் பெரும் நாடு. இவ்வுண்மை அன்று பாரதிக்குத் தெரிந்து ; இன்று நமக்கும் தெரிந்தது. ஆனால் இங்கே இப்பொழுது, எதற்குப் பஞ்சம் வந்தாலும் வரலாம் ; பசிக்கும் பிரச்னைக்கும் பஞ்சமே வராது. இந்த அந்தரங்கம் இயற்கைக்கும் தெரிந்து விட்டது !

பிரச்சினை இல்லையென்றால், வாழ்க்கை இல்லை ; எனவே தான், வாழ்க்கையும், அவ் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கதையும் கூட ஒரு பிரச்சினையாக—சிக்கலாக—சிக்கலுக்க

இயலாத புதிராக ஆகி விடுகிறது. பிரச்னை, படி தாண்டும் பத்தினியாக உருக்காட்டும் போது, கதை மாத்திரம் படி தாண்டாப் பத்தினியாக எங்ஙனம் உருக் கொள்ளக் கூடுமாம்?

ஆனல் ஒன்று,

இலக்கியம் ரசனை பெற, சாட்சியம் தான் தேவை; சட்டம் தேவை யில்லை !—' க. நா. சு. பிரச்னை ' அந் நாளிலே சூடும் சுவையும் பெற்றுப் பரபரப்புக் காட்டிய போது, நேர்மைத் திறம் இழந்து, சந்தர்ப்பவாதிகளாக விளங்கிய ஓரிரு விமர்சனப் பூசாரிகளைப் பற்றி ' உமா'வில் நான் இவ் வாறு வரம்பு கட்டி யிருந்தேன்: இலக்கியத் திருடர்களின் சுய ரூபத்தை எடை போடத் தகுதிபற்றிருந்த இவர்கள், அந்த இலக்கியத் திருடர்களை உச்சாணிக் கொம்பில் ஏற்றி வைத்துத் ' துதி ' பாடிய அந்தக் கூத்தை இலக்கியக் காவலர் கள் ஒரு போதும் மறந்துவிட மாட்டார்கள் !

மீண்டும் சொல்வேன் : இலக்கியப் பூசாரிகளுக்கும் வரம் தரும் ஜனநாயகப் பண்பு பூண்டவன், பண்பாடுமிக்க சமுதாயத்தின் ஆன்மாவாக விளங்கக் கூடிய ஸ்ரீமான் பொது ஜனம் தான் !...

எண்ணிப் பார்க்கிறேன் :

ராஜபோகமான கல்லூரி வாழ்வில், பீ. ஏ. பட்டப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்த நாளில், என் முதற்கதை வெளியாகி என்னையும் ஓர் எழுத்தாளனுக ஆக்கிய அந்த இனிய இளங் காலைப் பொழுது நிழலாடுகிறது. பிரபலமான பாங்க் ஒன்றில் இந்நேரம் உயர்பதவி வகித்திருக்க வேண்டிய என்னை ஓர் எழுத்தாளனுக ஆக்கிவிட்ட புண்ணியத்தைக் கட்டிக் கொண்டவர் புகழ்ச் செல்வர் சாண்டில்யன் என்ற நினைவும் என்னை ஆளத் தவற வில்லை ! வெறும் ஆறுமுகத்தை

'பூவை 'யாக ஆக்கி—பூவை என்ற அடைமொழி எத்தனை எத்தனை தோன்றினாலும், அவற்றையெல்லாம் ஒதுக்கி, 'பூவை' என்றால், 'நம்ம பூவை தான்!' என்று தொடர் புள்ளவர்கள் தொடர்புபடுத்திக் கொள்ளும் வகையில் ஒரு நிச்சயத்தன்மையை என்னிடம் உண்டாக்கி விட்ட பேராசிரியர் அமரர் கல்கியும் என்னை ஆட்கொள்ளத் தவற மாட்டார்!

மீண்டும் எண்ணிப் பார்க்கிறேன்:

அன்னை பொன்னியின் மடியில் வளர்ந்தேன்; அன்னை உமை என்னை ஆளாக்கினாள்; மகுடிக்கு விகடன் முதற் பரிசில் அளித்தது; மூத்தவர் பக்தவத்சலம் அவர்களின் தமிழ் நாட்டு அரசாங்கம் பூவையின் கதைகளுக்குப் பரிசு கொடுத்தது. விட்ட குறையின் தொட்ட குறையாகி, இந்த இருபத்தாறு ஆண்டுகளாகப் பற்றித் தொற்றி வரும் எழுத்தும் பைத்தியத்தில், நூற்றுக்கு ஒடிவரும் நூல்களை இலக்கியத்தின் பெரும்பாலான துறைகளிலே நான் எழுதியிருக்கிறேன்!

எல்லாம் சரி.

ஆனால்...

அன்று, கிட்டத்தட்ட இருபத்தாறு ஆண்டுகட்கு முன்னர், ஊர் பேர் தெரியாமல் இருந்த என்னை, ஊரையும் பேரையும் ஒரு தன்னம்பிக்கையோடு கொண்டிருக்கும் இவனும் ஒரு காலத்தில் ஊர் பேர் தெரிந்தவனாக, ஊரும் பேரும் தெரிந்தவனாக விளங்குவான் என்று கச்சிதமான தீர்க்க தரிசனத்தோடு எண்ணி, என்னுடைய எழுத்துக்களை நம்பியும் மதித்தும், என் முதற் சிறுகதைத் தொகுதியை வெளிப்படுத்திய அதே 'புதுமை பிரசுர' அதிபர் திரு வி. இராமசாமி அவர்கள் தாம் இன்று 'கடவுள்' என்னும் அற்புதத் தெய்வீக ஏட்டின் ஆசிரியராக அமர்ந்து எனது

இந்த இருபத்திரண்டாவது கதைப் பூங்கொத்தையும் வெளிக் கொணர்ந்திருக்கின்றீர் !—நியாயமான அந்த அன்பை நேர்மையான அந்தரங்க சுத்தியோடு கை தொழக் கடன்பட்டவன் அடியேன் !

**வி**தி யாரை விட்டது ?—ஓர் ஐந்தாண்டுக் காலம் எனக்கும் அஞ்ஞாத வாசம் கிட்டிற்று. அப்போது ஓர் அதிசயத்தை நான் அனுபவ பூர்வமாகக் கேரளத்து மண்ணில் உணர்ந்து, பெருமையும் பெருமிதமும் கொண்டேன். ‘எழுத்துக்காரன்’ என்றால், அங்கே ஒரே மரியாதையும் மதிப்பும் !—அந்தப் பாக்கியம், இங்கே நம் அன்புத் தமிழ் எழுத்தாளர்கட்கும் கிட்ட வேண்டாமா ?—உண்மையான இலக்கிய ஆர்வலர்கள் அன்பு கூர்ந்து இது பற்றிச் சற்றே சிந்தியுங்களேன் !...

இந் நூலைச் சிறப்புடன் உருவாக்கக் கைகொடுத்த ஓவியர் கோபன் உள்ளிட்ட அனைவருக்குமே என் அன்பும் நன்றியும் உரியன. வணக்கம்.

தியாகராய நகர்
25—6—1978

பூவை எஸ். ஆறுமுகம்

# பதிப்புரை

புதுமைப் பிரசுரத்திற்கும் நண்பர் பூவை எஸ். ஆறுமுகம் அவர்களுக்கும் ஏற்பட்ட தோழமைக்கு வெள்ளி விழா முடிந்து ஆண்டு கள் சிலவாகின்றன. ஆனாலும் அவர் அன்றிருந்த அதே மனநிலையோடு பண்பு கெடாமல், அன்பு மாறாமல், பழக இனியவராய் நடந்து வருவது கண்டு மிக்க மகிழ்கிறேன்.

ஆசிரியரே கூறியுள்ளபடி, இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன் அவரது முதல் நூலை புதுமைப் பிரசுரம் வெளியிட்டது. அன்றைய மதிப்பீடு சரியானதுதான் என்பதை நிரூபிக் கும் வகையில் திரு. பூவை அவர்கள் எழுத் துலகில் தனக்கென ஒரு தனியிடம் வகித்து ஓங்கி வளர்ந்து நின்று நூற்றுக்கணக்கான நூல்களை தமிழகத்திற்கு தந்துள்ளார்கள்.

அன்று தொட்டு இன்று வரை அவரும் வளர்ந்துள்ளார்; புதுமைப் பிரசுரமும் வளர்ந் துள்ளது. ஆனாலும் அவரால் ஆக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் முழுமையும் நாங்களே வெளியிட இயலவில்லை. ஒரு சில மட்டுமே வெளியிட முடிந்தன. காரணம் ஏதேதோ...... !!

இனியாகிலும் அவரது நூல்கள் அனைத்தை யும் வெளியிட விரும்புகிறோம், காலம் தான் நடத்திவைக்க வேண்டும்.

புதுமை பிரசுரம் — அன்பன்

25-6-78 — வீ. இராமசுவாமி

# ●●● கன்னிப் பவளம்

"சபாசு !"

அப்பொழுதுதான் பவளக்கொடிக்கு நல்ல மூச்சுத் திரும்பியிருக்க வேண்டும் !—வாயெல்லாம் பல் ; பல்லெல் லாம் பூஞ்சிரிப்பு ; சிரிப்பெல்லாம் சுகந்தம். ஈரம் மிக்க, தர்ம நியாயமான, நாணயம் மிகுந்த நாணம் !—' நாலு முச் சூடும் சும்மா நொடிக்கு நூறுவாட்டி தொணதொணத்துக் கிணு இருந்த ஆத்தா இனிமேரெண்டு மூணு நாளைக்காச்சும் மூச்சுக்காட்டாதாக்கும். ஆத்தா இல்லாங்காட்டி, சமைஞ்ச குட்டி எனக்கு எங்கழுத்திலேயும் ஊரு உலகத்தைப் போலே மூணு முடிச்சு விழுகிற மட்டும், யாரு எனக்கு நாதியாம் ? ம்...ஆத்தா நல்லா எழுதிக் கிடக்கவேணும்...ஆனா, ஆத்தாக் காரி முணுமுணுப்புக் காட்டாமல் இருந்தாக்க, அதுவே புண்ணியந்தானே ! ஊம் !...' அந்தப் புன்னகையில் தான் எத்தனை சத்தியக் கனவுகள்...சத்திய தருமங்கள் !

அந்தி மாலையின் மணம் பொன்வண்ணக் கதிர்களிலே பரவத் தொடங்கி விட்டது.

அவள் பெருமூச்சு விட்டாள்; இனிய நினைவுகள் சுந்தரக் கனவுகளாகச் சூழ்ந்தது; பூ நாகமாக மீண்டும் நெடுமூச்சு நெளிந்திட, தலைநிமிர்ந்தாள் அவள்; தலையை நிமிர்த்தினாள் அவள். நெருஞ்சி முள் நெஞ்சில் குத்திவிட்ட மாதிரி துடித்தாள்; சரிந்து கிடந்த மார்புச் சுங்கடியின் முகதலைவைப் பதட்டமும் பரதவிப்புமாகத் தோளிலே போட்டுக்கொண்டாள்; விம்மிப்புடைத்திட்ட இளம் மார்பகம் கரை அலையென அடங்கியது; முடங்கியது! 'அடி ஆத்தே!'—கொட்டடி ரவிக்கையின் அடிமுடிச்சு இப்போது கெட்டி; கச்சிதம்!

வெய்யிலில் இளந் தென்றல் இன்பச் சல்லாபம் நடத்தத் தொடங்குகிறது.

காலடியில் அம்பாரமாகக் குவிந்து கிடந்த சவுக்கைச் சுள்ளிகள் கூளமும் காயுமாகக் கண் சிமிட்டிக்கொண்டேயிருந்தன; இன்னமும் கூட!

எங்கிருந்தோ, என்னவோ ஒரு குருவி குரல் கொடுக்கிறதே! இயற்கைக்குக் கொடுக்கும் பின்னணிக் குரலோ?

குரலின் தரம் என்ன?

காதற் குரலா?

இல்லை—

விரகதாபக் குரலா?

இருந்திருந்தாற்போலே. வானம் 'மப்பு' போடத் தொடங்கிவிட்டது.

பவளக்கொடி தவித்தாள்; இனம்புரியாத வகையில் அச்சம் நெஞ்சில் நெளிந்தது. ஆகவே, பிடி கயிற்றைக் கட்டாந்தரையில் வாகாகவும் லாவகமாகவும் வீசிவிட்டு, ஒரு 'குடங்கை' சவுக்கைக் கூளத்தை அப்படியே கொத்தாக அள்ளி வீசினாள். அதோ பச்சைப் பனை மட்டை ஒன்று மல்லாந்து கிடக்கிறது!—பலே! கயிற்றைத் தெற்கு வடக்காக வீசி, மையத்திலே. பனை மட்டையை வாகு கணித்து 'முட்டு' போட்டாள். இனி,

சுள்ளிக் கூளங்களை 'மூசு மூசு' என்று கொத்துக் கொத்தாக விசிறிப் பரப்பிக் கட்டிக் கொண்டு கால் பாவ வேண்டியது தான் பாக்கி! மறுபடிமேலாக்கு அவளைச் 'சீண்டுருவம்' பண்ண நழுவப் பார்த்தது. பவளமா. கொக்கா?—'நல்ல காலம்! சத்தமுந்தி. மேனியிலே மேலாக்குத் துணி இல்லாம அசிங்கமாய் இருக்கையிலே, அந்நியம் அசல் யாரும் என்னைக் கண்டு வைக்கல்லே! அதுவும் கூட, ஆத்தா மூத்தவளோட கருணை தான் போலே!...'

சவுக்கைத் தூள் கட்டு உயர உயர அந்தி மஞ்சள் நிறம் மாறிக்கொண்டேயிருக்கிறது!

கருக்கலில் நெல் அவிக்க 'செத்தை—சருகு' ஏதாகிலும் வேண்டுமேயென்று அங்கலாய்த்த ஆத்தா, குச்சைவிட்டுப் புறப்பட்ட சமயம், சிவப்பு லாந்தர் காட்டிய எச்சரிக்கையை அவள் எங்ஙனம் மறுப்பாளாம்?—'ஆமா; சமைஞ்ச பொண்ணு நான்! எனக்கின்னு பரிசம் போட்டிருக்கிற அந்தப் பனங்குளம் மச்சு வீட்டு மச்சான் கையிலே என்னை நான் காவல் வைக்கிற மட்டுக்கும், எனக்கு நானே கண்ணிலே விளக்கெண்ணெய் ஊத்திக்கினு காவல் இருந்து தானே தீரணும்!...... அப்பத்தானே கண்டிக்காரர் மக வயித்துப் பேத்தி பவளம் பரம்பரைப் பெருமை மாருத சொக்கப் பச்சையாக்கும்!' என்கிற நல்ல பெயர் நாணயமாய் நிலேச்சுப் பேர் சொல்லவும் வாய்க்கும்!......ஆடி கழிஞ்சா எங்க கஷ்டமும் கழிஞ்சாப்பலேதான்! ஊம்; அல்லாம் ஆத்தா காளியோட கடாட்சமேதான்!' கண்கள் பொடிக்கின்றன. அந்தச் சுடுநீரில் ஆத்தா சித்துவிளேயாடுகின்ருளோ?...

'கா...கா...கா!'

பவளம் சுதாரிப்புக் கொள்ளலானுள். சிந்திக் கிடந்த சுள்ளிகளைக் கூட்டியும் குவித்தும் அள்ளிப்போட்டு ஒழுங்குபடுத்திய பின், 'ஒண்டிக்கையாகக் கயிற்றை இழுத்துப் பறித்துச் சவுக்குக் கட்டைக் கட்டி முடித்தபோது, வேர்வை மாத்திரம் சிந்தவில்லை; ஆற்றுமைப் பெருமூச்சும் சிந்தியது.

மனிதனின் மனம் மட்டும் தான் அடிக்கடி பச்சோந்தி யாக நிறம் மாறும் என்பதில்லை; வானமும்தான் நிறம் மாறுகிறது. இருந்திருந்தாற்போலே, ம ப் பு ப் போடத் தொடங்கிற்று

ஆம்.

பவளக்கொடி இனி குச்சுக்குத் திரும்பியாக வேண்டும். பொட்டுப் பொழுதுகூட தாமதிக்கக் கூடாது. ஆத்தா தள்ளாமையோடு உருகித் தவித்துக் கிடப்பாள், பாவம்! ஆசைக்கும் ஆஸ்திக்குமாக, ஒரேயொரு கறிவேப்பிலைக் கொழுந்து. விதியின் பிழை அது!—மற்றபடி, அப்பன்காரனை பிழை சொல்ல இயலாது. இருபது குழி சோளப் புஞ்சைத் தாக்கு; வானம் பார்த்த மண்ணில் வானத்தையே பார்த்துத் தவம் இருந்த கேணி; இரண்டு பசு; நாலு ஆட்டுக்குட்டி· கொஞ்சத்துக்குக் கொஞ்சம் ஏதோ சேர்த்து வைத்துவிட்டுத் தான் கண்களை மூடிக்கொண்டான். ஓ, அமாவாசைக் கெடு வேறு?—ம்...கஞ்சிப் பொழுதுக்கு உப்புக்கல் தூவிக் கஞ்சி குடித்தவள். பசிக்கும்; தாராளமாகவே பசி எடுக்கும். கன்னிப் பசி ஆயிற்றே! பயணப்பட வேண்டியதுதான். போகும் வழியில் ஆயி பத்திரகாளியைக் கண்டு தண்டி, ஒரு கூழைக் கும்பிடு போட்டுவிடவேண்டும்! 'ஊருக்கு மூத்த வளைத் தரிசிச்சு உண்டன நாள் ஆச்சுதே!'—பக்தியில் பாசம் மனிதாபிமானத்துடன் உருகியது. கன்னிக்குக் கன்னி இரங்க வேண்டாமா?

ஒரு பட்சி எங்கிருந்து ஏனோ கரைகிறது!

அவளுக்கு — பவளத்துக்கு என்னவோ ஒரு பயம் நெஞ் சைத் துளைத்தெடுக்கத் தலைப்பட்டது. 'காப்புக் கடந்த ஆத்தா காப்பாக இருக்கையிலே, நான் என்னத்துக்கு அச்சப் படோணுமாம்?'

என்ன அரவம் அது?

கால்களின் சதங்கை ஒலியா?

" ஏலே, பொண்டுகளா ? ஓ, செவ்வந்திக்குட்டி ! ஏட்டி, பூரணியோ !...அடியே, கருப்பாயி !...

கூட்டுக்காரி ஒருத்தியையுமே காணோமே ? கண்கட்டு மாயமாய் அந்திக் கட்டிலே எங்கே தொலைந்தார்களாம் ?... ஒரு வேளை, ஈசான்ய முடுக்கில் இருந்த பத்திரகாளி கோயில் கம்மாயில் விழுந்து புரண்டு கொண்டிருப்பார்களோ ? விடி சாமத்திலே அபூர்வமான அதிசயமாக வானம் கண் திறந்த தன் விளைவாக, வயல் வரப்புக்களைச் செய் நேர்த்தி பண்ணி நிலக்கடலை விதைக்க பூர்வாங்க ஏற்பாடுகள் செய்வதில் முனைந்திருந்த அந்த பெண்களுக்கு ஈரம் தேவைப்பட்டாலும் தேவைப்பட்டிருக்கலாம்.

இனியும் இந்தப் பொட்டல் காட்டிலே தனியே நிற்கக் கூடாது.

சவுக்குத் தோப்பிலிருந்து 'ஞொய் — ஞொய்' என்ற அரவம், அரவம் சீறுவது மாதிரி கேட்டது.

அந்த இடுக்கில் பத்திரகாளி கோயிலின் கோபுரக் கலசம் துலாம்பரமாகவே தெரிந்தது.

பவளத்துக்கும் உடம்பு அரித்துப் பிடுங்கியது. முதுகுப் புறத்து ரவிக்கையை நீம்பிவிட்டவளாகச் சொரிந்து கொள்ளலானாள். மாங்குடிச்சேரி எல்லையில் இருந்த சாம் பான் தாக்குப் புஞ்சைக்காட்டில் ஆயி சகிதம் இவளும் மண்ணே கதி என்றிருந்தவள் தான் ! இனிமேல் பயம் இல்லை. பஞ்சம் பஞ்சாய்ப் பறந்துவிடும் ! ஆடிப்பட்டம் பலன் காட்டிவிடும் !....ஆமாம் ; வானம், ஒரு முறை கண் திறந்து விட்டால், அப்புறம் கொட்டாமல் நிற்காதாம் !— சீதைப் பாட்டி சொல்லமாட்டாளா ?—' குளிக்கலாமா ? ஊங்கூம், ஏலாது ; கூடாது ! மல்லுக்கட்டி எப்படியாச்சும் சவுக்கைக் கட்டைத் தூக்கித் தலை மேலே வச்சுக்கிட்டு நடந்து போய், பத்ரகாளிக்கு ஒரு கும்பிடு போட்டுப் புட்டு, மேற்காலே மறுகி நடந்து, ஆவணத்தாங்கோட்டைச் சாலை எல்லையை மிதிச்சிட்டா, அப்பாலே, இருட்டும் ஒண்ணும்

செஞ்சிடாது ; பின்னே, எதுவும் எதையும் செய்ய வாய்க்காது !' மண்ணின் ஈரம் கண்களில் கசிகிறது.

வேடிக்கைதான் !

மப்புக் கலையத் தொடங்குகிறது ; மஞ்சள் கதிர்கள் பொன் முலாம் பூண்டு, பொன் மூலம் கொண்டு சுவடுகாட்டிக் கண்ணாமூச்சி காட்டிக்கொண்டிருக்கின்றன போலும் !

'பத்தை'ச் செடிப்பக்கம் அரவம் கேட்டது யாரையுமே காணவில்லையே !....

இப்போது பவளத்திற்கு ஒரு புதுத் தெம்பு. பழைய நெஞ்சுரத்திற்கு புதிய பலம் கூடியது ; கை கூடியது. 'ஆத்தாடியோ !'—மூச்சைப் பிடித்துக் கொண்டே, சவுக்குக் கட்டை லாந்தித் தூக்கி தலைச் சும்மாட்டில் பொருத்தி வைத்துக்கொண்டே, இடதுகால் பெருவிரலால் வாங்கரி வாள் கம்பை வாகுகணித்து எடுத்து வலது கைப் பிடிப்பில் ஏந்தியவாறு நடக்கத் தொடங்கினாள். பவளக்கொடி—! அழகுச் சிலையாக—மோஹினிச் சிலையாக !...உள்பாவாடை இப்போது கால்களில் பின்னவில்லை !

தொடரும் விதி. விதிக்கு மட்டும்தான் என்றில்லை ; நிழலுக்கும் அவ் விதி உண்டோ ?

அந்திக் கன்னியின் கண் பொத்தி ஆட்டம் தொடர்கிறது ; தொடர்ந்துகொண்டிருக்கிறது. நல்லவேளை, மப்பு போட்டு வைக்கவில்லை. ஆடி மேகத்தின் மனத்தை யாரால் படிக்கக்கூடும் ?—சித்தம் போக்கு, சிவன் போக்கு !

பவளம் நடக்கிறாள் ; நடந்துகொண்டே யிருக்கிறாள் !—தலை மட்டிலும் சுமக்கவில்லை ; நெஞ்சுந்தான் ! மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பது போன்ற வேதனை ; பயம் ; தவிப்பு ; தன்மை. சுள்ளி பொறுக்க கூடமாட வந்த தோழிமார்களைக் காணவில்லை. குளித்துக்கொண்டிருந்தாலும் இந்நேரமா குளிப்பது ?சே!...அச்சம் இல்லாத பெண்டு

கள் ஒரு வேளை, எதையாவது காற்றுக் கருப்பைக் கண்டு பயந்து பறந்திருப்பார்களோ? ஒன்றும் மட்டுப்படவில்லை; விளைவு, பயம் கூடியதுதான் மிச்சம். எப்படியாவது காலா காலத்தில் வீட்டு வாசலை நல்லபடியாகவும் நல்லதனமாகவும் பத்திரமாகவும் பண்பும் பதவிசாகவும் மிதித்தால்தான் நல்ல உயிர் வரும்; நல்ல மூச்சும் திரும்பும். இந்நேரம் ஆத்தாக்காரி வயற்காட்டிலிருந்து மீண்டிருப்பாள். பாவம், இந்தக் கெட்டவளோட மேனிக்கு ஒத்துக்கொள்வதில்லை. இருமல் விட்டால்தானே? வயசும் ஆகிவிட்டது. அத்தோடு, சோறும் ஆக்கி வைத்துக்கொண்டு, திட்டி வாசல் வேப்பந் தூரடியில் காத்துத் தவம் இருப்பாள்!' 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு நீ! ஒனக்கு அக்கம்பக்கம் மெச்சரும்பிலே கண்ணுலம் காட்சியை மோக்ளாவாகச் செஞ்சு முடிச்சிட்டால் தான் எங்களுக்குப் பெருமை. உன்னோட நேசமச்சான் கிட்டே ஊரறிய, உலகம் அறிய, ஆத்தா மூத்தவ பத்ரகாளி அறிய நீ ஒண்டிக்கிட்டால்தான் ஒனக்குப் பெருமிதம்!' பூநாகமெனச் சீறியது நெட்டுயிர்ப்பு. பார்பகம் எம்பி எம்பித் தாழ்ந்து கொண்டிருந்தது. காட்டு வழியில் வண்ணத்துப் பூச்சி விதிக்குப் பயப்படாத பாவனையில் சிறகடித்துச் சுயேச்சையாகப் பறக்குமே, அப்படி!

ஒன்றிரண்டு காக்கைகள் மாத்திரமே இப்போது கூடு நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றன.

இன்னமும் பொழுது இருக்கிறது பலே!...

பத்திரகாளியின் ஆலயம் இதோ வந்துவிட்டது.

சாலப் பரிந்து, பாசம் சொரியும் அன்புத்தாயை எண்ணிய மாத்திரத்திலே நெஞ்சில் பீறிடும் பாச வெள்ளத்தில் பொட்டுப் பொழுது மெய்ப் பறக்கவும் பவனக்கொடிக்கு முடிந்தது. 'ஊராண்டு உலகாளும் பத்ரகாளி ஆத்தாளை ஒரு நடை கும்பிட்டுப்புட்டு, சுருக்கென திரும்பிடணும். ஆத்தா துணைக்குக் காவல் இருக்கையிலே, நான் எதுக்குப் பயப்படவேணும்?......அல்லாத்துக்கும் ஆத்தா ஒருத்தி

தானே சதம் !' ஒருவாட்டிக்குப் புகையிலைக் காம்பைக் கிள்ளி 'கொடும்பில்' அடக்கிக் கொண்டால் சுள்ளாப்பு வரும் ; உணக்கையாகவும் இருக்கும்.

'பட்'டென்று ஓர் அரவம் !—அரவம்—சத்தம் !

தலைச்சுமைக் கட்டு வீழ்ந்தது ; விழுந்தது, வாங்கரிவயளும் தானே ?

சுங்கடியின் முந்தானைத் தொங்கலில் இரண்டு முடிச்சுப் பாய்ச்சி முடிந்திருந்த புகையிலைக் காம்பை அவிழ்த்து விசையோடு கிள்ளுவதற்குள், நாக்கு ஊறவும், பழக்கவழக்கத்தின் வெறிக் கிறக்கம் விஞ்சி மிஞ்சவும், அவள் காம்பைக்கிள்ளி மொத்தமான பகுதியைக் கடைவாய்க்குள் திணித்துக் கொண்டாள். பனங்குளம் மச்சான் சொல்லிக்கொடுத்த பழக்கம் அல்லவா ? ஓர் உரிமையோடும் உரிமையின் உறவோடும் உறவின் ஒட்டுதலோடும் அவள் புகையிலையைச் சுவைத்துக்கொண்டிருக்கையில், என்னவெல்லாமோ இன்ப நினைவுகள் இன்ப வேதனைக்கு ஒரு வார்ப்படமாகப் படம் விரித்தும் படம் எடுத்தும் விளையாடத் தொடங்கின ; விளையாட்டுக் காட்டவும் தொடங்கியிருக்கலாம். முறை மச்சானை பனங்குளம் பழனியை முறையாக நேசித்துப் பழகிய அந்தப் பண்பாடும், பண்பாட்டுடன் ஒற்றைத் தடத்தில் அவனும் அவளும் அந்யோன்யமான பாசத்தோடும் பரிவோடும் அன்போடும் ஆசையோடும் பழகி, தங்கள் நேசத்தை ஊரறிந்திடப் பிரகடனப்படுத்திய நேர்மையும், நேர்மையின் பரிசிலாகப் பரிசம்போட்டு, ஆவணிக் கெடுவில் இருவரும் ஆசை மச்சானும் நேசக் கண்ணாட்டியுமாக உருக்கொண்டு உரு மாறப் போகின்ற சுபவேளைக்குக் கிட்டிய அங்கீகாரமும் இப்போதும் அவள் நெஞ்சக் கிழியில் நிழலாடத் தவறிவிடவில்லைதான் ! புனையா ஓவியம் பெருமூச்செறிகிறது. ஓர் ஏக்கம் ; இனம் புரியாத ஒரு தவிப்பு.

எங்கேயோ நரி ஊளையிடுகிறது. அதற்கு இதைப் பார்க்கிலும் வேறு வேலை என்னவாம் ?

கம்மாய் கரையில் தோழிமார்கள் இல்லை !—பவளத்துக்குச் சுருக்கென்றது. இனி, கண்கொட்டும்பொழுது கூட இந்தக் காட்டு மெளியில்—வழியில் கால்தரிக்கக்கூடாது!—மூச் !

ஆத்தாளைச் சேவிக்க வேண்டும் !

பவளம், அந்தப் பத்திரகாளி கோயிலுக்குள் அடியெடுத்து வைக்கின்றாள். புகையிலை எச்சிலைக் காறித் துப்பிவிட்டு, வாய் கொப்புளித்து வர வேண்டுமென்று தான் நினைத்திருந்தாள் ; மறந்தாள். இனி போய் மீளமுடியாது ; நேரமில்லை !

" ஆத்தா !" என்று பக்தியின் உணர்ச்சிகள் பொங்கிக் குமுறிக் கொந்தளிக்க வாய்விட்டு விளித்தவளாக உட்பிரகாரத்தில் வந்து நின்றாள். ஓர்ஈ, காகம் இல்லை ; வௌவால் பண்ணைகளைக் கூடக் காணோம். மேலக் குடியிருப்பின் புதிய பணக்காரரான கண்டிக் கங்காணி சிவலிங்கத் தேவர் இந்த வியாழச் சந்தைக் கெடுவிலே ஆத்தா பயங்கரிக்குப் பட்டுப் பாவாடை சாத்தி, சந்தன அபிஷேகம் செய்து, பள்ளயம் படைத்துக் கும்பிட்டு, நேந்துதல்—வேண்டுதல் செலுத்திய சங்கதியைஎண்ணிக்கொண்டிருக்கையில், உள்ளே என்னவோ அரவம் கேட்கவே, அரவம் கண்ட பாவனையில் தட்டித் தடுமாறியவாறு, பார்வையை உள்வசமாக நெட்டித் தள்ளினாள்.

வெளிச்சம் விதியாக விளையாட வேண்டிய கருவறையிலே, இருட்டு விதியாக விளையாட, ஓர் உருவம்...என்னவோ ஓர் உருவம் விதியின் சூட்சுமம் மாதிரியாகக் கண்டும் காணுமலும் தெரிகிறதே...

தூண்டாமணி விளக்கு எங்கே? பூசாரி உச்சிப்பூசை வைத்து விட்டு எப்போதோ காடுமாறி ஓடியிருப்பார் !

பின், என்ன சத்தம் அது ? ...

பவளம் ஒரு எட்டு எடுத்து வைத்தாள். இருளின் தவிப்பு ; தகிப்பும் கூடத்தான் !

'பத்ரகாளி ஆத்தாளே !......ஊருக்கு மூத்தவளே ' ஒலகத்துக்கு ஒசந்தவளே ! உத்தமியே, பயங்கரியே !...நீ ஒண்டிதான் எனக்குச் சதமும் சகலமும் ; பவளம் குணம் ஒனக்குத் தெரியாதாங்காட்டி ? மறுகா என்னவாம் ? நான் ஒன்னோட கால் தூசுக்குக் கூட சமட்டி ஆக ஏலாது. ஆனாலும், நான் ஒனக்குக் குஞ்சு ஆச்சே ? தாய்க்கும் மகளுக்கும் உள்ள பாசத்தோட அர்த்தத்தையே ஊருக்கும் ஒலகத்துக்கும் சதா படிப்பிச்சுக்கினு இருக்கிற சாட்சிக் கல் ஆச்சே, ஈசுவரியே ! ஆனாலும், உன்னோட கல்லிலே இருக்கிற ஜீவன் எனக்குத் தெரியும் ! ஆமா, ஆத்தா, ஆமா !' கண்கள் பொடிக்க கருவறை நோக்கி புதிய வல்லமை கனிந்திட நடந்தான் கொடி. அவள், பத்திரகாளியா ? ஊஹூம் ! பவளம் !—பவளக்கொடி !—கொடிப் பவளம் ! கொண்டைப் பூக்கள் காலடிச் சுவட்டில் அமிழ்ந்தன. "யாரது ?" என்று ஓங்காரக் குரலெடுத்து, உச்சாடனக் குரல் கூட்டி விதியென வினவினுள். அவள் கன்னிப் பூ ! பூவின் மணமென பவளக் கொடி பத்ரகாளி சந்நிதி முன்னே வந்தவள், தடுமாறித் தயங்கி நின்றுள். ஒரு கணம் ; ஒரே கணம் !

" யாரது, கேட்கிறது ?—"

மௌனத்தைச் சுட்டெரித்தவாறு பத்ரகாளியின் முகத்தைத் தடுத்து நின்ற அந்த உருவம் எதிர்க் கேள்வி கேட்டது.

அந்த உருவம் யாருடையதாம் ?

பவளத்துக்குத் தீ சுட்ட மாதிரி இருந்தது ; தீயாகச் சிரித்தாள். " நான் ஆத்தாளுக்குக் குஞ்சு...கேட்கிறேன், நீங் நீ யாராம் ? ஆத்தாகிட்டே என்னு செய்யிறே நீ ! ", இன்னமும் அவளால் அவ்வுருவத்தை இனம் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனல், ஆண்மை வடிந்த ஆத்திரத் தொனியில் பிசிறு மட்டும் அவளுள் ஒலித்துக்கொண்டிருக்கிறது. யார் அந்த அயோக்கியன் ? பெண்மையின் கடன் உணர்வு சீற்றம் கொண்டது. பற்களை 'நறநற' வென்றுகடித்தவளாக, பதட்டத்துடன் உள்ளே நடந்தாள். புண்ணிய பூமியின்

பயங்கர மோனத்தை முட்டித் தள்ளியபடி, இருட்டின் ஒளியாகப் பாய்ந்தாள் உள்ளே. "அடப்பாவி !" என்று ஓங்காரமாக வீரிடலானாள் பவளம். 'ஐயையோ ! .. உன்னுடை பாளத்த பாவக் கையினாலே தொட்டு அம்மன் பாவாடையையா அவிழ்த்துக்கிட்டு இருக்கே ? மழை தண்ணி இல்லாம, இம்மாம் நாளும் நாமெல்லாம் நித்த நித்தம் செத்துச் செத்துப் பிழைச்ச இருசாமப் பொழுதுகளை மறந்துப் புட்டியா நீ ? ஆத்தா மூத்தவ மனசு இரங்கி, நமக்குத் தண்ணி காட்டின அருமைக்கு நன்னி கூட ஒனக்கு இல்லியா, பாவி மகனே ? சீ ! எடுடாவே உம்பிட்டுப் பாழாய்ப்போன கையை ! டேய் ! கையை இப்ப எடுக்கப் போறியா ? இல்லே, உங் கையைப் பிடுங்கிக் கடிச்சுக் குதறிக் காறித் துப்பிப் போடவா ?" என்று ஆத்திரமும் ஆவேசமும் பொங்கிக் கொந்தளிக்க அலறினாள் அவள். அவள் காளியா ?—பவளம் !

ஆனால்...

அந்தப் பாவி கையை எடுத்தால்தானே ? மேற்கொண்டு சிரித்தான் ; பலமாகவும் பலவந்தமாகவும் தன்னுடைய பாவத்தின் விதியைச் சிரிப்பாக்கிச் சிரித்தான் ; "விடிசாமத்திலே கண்ணு மண்ணு புரியாமல் அத்திபூத்ததாட்டம் அடிச்சுப் பேஞ்ச மழையிலே, ஆடு மேய்ச்சிகிணு இருந்த எம்புட்டுத் தாயில்லாப் பொண்ணு செவகி நனைஞ்சுக்கிட்டே குடிசைக்குத் திரும்பிச்சு ; முட்ட நனைஞ்சி போயிட்ட ஈரப் பாவாடைக்கு—ஆயிரம் கிழிசல் கொண்ட அந்த ஈரப் பாவாடைக்கு மாற்றுப் பாவாடை இல்லே எங்குச்சிலே ! கடோசீலே, என்னோட ஒரேயொரு ம்ழிசல் கந்தல் வேட்டித் துணியைக் கொடுத்து, மக மேனியை மூடிக்கிடச் சொல்லி அழுதேன் ; ஆஸ்திக்கு இல்லாட்டியும் என்னோட ஆசைக்கு அருமையான கருவேப்பிலைக்கொழுந்து கணக்கிலேயுள்ள என் அருமை மகள் மானமே அங்கிட்டு காற்றிலே பறந்துகிட்டு இருக்கையிலே, இந்த வெறும் கல்லோட மானம் போனால் என்னவாம் ? குடியா முழுகிப் பூடும் ? கல்லுக்கு மானம் ஒரு கேடா ? எம் மகள் ஒரு பொட்டையாச்சே ? எம்புட்டுத் தங்கத்துக்கு அவசியமா—அவசரமா இப்ப இந்தத்

பாவாடை வேணும்!...ஆமா...'' விதியை வெட்டி வீழ்த்தும் அகங்காரச் சிரிப்புடன் கோவண ஆண்டியென இருட்டோடு இருட்டாக குமைந்து நின்ற அவன் அம்மன் பாவாடையை உரிவதில் ஈடுபடலானுன் !

அவ்வளவுதான் !...

" அட, பாவி !''

அந்தப் பாவியின் கரங்களை 'வெடுக்'கென்று உடும்பாகப் பற்றி 'லபக்'கென்று கடித்துக்குதறிவிட்டாள் அவள். அவள் பத்ரகாளியா, என்ன ; அவள் பவளம் ! வீரிட்டுப் பீறிட்ட ரத்தத்தின் துளிகள் சிந்திச் சிதறித் தெளித்த அம்மன் பட்டுப் பாவாடையைப் பிடுங்கிப் பறித்து, அம்மனுக்கு மீண்டும் உடுத்தி விட முனைந்தாள் ; " ஆத்தா மூத்தவளே! நாங்க ஒன்னுேட குஞ்சுங்க ; வெறும் குஞ்சுங்க. ஆனு, நீ வெறும் கல் இல்லே ! ஆனதாலே எங்களைச் சமிச்சு எங் களுக்கு 'மாப்பு'க் கொடு. தாயே !...இந்த மிருகம் தன் பிறவிக் கடனை மறந்து, அத்தோட தன் விதியையும் மறந்து, இப்ப பாவி ஆகிப்புட்டான் ! இவன் ஆத்திரத்திலே தப்புப் பண்ணிப் போட்ட தொப்ப நீ வெறும் கல் இல்லே என்கிற தெளிஞ்ச புத்தியை இவனுக்கு உண்டாக்கிக் கொடு, பத்ர காளி !—'' ரத்தத்தைக் கண்ணீராக்கி விம்மிக்கொண்டே தேடிப் பிடித்த தீக்குச்சியைக் கொளுத்திஞள் ; நடுங்கிய கைகளால் பாவாடையை உடுத்து முடித்தாள். " ஆத்தா !'' என்று நெஞ்சு வெடிக்க ஓலமிட்டவளாக நெடுஞ்சாண் கிடையாகத் தாயின் பாதங்களில் சரணடைந்தாள்.

தூண்டாமணி விளக்கின் ஒளியிலே — பத்ரகாளி !— சிரிக்கிருளா ?—கன்னத்தில் சிவப்புப் புள்ளியா ?

இப்போதுதான் அவள் சுயப்பிரக்ஞை கொண்டிருக்க வேண்டும் !

ஆனுல்—அவன் பேயடித்த மாதிரி இரண்டாம் சிலையாக அப்படியே நின்று விட்டான் இன்னமும் !

பவளம் நெருங்கினாள்; வழிந்த ரத்தக் கண்ணீருக்கு வடிகால் கட்ட இதுவா வேளை? இடுப்பில் செருகியிருந்த சுங்கடி முந்தானையை அவிழ்த்துவிட்டாள்; நடுங்கும் கன்னி மேனியைக் கட்டிக்காத்து நின்ற சுங்கடியை மெல்லமெல்ல —மெள்ள மெள்ள அவிழ்த்தாள். 'ஆத்தா!...' ஒட்டிஒட்டி நடந்தாள். "அண்ணாச்சியே! ஒங்க ஆசைகளுக்கு மானத்தைக் கட்டிக் காக்க ஒரு சேலைத் துணிதானே வேணும்? இந்தாங்க, எடுத்துக்கிடுங்க!—" சுங்கடியை வீசினாள் அவள். அரவம் கண்டவளாகக் குலைநடுங்க, அங்கிருந்து பாயத் தலைப்பட்டாள்—விதியாக...வினையாக...'

அப்போது—" எ, குட்டி!......அப்படியே அங்கணையே நில்லு!"

அந்தப் பாவியின் பயங்கர முகம் ஏன் அப்படி விகாரமடைந்து கொண்டிருக்கிறது?

தீயைத் தீண்டியவளாகத் துடித்து நின்றாள். கன்னிப் பவளம்!...அவள் அவனை விழுங்கிவிடப் போகிறாளா, என்ன! விதியின் நாயகியா?

"ஈட்டி! எனக்கு உம்பிட்டுச் சேலை என்னாத்துக்கும்மா? எனக்கு இப்ப நீதான் வேணுமாக்கும்!" வெறி மூளை தீர்ப்புப் படித்தான் அவன்.

"ஐயையோ பாழும் தெய்வமே!" மண்முட்டி விண்முட்ட, விண்முட்டி மண்முட்ட அலறினாள் பவளக்கொடி. மறு இமைப்பில், நேர்வசமாக தமிழச்சியாகப் பாய்ந்தாள். "அட பழிகாரப் பாவியே! நீ ஒன்னோட ஒக்கப் பொறந்த தங்கச்சியைத்தான் பெண்டாளுவியா? சீ!" — காறிக்காறி எச்சிலைத் துப்பினாள்—அவன் முகத்திலே! அப்பால் முன் அறை பின் அறையாக அவனுடைய கன்னங்களிலே சாத்துபடி' நடத்தினாள்!

அந்தப் பாவி 'ரோசம்' செத்துக் கல்லாகி விட்டானா? 'ஈனம்' இழந்து இறுகிப் போய் விட்டானா?...

"ஆத்தா!"

கன்னிப் பவளம். கன்னித் தெய்வத்தைப் போன்று கல்லாகி விடவில்லை. சுயப் பிரக்ஞையுடன் கண்களை வழித்து விட எத்தனம் செய்திட்ட அந்த வேளையிலே—

பூ நாகமொன்று 'அவன்' காலடியில்—அந்தப் பாவியின் காலடியில் பூவின் நெடியாக மலர்ந்து நெளிந்துகொண் டிருந்தது.

"ஆத்தாளே! மூத்தவளே!"

அவள் அந்தப் பூநாகத்தை மூர்த்தன்மையானபெண்மை யின் வீரச் சாகசத்துடன் காலால் எற்றிவிட்டாள்!

அந்தப் பாவியின் ஊனக் கண்களில் இப்பொழுதுதான் அந்தப் பூநாகம் தரிசனம் தந்திருக்க வேண்டும்! மறுநொடி யில், "ஆத்தாளே' — தங்கச்சியே!" என்று அலறியவனாக அவளது கஞ்சமலர்ப் பாதங்களிலே நெடுஞ்சாண் கிடை யாகச் சரண் அடைந்தான்!—கண்ணீர் வெள்ளம் பூம்புனல் வெள்ளமென ஓடியது!—ஓடக்காண்பது பூம்புனல்தானோ?...

கணங்கள் பேய்க்கணங்களாக நெளிகின்றன; ஊர் கின்றன; நடைபயிலவும் செய்கின்றன!

அவள் தண்ணளியின் விளிம்பில் தன்னுணர்வை மீட்டுக் கொண்டாள்: கல் நிலையினின்றும் மீண்டாள்; இனி அவள் கல் இல்லை!—தெய்வம் கல்லாகவே இருந்துவிட்டுப் போகட் டும். ஆனால் அவள் கல் அல்லள்!—"அண்ணச்சி!" என்று சாலப் பரிந்து, அளப்பரிய பாசம் மீதூர விளித்து, அவனை —அந்தப் 'பாவி'யை வாரி எடுத்தாள்! கண்கள் பொடித்தன.

அவன் கூப்பிய கைகளுடன் அப்படியே நின்றான். "தங்கச்சி! எந் தங்கச்சியோ! தம்பூட்டுத் தெய்வமே!"

எங்கிருந்து அந்தச் சாக்குருவி அப்படிச் சோகம் பரப்பிக் கொண்டிருக்கிறது?

அடுத்த மின் வெட்டுப் பொழுதிலே—அவள்— பவளக் கொடி அவனுடைய முகத்தை நேருக்கு நேர் பார்த்தாள் ; ஊடுருவிப் பார்த்தாள் ; உருக்கமாகப் பார்த்தாள் ; உருக்க மாகப் பார்த்தாள் ; "அண்ணாச்சிதானே நீங்க எனக்கு ?" என்ற கேள்வியை விதியாகத் தொடுத்தாள் ; வினையாக விடுத்தாள் !

"அட்டியில்லே ; தங்கச்சி !"

"அப்படீன்னா என்னை நீங்க இப்ப நன்னியோட நம்புறீக ?"

"சத்தியமா ! ஆத்தா சத்தியமா நம்புகிறேன் !"

"அப்பன்னா, ஆத்தாளையும் நீங்க நம்ப ஆரம்பிச்சிட்டீங் களாக்கும் !"

"பின்னே ?"

"ஆத்தா கல்லாச்சுங்களா, அண்ணாச்சியோ ?"

"இல்லே ; ஆத்தா கல் இல்ல. நான்தான் அதுமட்டுக் கும் வெறும் செம்புறாங் கல்லா இருந்துப்பூட்டேன் !"

"சபாசு !" என்று சிரித்தாள் பவளம் !... மறுகணம், அவனுடைய குரல்வளையைக் கண் மூடிக் கண் திறப்பதற்குள் ஒரே மூச்சிலே நெறித்துவிட்டாள் !—அந்தச் செக்கச் சிவந்த ரத்தத்துளிகள் அவளுடைய கன்னிப் பவள உதடுகளில் எத்துணை அழகாகத் 'தரிசனம்' தருகின்றன !—இம்மாங் கொத்த ஈரம் இல்லாத — மானம் இல்லாத — ரோசம் இல்லாத சமுதாயப் பாவியான என்னோட அண்ணாச்சியை இப்பத்தான் இத்தி இத்தியாய்த் திருத்திக்கிட்டு வருகிற இந்தத் தமிழ் சமுதாயத்திலே இனிமேலும் 'மாப்பு' கொடுத்து ஊடாட விட்டால், அப்பாலே, புத்துயிர் பெறப் பழகிக்கிட்டு வருற நாயமும் நாணயமும் சத்தியமும் தரும மும் திரும்பவும் உருமாறி உருக்குலைஞ்சு போயிடாதாங்

காட்டி...அதாலேதான், அந்தப் புண்ணியத்தை பூநாகத்தைத் தோற்கடிச்சுப்பூட்டு நானே கட்டிக்கிட்டேன் !... ஆமாடி, ஆத்தாளே !'—சிரித்தாள் பவளக்கொடி.

அவளுக்கென்று இப்படி ஒரு அந்தச் சிரிப்பா, என்ன : அவள் பவளக்கொடிதானு ? கன்னிப் பவளமேதானு அவள் ? ...மீண்டும் சிரித்தாள் ! மறுபடியும் சிரித்தாள் ! அப்பால்—

அவள் ஓடினுள் ; காலில் சிக்கிய சுங்கடியைச் சிக்கறுத்து விட்டு ஓடினுள் ! எங்கேயோ ஓடுகிறுள் ! ஏனே ஓடுகிறுள் !

அதோ, விரித்த தலையுடன், சிரித்த ரத்த உதடுகளுடன், சிரிக்காத செந்தழல் கண்களுடன் விதியின் நாயகியாக—தர்மத்தின் தேவதையாக — சத்தியத்தின் திருமகளாக ஓடுகிறுள்...ஓடிக் கொண்டே இருக்கிறுள் ! ..

பத்ரகாளி சிரிக்கிறுள் !''

—o—

## ● ● ● போதையின் போதம் !

நீப்ளெய்க்ஸ் முடுக்கிலிருந்து விடைபெற்று, நேராக காரைக்கால் அம்மையைத் தரிசனம் செய்துகொண்டு, மாதா கோயில் வீதியில் அந்த அழகிய கார் மடங்கி ஒரு பெரிய ஹோட்டலின் வாசலில் நின்றபோது கையெழுத்து மறைந்து விட்டது !

தலையெழுத்திற்கு வாய்க்கப்பெற்ற ஒரு சவால் போல் அக்கட்டடம் தலைநிமிர்ந்து கம்பீரமாக நின்றது. தலையை நெஞ்சு மேடு நோக்கிக் குனிந்துகொண்டு, "ம்...இறங்கு .. டியர் !" என்று ஆர்வம் குழைத்துச் சொல்லிவிட்டு, அந்த 'டியரை'யே இமை பூக்க ஓரக்கண் பதித்துப் பார்த்தான் அவன். அவளோ மானாக ஒயில் கூட்டி, மயிலாக எழில் விரித்து மெல்ல இறங்கி, மெள்ள நடை பயின்று வந்து அவனுடைய ஸில்க் ஷர்ட்டை ஒட்டி உரசியவளாக ஒதுங்கினாள்.

இருவரும் நேருக்கு நேர் பார்த்தவாறு, எதிரிலிருந்த கட்டிடத்தை நோக்கினர்.

அது ஒரு 'பார் !'...

பாரில் விளையாடிய அசதியுடன் இருவர் மாடியிறங்கி வந்தார்கள். மதி மயக்கம், தடுமாற்றம், உணர்வுக்கிறக்கம் போன்றவற்றிற்கு அங்கு எட்டு மணி நேரம் வேலை என்றால், கட்டுபடி ஆகுமா ? ..ஆகாது, ஆகாது !...

" போகலாமா ?"

" ம் !"

" ஜாடை கேட்ட வினவும், ஜாடை தெரிந்துகொண்ட பதிலும் அவர்களுக்கு முகமன் கூறின. நடந்தார்கள் இவர்கள்.

இவர்களுடன் 'ஈவினிங் இன் பாரிஸ்' நெடியும் உடன் நடந்தது.

அதியற்புதமான மாடி அது. வரவேற்பு அறை வந்தது. வரவேற்பு அறை என்றால், யாரும் ஓடிவந்து வரவேற்க மாட்டார்களோ ? போகட்டும் ; அந்த இடத்திலே, முறை அப்படி இப்படி என்றெல்லாம் பேச்சு மூச்சு காட்டலாமா? —கூடாது !

மேகநாதன் முன்னும் தாரா பின்னுமாக நின்றார்கள். 'பின்'னை சரி செய்தவளாக, ஷீபான் பட்டையும் செம்மைப் படுத்திக்கொண்டாள். அவன் பார்த்தபோது, தங்கக் கழுத்தில் சல்லாபம் பூண்டு தவழ்ந்து கிடந்த அந்தத் தங்கத் தாலி வெகு நாகரிகமாகக் காட்சியளித்தது. அவனுக்கு முறுவலை கள்ளத்தனமாகப் பரிவர்த்தனை செய்து கொள்வதிலே ஒரு நாட்டம் ; ஒரு வகை மயக்கம்.

வரவேற்பறையில் ஒருவர் வெகு மிடுக்கான பாவனையுடன், துல்லியமான கம்பீரத்துடன் அமர்ந்திருந்தார். அவர்தான் முதலாளியாக இருக்க வேண்டும். இருந்துவிட்டுப் போகட்டுமே !...

ஆஹா !.. வண்ணம் சுடர்தெறித்த அவ்விளம்பரங்களுக்கு ஏற்றம் ஊட்ட வென்றுதான் ஊட்டம் கொழுந்து

விட்டெரிந்த அந்த மேலை நாட்டுக்கன்னியர்கள் அவ்வாறு கோலம் பரப்பி நின்றார்களோ ? "ரூம் வேணும், ஸார் !"

ஆறு அங்குலம் சுருட்டு ஒன்று அனாயாசமாகப் பற்றி எரிந்தது. மேகநாதன் அவரைப் பார்த்துவிட்டு மீண்டும் கனைத்தான்.

"அதற்கென்ன ?"...

பதில் மொழிந்த அவர், மேகநாதனையும் தாராவையும் ஒரு பயணம் நிமிர்ந்து பார்த்தார். புகைச்சுருள்கள் ஒதுங்கின. வலது கை, மூக்குக் கண்ணாடியைச் சற்றே விலக்கியது. அந்தக் கைக்கென்று ஸ்பெஷலாகச் செய்த தங்க வடமோ அது ?...

"டபிள்ஸ் ரூம் ஸார் !"

மேகநாதனுக்கென்று ஓர் அவசரமோ, ஆதங்கமோ !— தோல் பைக்குச் சுறுசுறுப்பு மிகுதிதான் !

உரிமையாளர், பார்வையை இழுத்துக்கொண்டார்; அமைதியுடன், "எஸ்...எஸ்...!" என்று சொன்னார். அமரும்படி வேண்டினார் ; தொழில் முறைச் சாதுர்யம். "ஜஸ்ட் எ மினிட்...ப்ளீஸ் !" என்று நயந்தார்.

தாராவும் மேகநாதனும் எதிரும் புதிருமாக நின்று நகை இழைக்கலாயினர்.

அழைக்கும் மணி அழைத்தது. பையன் என்ற பெயருடன் கிழவர் ஒருவர் வந்தார்.

மதுபானக் கூடத்தின் முதலாளி வேலையாளிடம் குறிப்புக்கள் சொன்னார். வாடிக்கைக்காரர்கள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

'பிஸினஸ்' அபாரம்தான் !

"அத்தான் !..."

"ம் !...என்ன தாரா ? ..?"

" அத்தான் ! நம்ம ட்ரைவர் விடிகாலம்பரவே வந்திடுவா னில்ல !..." கனகாம்பரக்கொத்து வெகு அழகு ! .

"ஓ !..."

" அங்கே நம்ம பங்களாவிலே தூங்கிற ஞாபகத்திலே அசந்திடப் போருன் !"

" கண்டிச்சிருக்கேன் ... நீ கவலைப்படாதே ! பேபியை நாளைக்காலம்பற எட்டு மணிக்கெல்லாம் நீ பார்த்திடலாம் ; ஆமா !" உள்ளே கண்ணுடி பீரோவை எட்டிப் பார்த்தான் அவன்.

" சரிங்க !...வந்து..."

" என்ன...?"

" அத்தான், மாம்பலத்துக்கு நம்ம பங்களாவுக்கு ட்ரங் கால் போட்டு நம்ம பேபியோட அழுகையையோ அல்லது பொக்கை வாய்ச் சிரிப்பையோ ஒருவாட்டி கேட்கணும் போல "

" அதுக்கென்ன...? வந்து ஸார் !"

' ஸாரை'ப் பார்த்தான் அவன்.

" ஓ ... ரெடி ஸார் ரூம் !... ரூம் நெம்பர் ஸெவன். உங்களைப் போன்றவர்களுக்கு ரொம்ப கன்வீனியண்ட். பெரிய குடும்பத்துக்காரங்களுக்கின்னு ரொம்ப ரகசியமாய் ரிசர்வ் செய்து வச்சதுங்க ! . " அவரோ எங்கோபேச்சைக் கொண்டு சென்றுர், சரி !

" ரொம்ப தாங்க்ஸ் !"—மேகநாதன்.

'தாங்க்ஸ்' மட்டும் அவர் வாங்கிப் போடவில்லை. அவன் கொடுத்த பத்து ரூபாய் 'அட்வான்ஸ் பணத்தையும் வாங்கிப் போட்டுக் கொண்டார். என்ன நெடி, அந்தச் சுருட்டுக்கு ! அந்தச் சூழலுக்கு வேண்டும் !

கீழேயிருந்து 'பூபாளம்' மிதந்து வந்தது. கிழவர் காட்டிய அறை ரொம்பவும் நேர்த்தி. யாரோ பிரஞ்சுக்காரன்

ஒருத்தனுக்குச் சொந்தமாயிருந்த இடமாம் அது. ஒரே கட்டில், இரண்டு மெத்தைகள். நிலேக்கண்ணுடி...இத்யாதி...! துப்பரவு செய்யப்பட்டது. வெளிச்சம் வந்தது ! அதற்குள் மேகநாதன் மெல்ல அண்டி தாராவின் காதைக் கடித்தான். நல்ல வேளே, காயம் ஏதும் இல்லே. காயத்துக்கு 'ஏதும்' இல்லே !" இந்த அரேஜ்மெண்டைப் பார்க்கிறப்போ, எனக்கு நம்ம ஃபஸ்ட் நைட் ஞாபகம் வருது....!" சிரிப்புக்கள் கை இணேத்தன. தோற்பையை மெத்தையில் வைத்தான், மேக நாதன் தாரா பவுடர் டப்பாவை நாடினுள்.

"நான் வரட்டுங்களா, ஸார்?" என்று விடை கேட்டார் கிழவர். மேகநாதன் சரி சொன்னுர். கிழவர் போய்விட்டார்.

மேகநாதன் நகைமுகையை இதழ்க்கங்கில் போர்த்தி மூடியவனுக, கதவுகளே அடைக்க முனேந்தபோது, காக்கி உடுப்புடன் கூடிய இன்னெரு நபர்—ஹோட்டலின் 'வெயிட்டர்'—ஏவலாள்—வந்து விட்டான். தாரா ஒதுங்கிக்கொண்டாள். அவன் பார்த்தபோது, அவள் முன் நிலேக்கண்ணுடி நின்றது. பிறைநுதலில் திகழ்ந்த பிறைத்திலகத்துக்குத்தான். எத்துணேக் கவர்ச்சி! வெகு நுட்பமான கவர்ச்சி ஆண்டவன் மெய்யாகவே மாபெரும் கலேஞனே !.....அதைவிட, "அவன்" பரம ரசிகன் !....'ம்.... !'

"ஸாருக்கு என்ன கொண்டு வரட்டும் ? இனம்புரிந்து கொண்டு இனம் பிரித்துப் பட்டியலே அடுக்கினுன் அலுவலாளன்.

மேகநாதன் அமர்ந்த இடத்தினின்றும் எழும்பி, தாராவை நெருங்கி விவரம் கேட்டு மீண்டு, பணியாளிடம் விவரம் சொன்னுன். அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில் அவ்வறையின் மேஜை அலங்காரம் பூண்டு விளங்கிற்று போதை நிரம்பி வழிந்தது.

"போயிட்டு வர்ரேனுங்க !....ஏதேனும் தேவைப்பட்டால், இந்தப் பெல்லே அழுத்துங்க ஸார் !"—இடம் காட்டிச் சொல்லிச் சென்றுன்.

" எஸ்....எஸ் " என்ற மேகநாதன் மெல்லத் திரும்பி, நிலைப்படிக்கு நெருங்கிய தருணம், தாரா சிருங்கார முறுவல் காட்டி " ஜஸ்ட்....ஒன் செகண்ட்....!" என்று சைகை காட்டி விட்டு, வெளியேறினாள்.

மேகநாதன் ஆள்காட்டி விரலை நேர் எதிர்வசமாகச் சுட்டியவாறு, சுட்டும் விழிச்சுடரின் ஒளியை வரவேற்கக் காத்திருக்கையில், பக்கத்து அறை ஒன்றில் சிரிப்பும் கும்மாளமும் எதிரொலிப்பதைக் கேட்டு ஒரு நிமிஷம் ஏதோ சிந்தனைக்கு உடந்தையாகி நின்றநிலையில், "எஸ்.....நான் ரெடி!" என்று அவசரமாக உள்ளே நுழைந்தாள் தாரா. அவளை உள்ளே அனுப்பிவிட்டு அவன் ஏனோ மீண்டும் அடுத்த அறை பக்கம் பார்வையை ஓட்டிய சமயம் அவ்வறையிலிருந்து ஓர் அழகுப் பதுமை வந்து வெளிப்புறம் எட்டிப்பார்த்த சடுதியுடன் உள்ளே விசுக்கென்று பாய்ந்த காட்சியையும் அவன் காண வேண்டியவனானான்! எஸ்....ஏ டிவைன் ப்யூட்டி...,. இன் டீட்...!...'ஆண்டவன் மாபெரும் ரசிகன்...நோ டௌட்!

" அத்தான் "

" தாரா "

" ம் !"

அடைக்கும் தாழ் கடனில் இறங்குகின்றது !....

* * * *

மேகநாதனுக்கு இப்பூதலத்தின் நுண்ணுர்வு எப்படித்தான் மீண்டதோ ?....சுழல் கழிக்கு இலக்கான பாம்பைப் போன்று உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு எழுந்தான். எழுந்ததும், அவனுக்கு நிலைக்கண்ணாடி ஞாபகம் வந்தது. மறுபாதியில் வசம் தப்பிக் கிடந்த தாராவைப் படம் பிடித்துக் கொண்டிருந்த கண்ணாடியில் கண் பதித்தான். விழிகளை இன்னமும் செந்நிறத்தை மாற்றிக் கொள்ளக் காணோமே !....

மீண்டும் கதவு பலமாகத் தட்டப்படவே, நடை திரும்பி தாழ் விலக்கினான் அவன். கைகளுக்கு வலுவில்லை. அடித்துப்

போட்ட மாதிரி உடம்பு வலித்தது. கண்களைத் துடைத்துக் கொண்டான். விழி ஈரம் நகக்கண்ணில் உறவு கொண்டது· அழுத்தித் திறந்தான், தாழ்ப்பாளை. என்ன கோலம் இது! தலைவிரிகோலமாக, பக்கத்து அறை அழகி நின்றாள். மாலை மாலையாகக் கண்ணீர் தொடுத்தபடி நின்றாள் அந்த அழகுப் பதுமை!

"ஐயா!.... என் கணவர் நேற்று நடுராத்திரியிலே யிருந்து ரொம்பவும் முடியாமல் இருக்காருங்க! எல்லாத்தி லேயும் ரொம்ப ஓவராப் போனதாலே வந்த வினையுங்க! ....எனக்கு பயமாயிருக்குதுங்க ஐயா! .... ஐயையோ!" அவ ளது கழுத்துத் தாலியில் சுடுநீர் தெறித்தது!...அவள் விம்மி னாள்; அழுதாள்; அலறினாள்.

போதையும் போதமும் கலந்த அழகு எனும் திருவின் முன் அவன்—மேகநாதன் வாய் மூடி மௌனியானான்—அரை வினாடி கண்களை மூடினான் பிறகு விழி திறந்தான். பாதி திறந்திருந்த கதவை மூடப்போனவன். தாராவின் நல்ல தூக்கத்தைக் கலைக்க ஒப்பாமல், மனம் ஒப்பிய கடமை பூண்டு, கதவை இழுத்து மூடிவிட்டு, அவளுடன் தொடர்ந் தான்.

அவ்விளைஞன் சலனமின்றிக் கிடந்தான். அவனுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைக்கு ஆவன செய்தான். அடுத்த பத்தாவது நிமிஷம் அவன் மெல்லக் கண்களைத் திறந்தான்·

அந்த அழகிக்கு வாய் கொள்ளாச் சிரிப்பு. "ஐயா!:... நீங்க தெய்வமாட்டமே என் கண்ணுக்குத் தோணுறீங்க!.... "பூங்கரங்குவித்து, பூவிதழ்ப் புன்னகை விரித்து, இ தாய்ந்த நன்றியைத் தெரிவித்தாள்!

மேகநாதன் சிந்தனைப் பிடியுடன், தன் அறைக்குள், "தாரா!....டியர்!"என்று கூப்பிட்டபடி நுழைந்த நேரத்தில் அங்கு தாரா இல்லை!....

அவன் துடித்தான். அந்தத் துடிப்பிற்கு ஒரு வரம்பு போல, அவனை அழைத்தது கடிதம் ஒன்று.

பிரியமுள்ள காதலருக்கு,

பெண்மையின் மேன்மையை நான் பரிபூரணமாக அறிந்திருந்தும், அப்பெண்மையைக் கட்டிக் காக்க வொட்டாமல், என்னை அழுத்திய வறுமையின் விதி என்னைச் சோதித்து வந்த கட்டத்திலே, நேற்று முன் தினம் நான் பரிசயமானேன் 'தங்களுக்கு: என்றால் உங்களுக்கு மன நிறைவும் மன நிம்மதியும் கிட்டியிருக்கும் பட்சத்தில், அதுவே என் பாக்கியமாகும். அதையே என் கடமைப் பூர்த்தியெனவும் கொள்ளுவேன்.

அடுத்த அறைப் பெண் என்னிலும் கெட்டிக்காரி என்னை விட அழகி; என்னைக் காட்டிலும் நல்லவள்.

நேற்று இரவு தாங்கள் எல்லாவகையிலும் அத்து மீறிப் போன பின், தாங்கள் தன் நினைவின்றிக் கிடந்தீர்கள். என் இதயம் துடித்தது. என் கண்களிலே துளி கண்ணீர் கூட சுரக்கவில்லை. ஆனால் சற்று முன் உங்கள் முன் தோன்றிய அழகியோ, இதயங்கலந்த நன்றியுடன், துடிப்புடன், தன்னுடைய ஒரு நாள் காதலனுக்காக மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தாள்.

ஆம், அவள் என்னிலும் நல்லவள்! அவள் என் சோதரி....தொழில் முறையிலே! அவள்—மேகலா தான் உங்களுக்கு ஏற்றவள்....இக்கடிதம் உங்களுக்குக் கலக்கம் தரும் பட்சத்தில், என்னைப் பட்சத்துடன் தயவு பண்ணி மன்னிக்கவேணும் உங்கள் தாலி எல்லாம் தோல் பையில் பத்திரமாக உள்ளன.

ஆனல் ஒன்று:

எனக்குச் சேரவேண்டிய கூலி ரூபாய் நூறை மட்டுமே எடுத்துச் செல்ல என் மனசாட்சி அனுமதி தந்திருக்கிறது! உங்கள் இதயம் பெரிது!

இங்ஙனம்

**தாரா**

கூப்பிடு தொலைவிலிருந்த மாதாகோவில் மணி சோகக் குரலுடன் ஏன் அப்படி ஒலிக்கவேண்டும்? மேகநாதன் விம்மிக் கதறுகிறானே, என்று?

ஆமாம், அவன் விம்மிக் கதறிக் கொண்டிருந்தான், "கண்ணே கற்பகம்!....உனக்குத் திருப்பூட்டி ஒரு வருஷம் கழிவதற்குள்ளே, நீ விதி வழி ஏகி, என்னை இப்படிப் பைத்தியம் பிடித்து அலையச் செய்துவிட்டாயே! என்னால் இனியும் இந்த நரகத்திலே உழல முடியாது!...நானும் உன் வழியே வந்து விடுகிறேன்!....கற்பகம்! கற்பகம்!...!!

—●—

# ● ● ● கால்படி அரிசி ஆத்மா!

"ஆமாங்க செட்டியாரே! இந்த ஆலமரத்தடிக் கிழவன் சொன்னு சொன்னதுதான்!"

"என்னுங்காணும், இப்படி ஒரேயடியாய் விலையை ஒசத்திச் சொல்றீரே?"

"கட்டினுப் பாருங்க; இல்லாட்டி நடையைக் கட்டுங்க, ஐயா!"....தொண்டையைக் கனைத்துக் கொண்டார் கிழவர். குவியல் குவியலாக இருந்த கத்திரிக்காய்—தக்காளிகளை பிள்ளையை வருடுகின்ற பாவனையில் மெல்ல மெல்ல வருடி விட்டார்.

"தாத்தா, கருகப்பிள்ளை இருக்குதுங்களாங்காட்டி?" என்று ஒரு சிறுமி கேட்டாள்.

"தாத்தாகிட்டே கிடைக்காத சாமான் சட்டு ஏதாச்சும் உண்டா ஆத்தா?"

"மெய்தான்."

"எம்புட்டுக்கு வேணும்?"

"மூணு காசுக்குக் குடுப்பீங்களா ?"

"ஓ!"

ஐந்து காசைக் கொடுத்த சிறுமி, கருவேப்பிலை கிடைத்த மகிழ்வில், பாக்கிச் சில்லரையைப் பற்றின ஞாபகம் இல்லாது நடந்தாள்.

கிழவர் சுருக்குப் பையிலிருந்து தடவி இரண்டு காசை எடுத்து வைத்துக்கொண்டு தலையை நிமிர்த்தினார். கைகளை முடிந்த மட்டும் ஓசைப்படத் தட்டினார். "இந்தாத்தா, ரெண்டு காசு...." என்று பொக்கை வாயை அகலத் திறந்து, ஓர் அற்கான பாசச் சிரிப்பை உதிர்த்தபடி, இரண்டு காசு நாணயத்தை, அந்த நாணயத்தின் நாணயம் பங்கப்படாத ரீதியில், உரியவளிடம் நீட்டினார்.

தக்காளிக்காகத் தவம் இயற்றி, ஒற்றைக்காலால் நின்று கொண்டிருந்த செட்டியார் இன்னமும் நகரவில்லை.

அறந்தாங்கி — நாகப்பட்டினம் எக்ஸ்பிரஸ் அந்த ஆவணத்தாங்கோட்டைச் சாலையை அசட்டை செய்துவிட முடியுமா, என்ன ?

கிழவர், மண்டையில் அடித்த உச்சி வெய்யிலைச் சட்டை செய்யாமல் இடது காதிடுக்கில் ஒளிந்திருந்த பாதி சுருட்டை வாய் ஊற எடுத்து, ஒரே தீக்குச்சியில் சமர்த்தாகப் பற்ற வைத்துப் புகையை இழுத்தார். புகையின் ரசிப்பில் வெகு சுவாரசியமாக ஈடுபட்டிருந்தார் மனிதர். ஏதோ சத்தம் கேட்டது. ஆடொன்று அவரது சோற்றுப் பானையை 'லாவி'க் கொண்டிருந்தது. "இந்த ஊரு நாட்டிலே பணக்காரங்க வூடு அனந்தமா இருக்கே ? அங்கிட்டாலே நாடிப் போவேன். இந்தக் கிழடு கதை ஒனக்குத் தெரியாது போலே. ஊருக்குப் புதுசோ ?...நான் வடிக்கிறது ஒரு நாளைக்கு ஒரு கடுத்தம். இந்த லச்சணத்திலே, நீயும் வந்துதான் தீரணும்னு அடம்பிடிச்சா, நில்லு, ஒனக்கும் போடுறேன். அல்லாச் சோத்தையும் நான் தின்னுதான் என்ன கண்டேன் ?...நாத்த ஒடம்பு மேலுந்தான் நாறித்

தொலையுது !'' என்று ஒரு 'பாட்டம்' பேசிவிட்டு, தலையில் சுற்றியிருந்த ஹைதர்காலத்துவாலையை நிமிண்டிச் சொறிந்து கொண்டார். ஈறும் பேனும் மண்டையைத் தாண்டிக் கொண்டு வந்திருக்குமோ ?—கிழவர் இருந்திருந்தாற்போலத் தனக்குள்ளாக ஒரு சிரிப்புச் சிரித்துக் கொண்டார். ஓர் இமைப்பிலே, அச் சிரிப்பு மறைந்துவிட்டது !

கிழவர்...கிழவர் என்றால் அவருக்கும் பெயரென்று ஒன்று இருக்குமே ?

இருக்கும், இருக்கும் !—ஆனால், அந்தப் பெயர் யாருக்குத் தெரியும் ?

ஆலமரத்தடிக் கிழவர் என்றால், 'சுற்று வட்டையில்' ஏகப் பிரசித்தம். கரூர்ப் பேர்வழி. முபத்திரண்டு வருஷம் தன் ஜீவனைக் காபந்து செய்துகொள்ளப் பழகிவிட்ட அசகாயசூரர் அல்லவா அவர் ? மிஸ்டர் எமதர்மராஜனுக்கு 'டேக்கா' கொடுக்கப் பழகிவிட்ட படு சமர்த்தராம் கிழவர்.—பேசிக்கொண்டார்கள் ! அந்த ரகசியமும் அவர் வரை ஒரு மர்மம்தான் !

**சி**ந்தனை வசப்பட்ட நிலையிலே, காய்கறிக் கடையை மறந்து, அந்த ஆட்டை கண் பாவாமல் பார்த்தவர், கண் மூடிக் கண் திறந்த வேளையில், அந்த ஆடு நல்லதனமாக அங்கிருந்து நகர்ந்துவிட்டதைக் கண்டு கொண்டார். அவரது இமைகளில் ஈரம் பனித்தது. 'மனுசங்க பாஷை தெரிஞ்ச வாயில்லாச் சீவன்...பாவம் !...வாயுள்ளதாலே இந்த மனுசங்களுக்கு என்ன பிரமாதமாகக் கொட்டுதாம் ? ம்...எப்படியும் சாண் வயித்தைக் கழுவி மூடிக்கிடத் தெரியும். அம்புட்டுத்தானே !...ம்....அப்பாலே, கடோசீலே, அல்லாம் பிடி சாம்பலாகப் பூடவேண்டியதுதானே ?....சே ! என்ன சென்மம்டப்பா இது ! பிறவா வரம் வேணும்னு, அனுபவிச்ச புண்ணியவான் யாரோ பாடினார் !....சுருட்டு சுட்டுவிட்டது போலும் ! உதறினார். சாம்பல் தூள் பறந்தது.

"பெரியவரே! கடைசியா என்ன விலே சொல்றீங்க தக்காளிக்கு?" என்று மீண்டும் கேட்டார் செட்டியார்.

"ஒரே விலே! இப்ப தக்காளி வேணுமா? இல்லே நான் பசியாறப் போவட்டுமுங்களா?"

"வேனும், வேணும். ஒரு அரைக்கால் வீசை தாங்க. படிக்கல்லேப் பார்த்துப் போட்டுக்குங்க.....ம்.....சரி.....சரி, இந்தாங்க பணம். இந்தப் படிக் கல்லுங்களே மாத்திக்கிடுங்க. இல்லாட்டி, எவனுச்சும் வந்து புடிச்சிடப் போருன், பெரியவரே!"

"அப்படீங்களா? பிடிச்சிக்கிட்டுப் போனுப் போய்த் தொலேயட்டுமே!....இந்தப் பதினேஞ்சு மாசப் பொழைப்புக்கு ஏதாச்சும் ஒய்வு கெடைச்சாக் கூட தேவலாம்தான்!" என்று அழகாகச் சிரிக்கலானுர் காய்கறி வியாபாரி.

திரும்பி வந்த ஆட்டுக்கு ஒரு பூவன் பழம் கிடைத்தது.

## "லொக்....லொக்....!"

ஆலமரத்தடிக் கிழவர் இருமினுல், அதில் சுருதி பேதம் இருப்பது சகஜமேயாயினும், பேதத்தைக் கடக்கத் தெரிந்தவர்களுக்குக் கட்டாயமாக அந்த இருமலின் சுருதியைத் தெரிந்து கொள்ளக்கூடும்.

வியாபாரம் மும்முரமாக நடைபெற்றது.

அந்தி சந்திப் பொழுதல்லவா?

உலே ஏறிவிட்டால், 'வெஞ்ச'னத்துக்கு வழி சொல்ல வேண்டாமா?

வழி சொல்லிக்கொண்டிருந்தவர் கிழவர். வேர்வை வழிந்தது. இருந்ததும், கந்தல் துவாலேயை எடுத்து உதறக் கூட நினேவின்றி, அதை எண்சாண் உடம்பைச் சுற்றிப் போர்த்திக் கொண்டார். அட்டணேக்காலிட்டுக் குந்தியிருந்தவரை பைசாச் சுருட்டு தேடிவந்தது.

" தாத்தா."

" வாப்பா, பேராண்டி !"

" மேனி ஒரே முட்டா நடுங்குதே ?—காய்லாவா.

" என்னமோ, அப்பிடித்தான் படுது !"

" அப்பிடீன்னு எல்லாத்தையும் தூக்கி ஒங்க எதாஸ்தானத்திலே போட்டுப்பிட்டு, பூந்து படுக்கறதுதானே ?".... இவ்வளவு வயசானப்பறமும் இப்பிடிக் கஷ்டப்பட்டு யாருக்குச் சேர்த்து வைக்கப் போறீங்க ? இப்பதான் ஒங்க கையிலே ரொம்பச் சேர்ந்திருக்கிறதா ஒரு பேச்சு அடிப்பட்டுகிட்டுக் இருக்குதே, இந்தச் சாலே நெடுக !"

" கிழவர் தனக்கே உரிய மர்மத்துடன் 'கடகட'வென்று சிரித்துக் கொட்டினார். அள்ளத்தான் ஆள் இல்லே, பாவம் !

சிரிப்போடே சொல்கிறார்:"பேராண்டிக்கில்லே சொல்லுறேன். நான் நித்தம் உழைக்காட்டி, என்னோட சாண் வயித்தை வஞ்சனை செஞ்சிடுறதாய்த்தானே அருத்தம் ? ஊர்னு, யாரும், யாரைப் பத்தியும் எப்பவும் எதுவும் பேசிக்கிடுவாங்க. இது சகஜம்தான் ! பணம் காசுன்னுக்க, யாருக்குத்தான் ஆசை வராது ? நானும் கேவலம் ஒரு மனுஷப் படைப்புத்தானே ?"

"தாத்தா பேச்சு எப்பவுமே மூடுமந்திரம் கணக்குதான்!"

இப்போதும் வாடிக்கையான ஒரு சிரிப்புத்தான் வெளிப்பட்டது.

செவ்வாய்ச் சந்தைக்கு வைக்கோல் வண்டிகள் சரம் தொடுத்துச் செல்ல ஆரம்பித்துவிட்டன.

பேராண்டி என்ற புதிய சொந்தத்துக்குப் புதிய பாத்தியதை பூண்ட அவ்விளைஞன் தன்னுடைய தாத்தாவுக்கென்று ஒரு சாயா வாங்கி வந்து கொடுத்தான்.

அந்தக் கால் படி அரிசிக் கிழவர் அதை மறுக்கமாட்டார். ஒரு முறை காசு கொடுக்கப் போக, அவன் பிரமாதமாகக்

கோபித்துக் கொண்டு விட்டான். "போறப்ப யாரும் எதையும் தூக்கிட்டா போகப்போருேம்? நம்பளேத் தூக்கத்தானே நாலுபேருக்கு வேலே வைப்போம்?" என்று வேதாந்தம் படித்தான். அந்தப் பேச்சின் விதரணே, வயசை மீறியதொரு வாக்காகவே பட்டிருக்க வேண்டும், வயோதிகருக்கு. அதிலிருந்து, அந்தப் பிள்ளேயென்ருல் அவருக்கு ஒரு பிரியம். "நீங்க எந்த ஊரு? ஒங்க பேரு என்ன? இத்தனே வயசுக்கப்புறம் ஏன் இப்படிக் கஷ்ட ஜீவனம் நடத்த வேணும்? உங்களுக்கு பிள்ளேகுட்டி இல்லியா?" என்றெல்லாம் துளேத்தான்.

"நான் அனுதை. அதிலேயும் நாதியத்த ஒரு புறம் போக்கு. இதுக்குப் பெரிசா என்ன கதை வேண்டிக்கிடக்கு, காரணம் வேண்டிக் கிடக்கு?...மூச்சு ஓடுற மட்டுக்கும் ஓடித் தொலேக்கட்டுமே! மூச்சு நின்னுட்டாக்க, நல்ல மனுசங்கன்னு ஈவுஇரக்கங்கொண்ட தலேங்க நாலா இந்த நாட்டிலே அத்துப் போயிடும்? அவங்க இந்தச் சனியனேத் தூக்கி எறிஞ்சிட்டுப் போகட்டுமே?" என்று அடைத்து விடுவார். உடனே "தாயே பராபரி ... அங்காளம்மை!"...என்று ஓர் ஆறுதல் கொள்ளத் தவறுவதில்லே.

சாலேயிலே ஓர் அப்பனும் மகனும் சண்டை போட்டுக் கொண்டார்கள்.

கிழவர் ஆத்திரத்தோடு எழுந்தார். "ஏம்ப்பா தம்பி, பெத்த அப்பனேயா எதிர்த்துப் பேசி, கைநீட்டப் போறே? போப்பா, விலகி!" என்று தந்தையையும் மகனேயும் விலக்கி விட்டார். "காலம் மாறிப் போச்சு, நீங்க நடங்க சேர்வை!" என்று சமாதானம் செய்தார். சுருக்கம் படிந்து கிடந்த அவர் முகத்தில் வேதனேயும் விரக்தியும் நிழலாடின.

ஜன நடமாட்டம் கம்மிபடத் தொடங்கியது

"இந்தாருங்காணும், இதுக்ளே எடுத்துக்கும். நாளேக்கு இருந்தா, தூக்கி எறியத்தான் வேணும்!" என்று சொல்லி

குணம் கணித்து, குற்றம் கண்டு ஒதுக்கிவிடத் துணிந்த காய்கறிகள் சிலவற்றை, பூவத்துக்குடி தேவருக்கு மன முவந்து யாசகமாக நீட்டினர் அவர். கூழைக் கும்பிடு ஒன்று நியாயமான உண்மை போலக் கிடைத்தது.

ஆதாயம் என்று, ஆதாயம்தானே ?

பாவம், இவரா கருமி ?...என்ன உலகம் ?

"ஆலமரத்தடிக் கிழவர் போயிட்டாருங்க !"

"ஆங் ..!"

கும்பல், வித்தைக்காரனைச் சுற்றிக் கூடுவது மாதிரி சிறுகச் சிறுகக் கூடத் தலைப்பட்டது.

அதோ வித்தைக்காரன் !—என்ன உறக்கம் ...... என்ன உறக்கம் !

"ராத்திரி நல்லாயிருந்தாரே, முத்துமலை அம்பலம் . ?"

"நல்லாத்தான் இருந்தார். போன கிழமையாச்சும் லேசா காயலா இருந்தாரு. நேத்தைக்கு ராவு யாதொண்ணும் இல்லே. வரக் காப்பி குடுத்தான் பேராண்டி. அப்பாலே, வளமைப்படி சாமான் சட்டுகளை உள்ளாற தூக்கியாந்து சரிபார்த்து வச்சிட்டு, சுருக்குப் பையை எண்ணிக் காட்டி எங்கிட்டே ஒப்படைச்சிட்டு, இந்த வெளித் திண்ணையிலே தான் படுத்தாரு. கோழி கூப்பிட, வேம்பாவைச் சூடு பண்ண ஏந்திருச்சேன். அவரு காலை மிதிச்சுப்பிட்டேன். திரும்பிப்பார்த்தேன். ஆளு முண்டலை, முடங்கலை. சம்சயம் தட்டிச்சு. லாந்தரைப் புடிச்சு முஞ்சியைப் பார்த்தேன். வெறுங்கட்டைதான் மிச்சம் !"—முத்துமலைக் கிழவர் கண்ணீரை வழித்துவிட்டார்.

“ஆமா, இங்கிட்டு வந்து வெகு தொலேக்குச் சொத்து சேர்த்து வச்சாராமே ? அது சங்கதி ஒமக்குத் தீரத் தெரிய ணுமே ?” என்றூர் தேவர்—சன்ஞசித் தேவர்.

“அந்தச் சங்கதியை அந்தக் கிழவரைக் கேட்டால்தான் தெரியுமுங்க !” குரல் நெகிழ்ந்து ஒலித்தது.

“அதெல்லாம் சொல்லித் தெரியிற தாக்கலா ? என்ன இருந்தாலும் முத்துமலே அம்பலம் யோகக்காரப்புள்ளிதான்!”

“ஆமா, ஆமா, விரிச்சுப்படுக்கறத்துக்கு நிழல் குடும்பத் தாரில்லே !”

“வெட்டிப் பேச்சு ஏதுக்கு? ...பொணத்தைத் தூக்கற துக்கு வழி பண்ணுங்க. ஆளுங்க நாலு பேரைப் பிடிங்க. அம்பலம் !” என்றூர் மணி.

“அல்லாரும் சத்தே பொறுத்துக்கிடுங்க. உண்மையிங்க றது தெய்வத்துக்குச் சமட்டி. நாமள்ளாம் காளிக்கு அடிமைப்பட்டவங்க. இதை நானும் மறந்திடலே ; நீங்களும் மறந்திடாதீங்க. அந்த சன்ஞசித் தேவர் ஒரு தாக்கலேத் தூக்கிப் போட்டாரு. ஊர் முழுவதும் அப்படிக் கூட நினேச் சிருக்கும். இத்தாப் பாருங்க, இந்தச் சுருக்குப் பை. இது தான் ராவு அந்தக் கிழவர் கடோசியாக் குடுத்து வச்சுது. பத்தணுவுக்கு மூன்று காசு கொறைச்சல். அம்புட்டுத்தான் பணம். உள்ளாற கூடையிலே இருக்கிற காய்கறிங்க மிச்சம். மத்தபடி...மத்தப்படி அவரோட காசு எங்கிட்டே இன்னிய தேதி வரைக்கும் ஒரு தம்பிடி சேர்ந்ததில்லே. அவரு கணக்கு வழக்கெல்லாம் இந்த நோட்டிலேதான்....அதை வேணும்ஞ லும் பார்த்துடுங்க” என்று ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் போட்டார் அம்பலம்.

அப்போது அந்தக் கணக்கு நோட்டிலிருந்து மக்கிப் போனதொரு பழைய செய்தித்தாள் சிதறி விழுந்தது.

மணி, சிதறி விழுந்த அந்தப் பத்திரிகையை எடுத்தார். பிசிறுகள் உதிரலாயின.

எடுத்த எடுப்பில் ஓர் அதிசயம் வெளிப்பட்டது.

மணி வாய்விட்டு வாசிக்கலானார்.

“ காணவில்லை.”

இந்தப் படத்திலுள்ள என் தந்தை தேவிபட்டினம் உயர்திரு. கு. காசிநாதக் கங்காணி, என் பேரில் கொண்ட சிறு மனஸ்தாபம் காரணமாக தம்முடைய சொத்துசுகத்தையெல்லாம் துறந்து, கடந்த இருபத்தியேழு மாதமாக எங்கோ கண் காணாத இடத்தில் தலை மறைவாக வைராக்கியத்தோடு இருந்து வருகிறார். ஆட்டுக்குட்டி வளர்க்க வேண்டாமென்று நான் சொன்னேன். அவர் கேட்கவில்லை. ஆத்திரத்தில் புத்தியில்லாமல் திட்டிவிட்டேன்! ரோஷக்காரர் அவர்! யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் வீசின கையும் வெறுங்கையுமாக இரவோடு இரவாக வெளியேறிவிட்டார், என் தெய்வம்! இதுவரை தேடாத இடம் இல்லை, போடாத விளம்பரம் கிடையாது. நாங்கள் குடும்பத்தில் பைத்தியம் பிடிக்கும் நிலையில் இருந்து வருகிறோம்.... ஆகவே, இந்தப் புகைப்படத்திலுள்ள பெரியவரை இனம் காணும் புண்ணியவான் யாராக இருந்தாலும். உடனே ரகசியமாக கீழுள்ள என் விலாசத்துக்கு தந்தி கொடுத்து உதவும்படி ரொம்பவும் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். கோடிப் புண்ணியம் கிடைக்கும். !....அவர்களுக்கு வேண்டும் பணத்தை அள்ளிக் கொடுப்பேன். அங்காளம்மை பேரில் ஆணை இது !....

கத்தரிக் காட்டுக் கிழவர் உணர்ச்சிவசப்பட்டுச் செருமலானார் ; “ மனுசர் விதியோட எப்படி எப்படியெல்லாம் விளையாடிப் பார்த்திருக்கார் ?....அட கடவுளே !

மணி முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"மணி! இந்தாங்க, பத்து ரூபாய்த் தாள் இருக்கு. சைக்கிள் ஒண்ணு எடுத்துக்கிட்டு அறந்தாங்கிக்குப் போயி அந்தப் பத்திரிகையிலே கண்டிருக்கிற விலாசத்துக்கு ஒரு 'எமர்சன்டு' தந்தி பேசிட்டு வாங்க. நம்ப கிழவனுரைய்யா வோட மகனை உடனே புறப்பட்டு வரும்படி மட்டும் பேசுங்க ...போதும்! பாவம்!"—முத்துமலையின் சாயத்துண்டு ஈரத் தால் கனத்தது!

ஆலமரத்தடிக் கிழவர் எத்தனை மகத்தான ரோஷத் தோடு உறங்கிக் கொண்டேயிருக்கின்றார்!....

உறங்கட்டும்! உறங்கட்டும்!....

எழுப்பி விடாதீர்கள்....!

-- ○ --

# ● ● ● மனிதாபிமானம் புன்னகை செய்கிறது !

மினர்வா தியேட்டரை ஒரு பார்வை பார்த்துக் கொண்டே ஏர்க்காலிலே ஓர் அழுத்தம் கொடுத்துப் பற்றிய வாறு, தாதா முத்தியப்பன் தெருவுக்கு மடங்கினான் மணி முத்தன். குதிகாலில், ரிக்ஷாவின் சக்கரங்கள் பட்டுப்பட்டு விலகின. அந்தி சந்தி வேளை. ஆனாலும், வெய்யிலின் உக்கிரம் தணிந்தால் தானே ?

'ஒரு வழிப்பாதை' என்ற சட்டத்திற்குத் திரையிட்ட ஒரு லாரிக்காரன், நல்ல வேளை மணிமுத்தன் மீது மோதாமல் சட்டத்தை மோதிய பெருமையுடன் பறந்தான். 'போலீஸ் விஸில்' ஒலியை அவன் செவிமடுக்க, பைத்தியமா, என்ன ?

'பிராட்வே' வந்தது. சீனத்துக் கடைத்தெருவை நாடி ஓடினான். 'கிராக்கி' கிடைக்கும்; 'துட்டும்' கிட்டும். நடைபாதைக் குடும்பம் ஒன்று அவன் பார்வையில் பட்டது. அவன் மனம் அவனுடைய குடும்பத்தைச் சுற்றி சுழன்றது. ரிக்ஷாவின் கைப்பிடியை லாகவமாகப் பற்றியவனாக, மூச்சையும் பற்றிப் பிடித்துக்கொண்டு, அடிப்பாதங்களைத் தார்

ரஸ்தாவில் தீர்க்கமாகப் பதித்தவண்ணம் நின்றான். சுடு நீரில் விழுந்த சுண்ணாம்புக் கிளிஞ்சல்களென அவன் மனம் பொங்கி எழுந்தது. 'முத்தாயிக்கு உடம்பு சொகமாயிடுமா ? பொழுதுக்குள்ளாற நாலு மூணு சம்பாரிச்சு, சுருக்குப் பையிலேயிருக்கிற துட்டையும் சேர்த்தடிச்சு, நல்ல டாக்டர் கிட்ட 'அதை' இட்டுக்கிணு போய்க் காட்டி வைத்தியம் வாகனம் செஞ்சாத்தான் முறைக் காச்சல் ஒரு முட்டா நிற்கும் !....கார்பொரேஷன் மருந்துக்குத்தான் சீக்கு படிய மாட்டேங்குதே !....ஏழை பாழைங்ககிட்டயிருந்து பணம் காசு விலகியிருக்காப்பிலே, நோய் நொடியும் தள்ளிக் குந்தப் படாதா ?'...என்று எண்ணி மருகினான் அவன். கலங்கி வந்த கண்களைத் துடைத்துக்கொண்டான் அவன். நாகரீகத்தின் கெடுபிடிக்கு இலக்காகி நடைபயின்ற இளம் தம்பதியை ஒதுக்கியவாறு திரும்பினான். "சவாரி வேணுமா, சாமீ ?" என்றான். சுமுகமான பதில் வரவில்லை. அவன் ரிக்ஷாவுடன் ஓடத் தொடங்கினான். ஓடினவன் ஓர் உருவத்தைக்கண்டு மகிழ்ந்தான். உருவத்தின் 'ஸ்லாக்' சங்கையில் தலை காட்டிய வாறு இருந்த 'ஸ்டெதஸ் கோப்' கருவி அவனுள் பாலை வார்த்ததோ ?

"சாமீ, வண்டி வேணுமா ? எங்கே போகணும் ?" என்று வினயமாக வினா விடுத்தான் ரிக்ஷாக்கார மணி முத்தன்.

"தங்கசாலைவரை போகணும். ஒரு அவசரமான விஷயம். எனக்காகக் காத்துக்கொண்டிருப்பாங்க, சீக்கிரம் போயாக ணும் !"

"ஓ !...ஒரு நிமிட்டிலே ஒட்டமா ஓடிப்புட்ரேன், சாமி!"

"ஓகே !"

நெரித்துப் புடைத்த மனித மந்தை, பஸ், கார் வகைய றாக்களைக் கடந்து ஓடிக்கொண்டிருந்தது ரிக்ஷா, முத்தாயி யின் காதலுக்கு வசப்பட்ட இன்பக் கனவின் நிழலாட்டம்

திரை ஓவியமாக அந்த ஏழையின் நெஞ்சரங்கில் ஓடிக் கொண்டேயிருந்தது. ஒரு வருஷத்துக்கு முன்.

ஒரு நாள் :

மினர்வாவுக்குச் சவாரி ஏற்றி வந்தான் மணிமுத்தன் கால் சூடு கபாலத்தில் தாக்கியது. ஆதித்த பகவானின் கிரணங்கள். அதுவே அவனுடைய இருள் எனும் கிரணத் தைப் போக்கடிக்கும் கிரணமென்பதை அவன் எப்படி அறிய முடியும்? பசி வயிற்றைக் கிள்ளவே, சாயாக் கடைக்குள் அடி எடுத்து வைக்கப்போனான். அத்தருணத்தில், அருகிலே 'சோற்றுக்காரி' ஒருத்தி அம்பிகையாய்த் தோன்றினாள். படி யளக்கும் பாவையாகக் காட்சி அளித்தாள். வியர்வையைத் தெருக் குழாயடியில் வழித்துப் போட்டுவிட்டு நடந்தான். ரிக்ஷாவை ஓரமாக நிறுத்தினான். சோறு கேட்டான். கேட்டுக்கொண்டே, பணம் எடுக்க முனைந்தான். ஏமாற்றம் விடுகதை போட்டது. அவனது சின்னஞ்சிறு நாலணா பிளாஸ் டிக் பெட்டகத்தைக் காணவில்லை. என்ன அஜாக்கிரதை! எங்கே விழுந்தது?

“இன்னா ரோசிக்கிறே? ..துட்டு இல்லியா?......ம் சரி, துன்னு!...” என்று சாப்பாட்டுப் பட்டையை நீட்டி 'வெஞ்சன'மும் வைத்தாள் அந்தப் பெண்.

மணிமுத்தனுக்கு அவளுடைய அந்த அன்புச் செயலில், பசியெல்லாம்'கடலே கதி'யென்று ஓடிவிட்டது. அவளுடைய ஆணைப்படி அவன் உண்டான்.

சோறு, சொர்க்கத்தைக் காட்டாதா?

மணிமுத்தனுக்கு முத்தாயி வாழ்க்கைப்பட்டாள்!

“சாமி, ஏறங்குங்க!” ஒன்றான் மணிமுத்தன்.

ரிக்ஷாவினின்றும் இறங்கிய ஸ்லாக் சட்டை இளைஞர் சுற்று முற்றும் பார்வையைத் திரைவிரித்தார். இருள் திரை விலக்கப்பட்டிருந்தது. “இந்த நடைபாதைக் குடிசைக்கு முன்னாலே என்னை நிறுத்தி விட்டிருக்கிறானே? ஏன்?”

“ ஏனப்பா, நான் தங்கசாலைக்குப் போக வேண்டுமென்று சொல்லவில்லையா ?”

“ யாரு சாமி இல்லேன்னு சொன்னது ?”

“ பின்னே... ?”

“ சாமி ! சாமி ! எம் பொஞ்சாதிக்கு விஷ சொரமுங்க நாலு நாளாச் சாப்பிட்ட மருந்துங்க ஒரு பலனையும் தரலே, ஒங்களைக்கண்டதும், எனக்குத் தெய்வத்தைக் கண்டாப்பிலே தோணுச்சு, ஒருவாட்டி வந்து பார்த்து மருந்து குடுங்க. இந்த ஏழை கையிலே இருக்கிற துட்டைத் தாரேனுங்க, சாமி !... கண்ணு மூடித் திறக்கிறதுக்குள்ளே உங்களைத் தங்கசாலையிலே சேர்த்துப்புடுறேங்க. பெரிய மனசு பண்ணுங்க, டாக்டர் துரையே !” என்று விம்மினன் ரிக்ஷா ஓட்டி.

அந்த இளைஞனுக்குத் திகைப்பு வளர்ந்தது. “நான் டாக்டர் இல்லேப்பா !”

“ ஏஞ்சாமி இப்படிப் பொய் பேசுறீங்க ?...இந்த ஏழையைக் கண்டதும் ஒங்க உத்தியோகம் கூட மறந்து போச்சா? ஐயையோ !...முத்தாயி...”

அவன் கேவினன்.

அப்போதுதான் அந்த நபருக்கு விஷயம் புரிந்தது தன்னைத்தானே ஒருமுறை பார்த்தார். சட்டையில் தான் வைத்திருந்த ஸ்டெதஸ்கோப்பை—நாடிக் குழலைப் பார்த்துக் கொண்டார்.

“ இந்தாப்பா! நான் டாக்டர் இல்லே; சத்தியம் நம்பு ”

“ எம் பொஞ்சாதி சாகப் பிழைக்கக் கிடக்கிறு. ஒனக்கு ஈவிரக்கம் இல்லையா ! நீ பின்னே படிச்சதெல்லாம் இப்பிடிப் புளுகத்தானு ? தூ ! நீ வெறும் மனுசன்! ” என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறியவாறு, அந்த இளைஞனின் கன்னத்தில் அறைந்துவிட்டான் ரிக்ஷாக்கார மணிமுத்தன்.

அக்கணத்தில், அங்கே 'டாக்ஸி' ஒன்று வந்து நின்றது' அதிலிருந்து இறங்கிய மனிதர் புயலாக மணிமுத்தன் முடியைப் பற்றி, ஏண்டா நாயே" என்று கர்ஜனை செய்தவாறு கை ஓங்கிய வேளையில் ஸ்லாக் சட்டை இளைஞன் பாய்ந்து தடுத்தான். "அண்ணா தவறு இந்த ஏழையினுடையதல்ல. என்னுடையது. •அவனை ஒன்றும் செய்யாதீர்கள். நேற்றைய நாடகத்திற்காக நான் உங்களுடைய ஸ்டெதஸ் கோப்பை வாங்க்யிருந்தேனல்லவா? அதை அப்படியே சட்டையில் வைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். நாடிக் கருவியைக் கண்டவுடன், என்னை அசல் டாக்டரென்று நம்பிய இந்த ஏழை, நான் சத்தியம் செய்தும் நம்ப மறுத்துவிட்டான்! இவன் மனைவி சாகப் பிழைக்கக் கிடக்கின்ற வேதனை தூண்டிய வெறியில் தான் என்னை அறைந்தான்! பாவம்! அண்ணா, எனக்காக ஒரு உபகாரம் செய்யுங்கள். அடுத்த தெரு திருப்பத்தில் உங்கள் காரை மறித்து அரைமணிக்கு முன் இதே ரிக்ஷாக்காரன்தான் கெஞ்சிக்கொண்டிருந்தான். தூரத்தேநின்று திரும்பிய நான் அக்காட்சியைப் பார்த்தேன். ஆபத்துக்கு உதவவேண்டுமென்றுதான் அவன் விம்மி வெடித்திருக்க வேண்டும். உங்களுக்கு ஏதோ அவசரம். காரில் பறந்து விட்டீர்கள்! அண்ணா, எனக்காக இப்போது ஓர் உபகாரம் செய்யுங்கள். இந்த ஏழையின் மனைவியைப் பிழைக்கச் செய்யுங்கள் அண்ணா!

இளைஞன் வேதனை விம்ம, கண்ணீர் வெடிக்கப் பேசினான். ஓலைகள் பிய்ந்து கிடந்த குடிசையில் பெண் உருவம் ஒன்று படுத்துக்கிடந்த காட்சியை அவன் கண்டிருக்க வேண்டும்,

"சரி தம்பி, கடமையிலே மனிதத் தன்மையோடும் ஈவிரக்கம் கூடிய அன்புடனும் நடக்கும் எனக்குக் கூட இப்படிப்பட்ட சோதனைகளை ஆண்டவன் ஏன்தான் உண்டாக்குகிருரோ? நீ போ. தம்பி இந்த ரிக்ஷாவாலாவின் பெண்சாதியைப் பிழைக்க வைக்கிறேன்!....

ரிக்ஷாக்காரன் நீர் சோர நின்றவன். " சாமி முதல்லே ஒங்களைக் கொண்டு போய் தங்கசாலையிலே இறக்கிப்புடுறேன் சாமி !" என்றான் இளைஞனிடம்.

"இருக்கட்டுமப்பா, முதலில் உன் பெண்சாதிக்கு சிகிச்சை செய்துவிட்ட பிறகு தம்பியை நானே காரில் தங்க சாலையில் கொண்டு போய் இறக்கிவிட்டுக்கொள்கிறேன் " என்றவாறு அசல் டாக்டர் குடிசைக்குள் நுழைத்தார்.

"மாமா !...நம்ப அத்தை கோபிச்சுக்கிணு கண்ணு ரொண்டையும் தொறக்கவே மாட்டேங்குது மாமாவ் !..." என்று ஒரு சிறுமியின் குரல் அவர்களை வரவேற்றது.

பூசாரி வரம் கொடுத்தபோது, தெய்வம் மறுத்து விட்டதோ ?...

## ●●● ஆசை ஓர் அனுதை !

கல்லாவில் சுறுசுறுப்பு சூடு பிடித்த வேளை.

சரமாரியாக மோதி வந்துகொண்டிருந்த 'பில்'களின் புள்ளிகளைப் பார்த்துப் பணம் காசுகளைக் கல்லாவில் போடுவதிலும், உண்டான மீதச் சில்லறைகளைக் குறிப்பு உணர்ந்தும் குறிப்பு உணர்த்தியும் மேஜையின் மீது இருந்த கண்ணுடித் தகட்டின் மீது சரிபார்த்து வைப்பதிலும் முனைந்திருந்தார் சேர்வைக்காரர்

இந்த அஷ்டாவதானத்திலும் அவரது உள் மனம் 'மகமாயி! எல்லாமே நீ இடுகிற பிச்சைதான். நீ அளக்கிற படிதான். ஆனால், எனக்கு இருக்கக் கூடிய அந்தக் குறையைப் போக்கி நிவர்த்தி பண்ண எப்பதான் நாள் பார்த்திருக்கியோ? அந்தத் துப்புத்தான் இந்தச் சின்னப் புத்திக்கு இன்னமும் மட்டுப்பட மாட்டேங்குது! எம் பேர் விளங்க வேண்டாமா? உன்னையே சதம்னு அடிச்சு விழுந்து ஏங்கித் தவிச்சுக்கிட்டு இருக்கிற எங்களுக்கும் ஒரு விடிபொழுது உண்டாக வேண்டியது தர்மம் இல்லியா? ஆத்தா மூத்தவளே!' என்று உருகி வழிந்தது

அதே சமயம் அவரது கண்கள் அடுத்த 'பில்'லேயும் அதனடியில் இருந்த நோட்டையும் துருவின. ஏறிட்டு நிமிர்ந்தார். "அண்ணச்சி! இந்த நோட்டுச் செல்லாது. வேறே கொடுங்க" என்றார். இதமான பேச்சுத்தான், அட்டியில்லே.

வாடிக்கைக்காரர், "இந்த நோட்டுக்கு என்னங்க? ரெண்டு ரூபாய்க்குத் தாராளமா செல்லுமுங்களே?" என்று மறுமொழி கொடுத்தார். குரலில் 'நைச்சியம்' கலந்த கடுகடுப்பு.

சேர்வைக்காரரின் முகம் பின்னமடைந்து சிறுத்தது. "ரெண்டு ரூபாய் நோட்டு ரெண்டு ரூபாய்க்குச் செல்லுபடியானல் போதாதுங்களா? நீங்க கொடுத்த இந்தக் கிழிசல் ரெண்டு ரூபாய் நோட்டு என் கடையிலே ஓடாது. ஆனதினலே, வேறே கொடுங்க. இல்லாட்டி, தொண்ணூறு பைசாவாகச் சில்லறை கொடுத்திடுங்க. வியாபார நேரத்திலே வீணு வாயாட நேரம் இல்லே!" என்று பட்டுக் கத்தரித்த மாதிரி பேச்சைக் கத்தரித்து விட்டு, அடுத்த 'பில்'லேக் கவனிக்கலானர்.

முழுப் பெயர், முத்தையாச் சேர்வை. என்றாலும் அவரைச் சேர்வைக்காரர் என்றுதான் ஆவணத்தான் கோட்டைச் சாலே வட்டாரத்தில் அழைப்பார்கள். "சேர்வை தேநீர் விடுதி என்றால், சுற்று வட்டாரத்தில் ஒரு நல்ல பெயர். அங்கே போட்டுக் கொடுக்கும் சாயா மட்டுமல்ல தோசை, குருமா, சூப், அதிரசம் எல்லாமே சூடும் சுவையும் கொண்டிருக்கும். 'மகமாயிக்குப் பயந்து சத்தியத்தோடவும் தருமத்தோடவும் நடக்கவேணும் என்கிறதுதான் என் கொள்கை. அப்பாலே ஆத்தா விட்ட வழி :...' என்பார் அவர் அடிக்கடி.

**ம**ணி ஒன்று அடித்தது.

அதாவது, மணி எட்டு முப்பது.

சந்தடிப் பையப் பைய முடங்கிக் கொண்டிருந்தது.

பசிக்கும் நேரம் காலம் உண்டு அல்லவா ?

முத்தையாச் சேர்வை முன் நெற்றியில் அழும்பு பண்ணிக் கொண்டிருந்த முடி இழைகளைக் கோதி விட்டுக் கொண்டார். கறுப்பும் வெள்ளையும் வர்ண பேதம் காட்டின. திருநீற்றுப் பட்டைகள் வேர்வையில் கரைந்திருக்கவேண்டும் ஏக்கத்தில் கரைந்து உருகும் அவரது உள்ளத்தைப் போலவோ ? கல்லாவை இழுத்தார் ; மகிழ்ச்சி தளும்பியது. நெஞ்சில் நின்ற மகமாயி நினைவிலும் நின்றாள்.

அதோ, ஆடிவரும் தேராக ; குழந்தை ஒன்று தத்தித் தத்தி நடைபயின்றது. பக்கத்துப் பெட்டிக்கடைக்காரரின் மழலை அது.

அந்தக் குழந்தையையே தொடுத்த விழி எடுக்காமல், பதித்த நெஞ்சம் விலக்காமல் பார்த்தார் சேர்வை. நெஞ்சில் கொப்புளித்த ஏக்கம், இனம் கண்டுணராத பாசத்தின் கலங்கலோடு, கலக்கத்தோடு கண்களை எட்டிப் பார்த்தது. கடுமைமிக்க மீசைக்கு அடியின் கனிவு பூக்க, "ஏ, பாப்பா !" என்று விளித்தார். சுவாமிக்குப் படைத்த பூவன்பழம் கையில் இருந்தது.

சித்தம் போக்கு சிவன் போக்கு என்பார்கள்.

குழந்தையும் அப்படித்தானே ? அது தன்பாட்டில் தன் அப்பாவைத் தேடிச் சென்றது.

ஏமாற்றம் பிடரி பற்றியது.

ஏக்கம் உந்தியில் கழித்தது.

'மகமாயி ! எங்களு பலிக்காதாங்காட்டி !' சேர்வைக்கு இருக்கை கொள்ளவில்லை. நாற்காலித் திண்டு முள்ளாயிற்று. 'ஊர் நாட்டைப்போலே எங்களுக்கும் ஒரு குஞ்சைக் காட்டினுள், ஆத்தாளுக்குக் குறைஞ்சாபோயிடும் ?...எங்க பொசிப்பு அம்புட்டுத்தானே ? பாவம் வள்ளிப் பொண்ணு !'

"முத்தையா !"

சேர்வை ஏறிட்டுத் திரும்பினர், கல்லாவை மூடிக் கொண்டே. கனவுகள் கோலமிட்ட மனத்தை மூட வகை புரியவில்லைதான். "ஓ. அண்ணுச்சிங்களா ? வாங்க, வாங்க, அப்படிக் குந்துங்க!" என்று உபசரித்தார். தங்கப் பல் மின்னிற்று.

"சொகந்தானே ?"

"ஒங்க புண்ணியத்திலே சொகந்தானுங்க."

"வள்ளியம்மை ?"

"அதுவும்தானுங்க !"

தெய்வத்துக்குச் சேர வேண்டிய புண்ணியத்தைத் தட்டிகொண்டதில் ஒரு பெருமிதம். "வேறே விசேஷம் ஏதுணுச்சும்...?" என்று பரோட்டாவுக்குப் பிசைந்து வைத்த மைதா மாவாக இழுத்தார் பனங்குளம் அண்ணுச்சி. மீசை நரை கண்டாலும், ஆசை நரை காணுத—காண இயலாத புள்ளி அது. இல்லாவிட்டால், வீட்டிலே சந்தைக் கடையாக மனைவியும் மக்களும் நிரம்பி வழிய, இரண்டாம் தாரமாக ஓர் ஏழைப் பூஞ்சிட்டைக் கண்ணி வைத்துப் பிடித்துக் கொண்டிருப்பாரா ? ஜரிகைத் துப்பட்டா மினுக்கியதே !

அண்ணுச்சியின் வினு — விதியின் சவாலாகத் துளைத் திட்ட வினுவுக்கு முத்தையாச் சேர்வை என்ன பதில் மொழி வார் ? எப்படி விடை பகர்வார் ? பாவம் !

பாவ புண்ணியத்தின் ஐந்தொகைக் கணக்கு கேவலம் மனித ஜடங்களுக்குப் புரிந்துவிடுமா ? புரிந்து விடலாமா ?

"மற்றப்படி விசேஷம் ஏதாச்சும் உண்டா முத்தையா?"

"விசேஷம் என்னுங்க மாயமாக் குதிச்சிடப் போவுது ? நான்தான் கொடுத்து வைக்காத பாவி ஆகிப் பூட்டேனுங் களே, அண்ணுச்சி ?"

விதியை ஒத்துச் சிரிக்க ஆரம்பித்தார் அண்ணாச்சி, "முத்தையா, நீ பாவியா? ஊகூம், நான் ஒப்பமாட்டேன். நீயும் புண்ணியவான் ஆகலாம். ஆனால், நீதான் எம் பேச்சை ரோசிச்சுப் பார்க்கமாட்டேங்கிறியே? வள்ளியம்மை கிட்டே பயப்படாமல் ஒரு வார்த்தை சொல்லிப்புட வேண்டியது தானே? உன்னோட சொத்துச் சுகத்தைக் கட்டி ஆளவும் உங்களுக்கு எள்ளும் தண்ணியும் இறைக்கவும் உனக்கின்னு —உங்களுக்கின்னு ஒரு வாரிசு வேணுமாக்கும்? தைக்கெடு தப்புறதுக்குள்ளாற நீ துருசு காட்டித் தலையை அசைச் சிட்டா, நான் சொன்ன பூவாத்தகுடி குட்டியைத் திகைச்சிட வைச்சிடுவேன்" என்று உபதேசம் பண்ணினார்.

சேர்வை வழக்கத்தை மாற்றாமல் நெடுமூச்செறிந்தார். "ரோசனை பண்ணிச் செப்புறேனுங்க அண்ணாச்சி!" என்றார். முன்றானை விரித்த ஆசை வள்ளியம்மையின் பவித்திரமான அந்த வெள்ளைச் சிரிப்பை அவர் எப்போதுதான் மறந்தார்? விதிப் பேச்சை — விதியின் பேச்சை மடை மாற்ற வேண்டும் "தாகத்துக்கு ஏதாவது சாப்பிடுங்க, அண்ணாச்சி என்றார்.

அண்ணாச்சியின் முறுக்கு மீசை விழித்தது.

"இன்னிக்குப் பொங்கல். இன்னிக்கு நீங்க காசு பணம் தர வேண்டாமுங்க!

"ஓ, அப்பிடியா?...ம்...!"

டீ மாஸ்டரைத் தேடினார் சேர்வை.

அப்போது;

பலகாரம் பரிமாறும் கோவிந்தன் யாரோ ஒரு பொடி யனைத் தலை முடியை மூர்த்தண்யமாகப் பற்றிப் பிடித்தபடி வந்து கொண்டிருந்தான்.

கோவிந்தா! என்ன சங்கதி!"

"இந்தத் திருட்டுப் பொடிப்பயல் வள்ளிசா ஒரு ரூபாய்க் குத் தின்னுட்டுக் கொல்லையாலே ஓடப்பார்த்தான். கையும் களவுமாமாய் லாந்திப் பிடிச்சிட்டேன். காசு இல்லையாம்.

'சரிடா, மேல் சொக்காயைக் கழற்றுடா' அப்படின்னு சொன்னுக்க, 'முடியாது' அப்படின்னு சவடால் பேசுறுனுங்க, முதலாளி !''

சேர்வை ஏனோ அந்தக் சிறுவனே இமை கொட்டாமல் பார்த்தவண்ணம் இருந்தார். கண்கள் இரண்டும் ஏன் அப்படித் 'தொளி உழுத' வயலாகிவிட்டதாம் ?

கோவிந்தன், ''டேய், சட்டையைக் கழற்றுடா ! என்று ஆணே பரப்பினுன் மறுபடியும்.

''முடியாதின்னு முடியாதுதான் !'' சின்னப் பயலுக்கு இப்படியொரு நிர்தாட்சிண்யமான வாய் வீச்சா ?

முத்தையா சேர்வை முன்கோபி. என்றுலும், அப்போது அவர் மனத்தில் அந்தத் திருட்டுப் பயலின் திமிர்வாதம் பதியவில்லே, அந்தச் சிறுவனின் பால்வழியும் வதனம்தான் பதிந்தது.

பனங்குளம் அண்ணுச்சிக்கு மீசை துடித்தது. மீசை நரைத்தால் என்னவாம்? அது துடிக்கத் தெரியமாட்டாதா? ''முத்தையா ! என்னுத்துக்கு அப்பிடி மலேச்சிட்டே ? அந்தக் களவாணிப் பொடிசை உக்கிராணத்திலே போட்டு அடைச்சி'' என்று அடுத்த உபதேசத்தை முன்மொழிந்தார். அண்ணுச்சியா, கொக்கா ?

சேர்வை பனங்குளம்காரரையும் பொடியனேயும் மாறி மாறி—மாற்றி மாற்றிப் பார்வையிட்டார். 'மகமாயி ! எங்க எழுத்தும் நல்லதனமாய் விதிச்சிருந்தாக்க, வள்ளியம்மை வயிற்றிலேயும் ஒரு பூச்சி பொட்டு உண்டாகியிருந்தாக்க, இந்தப் பயல் கணக்கிலே வளர்ந்திருப்பானில்ல!'தொண்டையைக் கனேத்துக்கொண்டார்; மீசையை நீவிவிட்டார். லேஞ்சை எடுத்து முக விலாசத்தை லவகமாகத் துடைத்துக் கொள்ளவும் தெரிந்திருந்தது. அவர் பார்வை தடம் புரண்டது, திசை மறுகியது. ''ஏனப்பா, நீ யாரு ?'' என்று அடங்கிய குரலெடுத்து விசாரித்தார் முத்தையா சேர்வை.

"பார்த்தால் தெரியலியாங்களாக்கும்? நான் சின்னப் பையன்!"

சேர்வை வினயமாகச் சிரித்தார். "வாஸ்தவம்தான். அது தெரியாதாப்பா. நீ எந்த ஊர்?....உன் அப்பன் யார்? ஆத்தா யார்?" என்று அடுத்த விசாரணையைத் தொடங்கினார் அவர்.

சட்டைக் காலரை வெகு அமர்த்தலாகத் தூக்கி விட்டவனாக, சேர்வையை ஏகத்தாளமாக முறைத்தான் சிறுவன்.

"அந்தக் கேள்விக்கெல்லாம் விடை தர இது சமயம் இல்லே!....பசியைத் தாள முடியல்லே எனக்கு. அதாலே மூச்சுப் பிடிக்கச் சாப்பிட்டிட்டேன். மடியிலே காசு இல்லாமல் சாப்பிட்டது நியாயம் இல்லேங்கிறது தெரியும்தான். நான் என்ன செய்யட்டும்? பசிக்கு என் நிலைமை புரியாமல் பூட்டுதே?....சரி, விஷயத்துக்கு வாரேன். உங்களுக்குச் சேர வேண்டிய காசு பணத்துக்கு வேணும்னு அரை நாள் நான் உங்க அடுப்படியிலே கூலி வேலை பார்த்துக் கொடுத்துப்பிடுறேன். ஆனால், என்னோட சொக்காயைக் கழற்றச் சொல்ல உங்களுக்கு யாருக்கும் அதிகாரம் கிடையாதாக்கும்!" என்று சட்டம் பேசினான் பொடியன்.

அண்ணாச்சி எழுந்தார். அவரது காய்ப்புக் கண்டிருந்த கைகள் துருதுருத்தன.

அண்ணாச்சியை நோக்கிக் கையமர்த்தலானார் சேர்வை. "ஏ 'தம்பி! நீ செஞ்ச தப்பு உனக்குப் புரிஞ்சிருக்கு. அது போதும். நீ சாப்பிட்ட காசுக்கு வேலை வெட்டி ஒண்ணும் செய்ய வேணும். மூச்சு விடாமல் நடையைக் கட்டு!" என்றார் முத்தையாச் சேர்வை.

அதே அமர்த்தலோடு—அதே ஆணவத்தோடு அந்தச் சின்னப் பயல் முறைப்பாகவும் விரைப்பாகவும் தயங்கித் தயங்கி நடந்தான், வெளியே!

"நீ சுத்த மோசம், முத்தையா!"

முத்தையாவுக்கு அப்போதும் சிரிக்க மட்டுமே தெரிந்தது!

கல்லாகச் சமைந்திருந்த வள்ளியம்மை, திட்டி வாசலில் நடையன் சத்தம் கேட்டதுமே எச்சரிக்கை அடைந்தாள். மஞ்சள் பூச்சும் குங்குமத் திலகமும் பிசகாமல் வேர்வை முத்துக்களை ஒற்றியெடுத்தாள், கொண்டைப் பூச்சரத்தைச் சரிசெய்தாள். சரிந்து விழுந்து கிடந்த பொங்கல் பட்டினைச் சீராக்கிக் கொண்டாள். புதுக் கருக்குக் குலையாமல், "வாங்க மச்சான்!" என்று முகமன் மொழிந்தாள்.

தாய்ப் பசுவின் பால் மடியை நக்கி 'நப்பு'க் கொட்டிக் கொண்டிருந்தது வெள்ளைக் கன்று. வெண்மைக்கென்று ஓர் எழிற் கவர்ச்சியா?

முத்தையாச் சேர்வை அந்தக் கன்றை அள்ளக் குறையாத பாசத்தோடு—பாசப் பரிவோடு—பாசத் தவிப்போடு மெல்ல மெல்ல—மெள்ள மெள்ளத் தடவிக் கொடுத்தார். கைகள் காற்றிடை அல்லாடித் தள்ளாடும் மலர்களாக நடுங்கின.

வள்ளியம்மையின் விழி முனைகள் கசிந்தன. அவள் தன் அன்புக் கணவனையும் அந்தப் பசுங் கன்றையும் மாறி மாறிப் பார்த்தாள். வெய்துயிர்ப்பு சுட்டது,

"வள்ளியம்மை!" என்று அன்போடும் பாசத்தோடும் நேசமுற அழைத்த முத்தையாச் சேர்வைக்காரர் தம் அருமை மனைவியையும் அந்த வெள்ளைக் கன்றுக் குட்டியையும் நோக்கினார். நெஞ்சிடை நீக்கமற நிறைந்து பிரதிபலிப்புச் செய்த வண்ணம் இருந்த அந்த வெள்ளை நிறத்தில் விளைந்த அமைதியோடு அவர் வள்ளியம்மையை மறுபடியும் ஊடுருவினார். 'வள்ளிப் பொண்ணே! நம்பளோட ஆசைக் கனவை எப்பத்தான் ஆயி மகமாயி பலிதமடையச் செய்யப் போகிறாளோ, விளங்கலையே?'

"வாங்க மச்சான், பசியாறலாம்!"

" ஆகட்டும் ! " என்று தலையை உலுக்கினார் அவர். 'இந்தப் புண்ணியவதிக்கு மனசு இரங்காமல் ஆத்தா கல்லாகிப் போயிருக்காளே ? என்னோட வள்ளிக்கும் குழந்தை ஏக்கம் என்னை மாதிரி மிதமிஞ்சி இருக்கத்தான் இருக்கு. அதுக்காக...பிள்ளை குட்டிக்காக இரண்டாந் தாரமா ஒருத்தியைக் கண்ணாலம் கட்டிக்கலாம்னு யோசிக்கிறேன்னு எந்த முகத்தை வைச்சுக்கிட்டு என் வள்ளித் தெய்வத்துக்கு முன்னாடி நான் வாய் தூக்க ஏலுமாம் ?...சுத்தப் பைத்தியக்காரராய் இருக்காரே அந்த அண்ணாச்சி ?', நடையில் நடை தொடர்ந்தார் சேர்வை.

" என்னாங்க மச்சான் ஓரே முட்டா ரோசனையாய் நிக்கிறீங்க ? "

சேர்வை விழித்தார் ; விழித்தவருக்குச் சமாளிக்கத் தெரிந்தது. "ஒண்ணுமில்லையே ?...நான் ஒண்ணும் ரோசனையாய் நிற்கல்லியே ? நீதான் என்னமோ ரோசிச்சுக்கிட்டு இருக்கிறதாட்டம் படுது, வள்ளிக்குட்டி ! " என்று புன்னகை செய்தார்.

அவர்களது ஆதர்சத் தாம்பத்தியச் சிரிப்பு வடமூலைச் சுவரில் விதியாய்—வினையாய்—தெய்வமாய், புதிர்ச் சிரிப்பை அறக் கருணையோடும் மறக் கருணையோடும் வெளிப்படுத்திய வண்ணம் நின்ற அந்தப் பால முருகனின் அந்த அழகுச் சிரிப்பில் பிரதி பலித்தது.

" நம்ப ரெண்டு பேர் ரோசனையும் நமக்குப் புரிஞ்ச கதைதான் ; தெரிஞ்ச காரணந்தான். ஆனால் ஆத்தாளுக்கில்லா அது புரிய வேணுமுங்க, மச்சான் ! "

வெள்ளித் தட்டில் பொங்கல், வடை, இட்டிலி எல்லாம் காட்சி கொடுத்தன.

சட்டையைக் கழற்றிக் கட்டிலில் வீசிவிட்டு விரிப்பில் குந்தினார் முத்தையா. கழற்றிப் போட்ட சட்டையின் பின்புலத்தில் கழற்றாத சட்டையோடு காட்சி தந்து மறைந்து

விட்ட அந்த அழகுச் சிறுவன் நிழலாடியிருக்க வேண்டும். அன்பின் ஈரம் விழிகளுக்குத் தாவியதோ ?

"ம்...சாப்பிடுங்க !"

"ஊம் !"

சேர்வைக்காரர் கருக்கரிவாள் மீசையை ஒதுக்கி விட்டுக் கொண்டு, பொங்கலைக் கிள்ளி ஒரு துணுக்கை எடுத்து வாயில் போட்டுக் கொள்ளப் போனார்.

அதற்குள் :

"ஐயா !"

அவர் நிமிர்ந்து பார்த்தார். புதையல் எடுத்த தனமாக அவரது நெஞ்சில் அந்தரங்கத்தில் குதூகலம் பிசிறு தட்டி ஊற்றெடுத்தது.

'யாரு இந்தப் பொடிசு ?' வள்ளியம்மை இனம் புரியாத் தவிப்படைந்தாள் ; இனம் புரிந்த பாசத்துக்கு அடிமைப் பட்டாள் ; அவனை விழுங்கி விடுபவள் மாதிரி பார்த்தாள்.

"வாப்பா, தம்பி, வா !"

தேநீர்க் கடையில் 'தரிசனம்' கொடுத்துச் சென்ற அந்தப் பொடியன் அதே பழைய அமர்த்தலோடும், ஆணவத் தோடும் அகம்பாவத்துடனும் சிரித்தான். விதியைப் போலவா ? இல்லை, தெய்வத்தைப் போலத் தானே ?

"குந்து, தம்பி !" என்றார் சேர்வை. இந்தச் சிறுவனைப் பற்றி வள்ளியம்மையிடம் சொல்ல வேளை கணித்துக் கொண் டிருந்தவர் சேர்வை. இப்போது, அவனே வந்து விட்டானே? இவன் கதையைக் கேட்டு, எல்லாம் அனுசரணையாக வாய்த் தால் இவனையே 'சுவீகாரம் எடுத்துக்கொண்டால் என்ன ? ஆத்தா மகமாயி !...' பாசம் புதுப்புனலாயிற்று.

"தம்பீ, உட்காரேன் !"

"தம்பியா ? திரும்பத் திரும்பச் சொல்றீங்களே ? நான் உங்க தம்பியா ?"

“ பின்னே ?”

“ நான் உங்க மகன் !” என்று முழங்கினன் அந்தப் பையன்.

“ என்ன ?” என்று அதிர்ந்தார் முத்தையாச் சேர்வைக் காரர்.

‘ஆ !’ என்று மலைத்தாள் வள்ளி பம்மை.

“ என்ன அப்பா நடிக்கிறீங்க ?...உங்களுக்குச் செல்லாயியை மறந்து போயிடுச்சுதா ?. .ஆசை காட்டி மோசம் செய்த அந்தப் பழங் கதையை நீங்க மறந்திடலாம், ஆனல், தெய்வம் மறந்திடுமாக்கும் ? அந்தப் பாவம் பழிக்குத்தானே உங்களை மகமாயி சோதிச்சுக்கிட்டு இருக்கா ; அந்தத் துப்புக்கூடவா உங்களுக்கு இன்னமும் அத்துபடியாகலே ? சாட்சிக்கு என்னைப் பெற்ற புண்ணியவதியையும் கையோட இட்டுக்கிட்டு வரத்தான் நினைச்சிருந்தேன். ஆனல், என் ஆத்தா திடுதிப்னு மாரடைப்பிலே கண்ணை மூடிக்கிட்டுது. ஒரு நாள் முச்சூடும் பச்சைத் தண்ணி பல்லிலே படாமல் குந்தி யிருந்து அழுதேன். அந்தப் பசியோடதான் உங்க கடையை இனம் கண்டுக்கிட்டு புகுந்து சாப்பிட்டேன், காலம் பற. நாலு பேருக்கு முன்னே ஊருக்கு ஓசந்த உங்க மானத்தை வாங்க வேண்டாம்னு மனசு இரங்கினேன். நான் கும்பிடுற என் ஆத்தாளோட கடைசி ஆசைப்படி, நான் உங்ககிட்டே வந்திருக்கேன் ! ஆயி மகமாயி கட்டளையும் என் விதியும் இப்படித்தான் இருக்க வேணும் போல !”

சிறுவனின் பேச்சில்தான் எத்தனை கம்பீரம் ! எவ்வளவு சோகம் ! மடை திறந்த வெள்ளமாக விழிப் புனல் உடைந்தது.

“ மகனே !” என்று வீறிட்டுக் கதறிய முத்தையாச் சேர்வை உணர்ச்சி வசப்பட்டவராக ஓடிப்போய் அந்தச் சிறுவனை அப்படியே வாரி யணைத்துக் கொண்டார்.

“ அப்பா ! அப்பா !”

சிறுவன் விம்மினன்; சிருமினன். பாசத்தின் அரவணைப்புத் தாங்காமல்தான் அவன் அப்படித் திணறுகிருனே? சட்டைப் பையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தன பிஞ்சுக் கரங்கள்

வள்ளியம்மை சிலையானுள்.

சிலைக்கு உயிர் இருக்குமோ?

சேர்வை திரும்பினர். அவர் தன்னுடைய அன்பு மனைவியின் தவிப்பையும் துயரத்தையும் உணர்ந்து அவளை ஆறுதல் படுத்தும் வகையில் என்னவோ ஓர் அர்த்தத்துடன் அவளைக் கண்களால் நோக்கி அமைதியாகுமாறு அடையாளம் செய்தார். "வள்ளிப் பொண்ணு! நம்ப மகன் சொன்னது சாடாவும் மெய்யான தாக்கல்தான். என்னைப் பெரிய மனசு வைச்சுச் சமிச்சுப்பிட மாட்டியா?" கெஞ்சினர். தாயைக் கெஞ்சாதா பிள்ளை, அப்படி!

"மகனே!" வள்ளியம்மையின் அன்பெனும் பிடியில் அடங்கினன் அச்சிறுவன். "ஆத்தான்னு கூப்பிடுடா, எந் தெய்வமே!...எங்க தெய்வமே!" என்று விம்மினள் அவள்.

"ஆத்தா!...ஆத்தா!"

ஓடிப் போய் ஓடிவந்தாள் வள்ளியம்மை. புதிய வெள்ளித் தட்டில் பொங்கல், வடை, இட்டிலி எல்லாம் இருந்தன. "மகனே, சாப்பிடப்பா! என்று கெஞ்சினள்.

"ம்...சாப்பிடப்பா!" என்று வேண்டினர் சேர்வைக்காரர்.

அந்தச் சிறுவன் கண்ணீரைக்கூடத் துடைத்துக் கொள்ளாமல் அவர்கள் இருவரையும் மாறி மாறி மாற்றி மாற்றிப் பார்வை பரப்பினன். மறுகணம் நமட்டுச் சிரிப்பொன்று வெடித்துச் சிதறியது! "ஐயா! நீங்களும் உங்க சம்சாரமும் தெய்வமேதான்! நான் பாவி! மன்னிக்க முடியாத நாதியத்த பாவிப் பயல் நான்!...என்னைப் பெற்ற அப்பனையும் ஆத்தாளையும் யாரின்னே தெரிஞ்சுக்கவும் கொடுத்து வைக்காத பாவி ஆகிப் போன நான் அப்பனுக்காகவும் ஆத்தாளுக்

காகவும் ஏங்கித் தவிச்சுத் துடிச்சுக்கிட்டு அலைஞ்சேன். சாகுறதுக்குள்ளே ' அப்பா, ஆத்தா ' அப்படின்னு ஆசை தீர ஒரு வாட்டி, ஒரேயொருவாட்டியாச்சும் கூப்பிட்டு நிம்மதியடைஞ்சிடக் கனு கண்டேன். அதுக்காகத் தான் பொய்க் கூத்து ஆடினேன். அந்தக் கூத்து விஷப்பரீட்சை ஆகிடலே· மகமாயி இந்தமட்டுக்கும் என் வரையில் நல்லவள் தான் !... என்னை மன்னிச்சுடுங்க. போய் வரேன்.'' விம்மினுன் அவன்·

வள்ளியம்மையின் பாசம் உருகிவழிந்த கண்களிலே ஏக்கத்தின் தவிப்பு நிழலாடியது. அச் சிறுவனை அண்டினுள் : “ தம்பி, நாங்க இதுவரை அனுதை கணக்கிலேதான் இருந்தோம். ஆனு, உன்னைக் கண்ட மாத்திரத்திலே எங்க ஆசைக் கனவு அநாதை இல்லே என்கிற உண்மையை அம்மன் என் நெஞ்சத்திலே உணர்த்தி விட்டாள் ! நீ இனி எங்க செல்லப் பிள்ளையேதான் ! ஆமாண்டா கண்ணே !''

பாசம் உருகி வழிந்து சிரித்துக் கொண்டிருக்கிறது !,..

—ः ✱ ः—

பிரபல சினிமா நட்சத்திரம் மாயா நிலைக்கண்ணுடியின் முன் நின்று விழுங்கும் விழிகளால் ஒரு முறை தன் அழகின் பூரணத்துவத்தின் எல்லையைக்கணக்கிடுவது போல ஏறிட்டு நோக்கிஞள். மை தீட்டப்பட்ட வில் புருவங்களின் மத்தியில் ஒளி உமிழ்ந்த திலகமும், சிருங்காரம் கொப்பளிக்கப் ‘புட்டாமா’ பூசியிருந்த வதனத்திடையே மிளிர்ந்த உதட்டுச் சாயமும் அவள் மனதிற்கு அன்று நிரம்பவும் பிடித்திருந்தன. இடையில் மின்னிய ஒட்டியாணத்தைச் சிறிது தளர்த்திஞள். போதை யூட்டும் ரீதியில் அவள் மேலாடை சற்றே நெகிழ, கவர்ச்சி கனிந்தது.

தயாராக நின்ற காரில் ஏறிக் கொண்ட மிஸ் மாயா ஸ்டுடியோவை அடைந்ததும் அவளை வரவேற்க இன்முகங் காட்டி ஓடி வந்தார் டைரக்டர் சந்திரமௌலி.

“டைரக்டர் ஸார், ரொம்ப டைம் ஆகிவிட்டது போல் இருக்கிறது. கோபமில்லையே! டிரெஸ்ஸிங்கில் இன்று கொஞ்சம் அதிகப்படியான கவனம் எடுத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது” என்று தன் இதழ்களில் புன்னகை மலர் தூவிக் குழையும் குரலில் சொல்லி விட்டு வெண்ணிலவு சிதறும் நெற்றியில் முத்து முத்தாகப் பூத்திருந்த நீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டாள் மாயா.

"பரவாயில்லை மாயா. உன் வரவிற்குத்தான் எல்லோரும் அப்போதிருந்தே காத்திருக்கின்றனர். அன்னை பூமி' படத்தில் உன் 'ஏ ஒன்' வெற்றிக்குத் தங்கள் சந்தோஷத்தை நேரிலேயே சமர்ப்பித்துப்போக ஆசைப்பட்டுத்தான் ரசிகர்களும், அபிமானிகளும் கூடியுள்ளார்கள்" என்று சொல்லி, மாயாவின் பூங்கரங்களைப் பற்றியபடி உள்ளே நுழைந்தார் டைரக்டர்; சிகரெட்டின் பின்னல் புகை உயர்ந்தது.

இருவரையும் ஜோடியாகக் கண்டவுடன் காத்திருந்தவர்களின் முகங்கள் சந்தோஷத்தால் மலர்ந்தன, 'டின்னர்' தொடங்கியது. பிரசித்தி வாய்ந்த நடிகை மிஸ் மாயாவின் முழு ஜெயத்திற்குத் தங்கள் உள்ளக் களிப்பைத் தெரிவித்துக்கொண்டதுடன், அன்புப் பரிசுகள் பலவற்றையும் வழங்கினர். டின்னர் முடிந்தது. மாயாவை நேரில் பேட்டி கண்டு கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது பெரிய அதிர்ஷ்டம் எனக் கருதியவர்கள் போன்று ரசிகர் குழாம் கலைந்தது. அன்றைய மாலை நிகழ்ச்சி பூராவையும் கண்ட அவளுக்கு அனைத்தும் ஒரு கனவு போலவேதான் தோற்றம் கொடுத்தது. மாயாவின் மார்பகம் ஒரு கணம் விம்மித்தாழ, ஆழ்ந்த பெருமூச்செறிந்தாள்.

அப்புறம் அதிக நேரம் டைரக்டரும் மாயாவும் அளவளாவிப் பேசி மகிழ்ந்தனர் என்பதற்கு கட்டியங் கூறுவது மாதிரி, தரையில் சிதறிக் கிடந்தன சிகரெட் துண்டுகள் பல. அவர்களுடைய இழை பின்னிக் கிடந்த மோன நிலையைக் கலைத்தது சுவர்க் கடிகாரம். மாயா விடைபெற்றுக் கொண்டாள். சந்திரமௌலி அவளைப் பிரியா மனதுடன் வழியனுப்பி வைத்தார்.

* * *

திரைப்பட உலகில் ஈடுசோடில்லாத ஓர் சிறந்த சினிமா ராணி மாயா வயதும் வாலிபமும் சந்திக்கும் வளம் கொழிக்கும் பருவம். இளமை அவள் கோமள மேனிக்குப் புது மெருகிட்டது. சங்கீதம், நடிப்பு, சௌந்தரியம் அவளிடம் சங்க

மித்திருக்கையில் சினிமா வானில் பிரத்தியேக ஸ்தானத்தை அவள் ஸ்வீகரித்துக் கொண்டதில் வியப்பில்லைதான். ஆனால் மிஸ் மாயா ஒரு காலத்தில்-அதாவது இரண்டு வருஷங்களுக்கு முன்—சர்வ சாதாரணமான வெறும் கோகிலமாகவே இருந்து வந்தாள். இளமை தொட்டே சினிமா என்றால் அவளுக்குப் பிராணன். புதிது புதிதாக 'ரிலீஸ்' செய்யப்படும் படங்களின் தராதரத்தை எடை போட்டுச் சீர் தூக்கும் 'க்ரிடிக்'க்கின் பண்பாடு அவளிடம் அப்போதிருந்தே அடைக்கலம் புகுந்திருந்தது. இத்தகைய நிலையில் எப்படியும் சினிமாவில் சேர்ந்துவிட வேண்டுமென்ற ஆதுரம் மட்டும் அவள் இதய அந்தரங்கத்தில் ஏதோ ஒரு மூலையில் தூங்கிக் கிடந்தது.

அதே சமயம், 'படத்தில் நடிக்கப் புது முகங்கள் தேவை' என்ற விளம்பரம் அவள் பெண் நெஞ்சத்தில் பால் வார்த்தது. பலதரப்பட்ட 'போஸ்'களில் புகைப் படத்தை அனுப்பினாள். எதிர்காலத்தின் புகழுக்கு முகமன் கூறி வெற்றியுடன் பதில் வந்தது. கிளம்பினாள். திரையுலகம் ஊக்க மூட்டி வரவேற்றது. கோகிலம், மிஸ் மாயாவாக மாறினாள் —அதாவது, மாற்றப்பட்டாள்!

ஆண்டவனது சிருஷ்டி மேடைக்கு மாயா ஓர் உன்னத எடுத்துக் காட்டு. அவளுடைய அழகின் தேஜஸ், அருவியின் மெல்லிய ஓசைபோல் சிரிக்கும் பாணி, தன் பாகத்தை உணர்ந்து செவ்வனே நடிக்கும் லட்சியம்—இவை அவள் மேதைக்கு முத்திரையிட்டன. அதன் காரணமாக டைரக்டரது அன்பிற்குப் பாத்திரமானாள். டைரக்டர் சந்திர மௌலி இளம் வயசு, எம். ஏ. பட்டதாரி. சிறந்த கலா ரசிகர். மாயாவைத் தான் எடுக்கும் முதல் படத்திலேயே எப்பாடு பட்டும் 'பிலிம் ஸ்டார்'ராக்கி விடுவதென்றும் திட்டமிட்டிருந்தார்.

"அன்னை பூமி" என்ற படம்தான் அவருடைய முதல் சிருஷ்டி, தானே வில்லன் பாகமேற்று நடித்தார். பொது மக்களின் உள்ளத்தை எளிதில் கவரத்தக்க முறையில் காமிக்

தேசியம், ஹிந்தி ட்யூனில் அமைக்கப் பெற்ற பாட்டுகள் போன்ற தந்திரங்களைக் கையாண்டார். வெற்றி கிடைத்தது. எதிர்பார்த்ததற்கு மேல் மாயாவின் புகழ் உச்சி மேவிற்று. பத்திரிகைகள் மாயாவைப்பற்றிப் பத்தி பத்தியாக எழுதின,

இவ்விதம் மாயாவை மருவி வந்து கொண்டிருந்த மதிப்பையும், புகழையும் கண்ட டைரக்டருக்கு அவளைத் தன் துணைவியாக்கிக் கொள்ள ஆவல் பிறந்தது. விஷயத்தைப் பிரஸ்தாபித்தார். மாயாவிற்கும் அந்த எண்ணம் சரியெனவே பட்டது. மேலும் அப்போதுதான் கண்கொத்திப் பறவைபோல் தன்னைப் பற்றிக் கண்காணித்துவரும் சமூகத்தின் சூழ்நிலையிலிருந்து தப்ப முடியும் என்பதையும் தீர உணரலானாள். பின் சம்மதமும் கொடுத்தாள். அடுத்த படப்பிடிப்பு முடிந்ததும் தம்பதிகளாக எண்ணினர்.

'அன்னை பூமி' சம்பாதித்த புகழின் வெற்றிச் சுவட்டிலேயே அடுத்தபடியாகத் தயாரிக்கப் போகும் 'மாயா மோகினி' படத்தின் கதாநாயகனாக நடிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த் ஜோதிநாத் என்னும் புது நடிகரை மாயாவிற்கு அன்று அறிமுகம் செய்து வைப்பதாக டைரக்டர் வாக்களித்திருந்தார். சாயங்காலம் ஸ்டுடியோவிற்குப் புறப்பட ஆயத்தம் பண்ணிக் கொண்டிருந்த அவள் பெண் மனதில் ஏதேதோ எண்ணங்கள் அலைபாய்ந்தன. தன்னுடன் முக்கிய பாகமேற்று நடிக்கவேண்டிய அப்புது மனிதர் எவ்விதம் இருப்பார், பழகும் விதத்தில் எத்தகைய மனப்பான்மையுடையவரோ என்பது போன்ற நினைவுச் சுழற்சியில் அயர்ச்சியுற்றாள் ஏனென்றால், முதல் படத்தில் முக்கிய பாகத்தை டைரக்டரே ஏற்றுக் கொண்டார். நெடுநாளாகப் பழகிப் போனதால் அவருடன் ஒட்டி நடிப்பதில் லவலேசமும் அதிர்ச்சியோ அல்லது திகிலோ ஏற்படவில்லை மாயாவுக்கு ஆனால் ஜோதிநாத் ...?

இவ்விதம் மனம் சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில் 'மிகவும் ரகசியம்' என்று 'டேஞ்சர் சிக்னல்' காட்டி நின்ற தபாலை

நீட்டினுன் வேலைக்காரப்பையன். பதட்டத்துடன் அதைப் பிரித்துப் படித்தாள்.

" அம்மணி '

முன்னும் பின்னும் தெரிந்திராத இடத்திலிருந்து இக் கடிதம் வருவது கண்டு நீங்கள் ஆச்சரியப்படலாம். அதிசயப் படலாம். ஆனுல் பாலை நிலத்தில் காயும் நிலவு போன்று என் வாழ்நாட்கள் வீணுகிவரும் துரதிருஷ்டத்திற்கு விடிவு ஏற்படத் தங்களது கருணைதான் வேண்டும். வேடிக்கையாகத் தோன்றலாம். வெளியிட்டுக் கூறிவிடுகிறேன். அன்று அக்னி சாட்சி'யாக வரித்துக் கரம்பற்றிய என் பதி, தங்கள் டைரக்டர். தாங்கள் விரித்த மாயவலையில் சிக்கிவிட்டார் என்பது சிலதினங்கள் முன்னர்தான் தெரியும். கோபிக் காதீர்கள் நைந்துபோன என் இடிந்த இதயத்தின் சோகக் குமுறல்கள்தான் இவை. ஆனுல் இந்த அபலை உங்களிடம் காதல் பிச்சைமட்டுமே வேண்டி நிற்கிறேன். என் கணவரைத் தயவுபண்ணி என்னிடம் வந்துசேர உதவி புரியுங்கள். அன்று பிரிந்த அவர் பிரிவை இனியும் சகிக்க முடியாது. கண் நிறைந்த கணவனின் கனிவு முகத்தை ஒருதரமேனும் தரிசித்துத் தாலி பாக்கியம்பெற அருள் புரியுங்கள். மண்டியிட்டு மன்ருடிக் கேட்டுக் கொள்ளு கிறேன். இதுவே என் தாழ்ந்த வேண்டுகோள்.

லக்ஷ்மி"

அத்துமீறிச் சுழன்ற நடிகை மாயாவின் மனத்திரையில் டைரக்டருடன் பழக்கம் ஏற்பட்ட நாட்களின் முக்கிய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்ருகச் சினிமாப் படம்போல் ஓடலாயின. அதுவரை டைரக்டர் கல்யாணமாகாதவர் என்றே நம்பியிருந்தாள். அப்படித்தான் ஆரம்பமுதல் அவரும் உறுதி சொல்லிவந்தார். ஆனுல் ...!

அதே தருணம் தோட்டத்தின் மரக்கிளை யொன்றி லிருந்து கூண்டினுள் சிறைபுகப் போகும் குயிலின் சோக கீதம் காற்றில் மிதந்து வந்தது. மாயா திகைத்தாள். உள்ளத்தை வெளிக்காட்டிய மதுர மோகன கீதத்தின் பண்பாட்டில்

டைரக்டரின் கைபிடித்த மனைவியின் ஒடிந்த உள்ளத்தின் அவல ஓலம் எதிரொலிப்பது போன்ற பிரமை எழுந்தது அவளுக்கு. கைகோர்த்த புருஷன்—மனைவியரிடையே நிலவ வேண்டிய மனமொன்றுபட்ட பாந்தவ்யம்—அன்பின் இணைப்பில் உருவகிக்கும் பாசத்தின் பின்னல் அறுந்துபோய்விடக் காரணம் அவளே என்பதை உணர்ந்த மாயாவின் இமை வட்டங்களில் விளிம்புக் கோடிட்ட நீரை மெல்ல ரோஜா விரலால் துடைத்தாள்.

ஆனால் அவள் குற்றவாளியா? ஒருக்காலுமில்லை. மன மறிந்த விதமாக அவள் யாருக்கும் குந்தகம் விளைவிக்க வில்லைதான். டைரக்டர் அவளை ஏமாற்றி விட்டார். எப்படியும் டைரக்டரது கபட வேஷம் வெளிப்படக் காலம் வழிவகுக்கும் என்ற திட நம்பிக்கையில் மனம் தேறினள். அத்துடன் டைரக்டரது சகவாசத்தை எவ்விதத்திலும் ஒடுக்கிவிட முடிவு செய்துவிட்டாள்!

* * *

ஸ்டுடியோ ஞாபகம் அப்பொழுதுதான் வந்தது. புறப் பட்டாள். அவள் உள்ளம் சாந்தி நிறைந்தது. இமைப் போதில் புயல் கிளம்பிற்று! புயல் வீசியது. பின்னர் புயல் அடங்கி அமைதி; ஆம். விந்தைதான்!

ஜோதிநாத்தை மாயாவிற்கு அறிமுகம் செய்து வைத்தார் .டைரக்டர். ஆனால் அந்த முதல் சந்திப்பில் இரு நடிகர்களிடையேயும் கனிந்த கனவின் மயக்கத்தை ஜாடை யாகக் கவனித்துவிட்ட டைரக்டருக்கு என்னவோ போல் இருந்தது. இருந்தும் வெளிக்காட்டிக் கொள்ள இயல வில்லை. ஒரு சில தினங்கள் தேய்ந்தன. மாயாவும் ஜோதிநாத்தும் நெருங்கிப் பழகினர். டைரக்டரது வஞ்சகத்திற்குப் பரிகார மாக ஜோதிநாத்திடம் ஏற்பட்ட பரிச்சயம் புனிதத்தன்மை வாய்ந்தது என எண்ணிப் பூரித்தாள் மாயா. தன் இதயத் தாமரையே மலர்விக்கச் சக்திபெற்ற பிரேமைக் கதிர்கள் ஜோதிநாத்திடமே நிலவியுள்ளன என்பதையும் நிர்ணயித்துக் கொண்டாள்.

* * *

அன்றுதான் "மாயாமோஹினி" படத்தின் ஷூட்டிங் ஆரம்ப தினம்.

குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேரவேண்டிய மாயாவும் ஜோதிநாத்தும் இன்னும் வரக் காணுமே என்று எண்ணிய டைரக்டர் சந்திரமௌலிக்கு அவர்கள் மீதிருந்த சந்தேகம் வலுத்தது. டைரக்டருக்கு ஜோதிநாத் பேரில் ஏற்கெனவே ஒரு 'கண்' உண்டென்பதை அவர் அறிவாரோ என்னவோ? ஆனால் மாயா நன்கு அறிவாள் அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை வகுத்து, தனது வாழ்வின் எதிர்காலத்திற்கு ஸ்திரமிடுவ தென்பதே அவளுடைய அந்தரங்கம்.

ஒன்று, பத்து, நூறு, ஆயிரமாகச் சிந்தனைகள் பெருகி அதன் நடுவில் சஞ்சரித்த டைரக்டருடைய மூளை குழம்பிற்று. காலம் கடந்து மாயாவும் ஜோதிநாத்தும் காரிலிருந்து இறங்கி ஸ்டைலாக ஒயிலுடன் நடந்து உள்ளே நுழைவதைக் கண்டதும் சந்திரமௌலியின் கோபம் சுடர் தெறித்தது. ஏற்கெனவே புது நடிகரைப் பற்றிக் கொண்டிருந்த சந்தேகப் பொறி ஜ்வாலை யிட்டது. கண்மூடி கண்திறக்கும் நேரம் சிந்தித்தார். இதே ரீதியில் மாயா, ஜோதிநாத்திடம் படம் பிடித்தாகும் வரை பழக நேரிட்டால் ஒரு வேளை தன்னை நிராகரிக்கவும் நேரிடலாம் என்ற ஐயம் அவர் மனஉதச் சாறு பிழிந்தது. அப்புறம் திரையுலகில் தன் பெயர்...? என்றும் மாயா தன் ஏகபோக உரிமை என்பதாய்க் கனவு கண்டு வந்தவர் டைரக்டர். ஆனால் அந்தக் கடிதம்......?

புது நடிகரை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "மிஸ்டர் ஜோதிநாத்! எங்கள் புதுப் படத்தின் 'எக்ரிமெண்ட்'டிலிருந்து உங்களை விலக்கிவிட்டேன். மன்னிக்கவும்" என்று எடுத்த எடுப்பிலேயே டைரக்டர் மொழிந்ததைக் கேட்ட மாயா திடுக்கிட்டு மலைத்துப் போனாள். புது நடிகரும் ஸ்தம்பித்தார். இத்தகைய திடீர் மாறுதலின் காரணத்தை அனுமானித்தாள் மாயா.

"டைரக்டர் ஸார், இப்பொழுது நன்றாகப் புரிந்து விட்டது உங்களின் கபடநாடகம்-வெளிப் பூச்செல்லாம்,

நான் உங்களுக்குப் பாத்யதை அற்றவள் என்பதை நான் உணர்ந்துகொண்டு—என் மனச்சாட்சி அறிவுறுத்தி நாட்கள் பல ஆகப் போகின்றன. ஜோதிநாத் உங்கள் கண்ணை உறுத்திக் கொண்டேயிருந்த ரகசியத்தையும் நான் அறியாமலில்லை. ஆனால் உங்களுக்கு, முன்பே மணம் புரிந்து வைத்த துணைவி ஒருத்தி உண்டென்பதை இதுகாறும் மறைத்து வைத்து ஏமாற்றியது ஆச்சரியமே! உங்களைக் கைபிடித்த மனையாள் பொழியும் துயரக் கண்ணீரின் அடித் தளத்தில் என் மன மாளிகையை இன்ப மயமானதாக நிர்மாணிக்க என் பெண் மனம் ஒரு போதும் இடம் தராது".

மிஸ் மாயா இப்படிப் பேசினாள். அவளே தான் கண்டித்துப் பேசினாள், பெண்மை முன்னின்று பேசியது. அந்தப் பேச்சிலே உக்கிரம் உதயமானது. பிறகு அன்று வந்த கடிதத்தையும் அவரிடம் நீட்டினாள்.

"டைரக்டர் ஸார், தாங்கள் என்னை இத்துணை தூரம் முன்னேற்றிவித்தமைக்கு என் நன்றியும் வணக்கமும். ஆனால், புதுப்பட ஒப்பந்தத்தை விட்டு நானும் இப்பொழுதே விலகிக் கொள்கிறேன். மன்னியுங்கள்" என்று கூறிய மாயா 'விர்'ரென்று கிளம்பினாள். ஜோதிநாத் அவளைப் பின்பற்றினார்.

மாயாவின் இத்தகைய-கனவில் கூட எதிர்பாராத-முடிவை நினைத்து மனம் ஒடிந்த டைரக்டர், மாயா சென்ற வழியில் பதித்திருந்த விழியைத் திருப்பினார். கையில் பிரித்திருந்த கடிதத்தைத் திரும்பவும் பார்த்தார். அவர் கண்களில் கண்ணீர் பிரவகித்தது. மறுகணம் அப்படியே சிலையாய்ச் செயலிழந்து அமர்ந்து விட்டார் சந்திரமௌலி.

# காந்தி

சப்சிப் !—

பயங்கரமான நிசப்தம்.

மூன்றும் வகுப்பு.

வாத்தியார் வேலாயுதம் கைப் பிரம்பை மேசைமீது பலமாகத் தட்டிவிட்டு, "ஊம் , சொல்லிடுங்க. என்னோட புது பார்க்கர் பேனவை யார் எடுத்தது ? மரியாதையாய்ச் சொல்லிடுங்க !" என்று எதிர்ப்புறம் விழிகளை நிமிர்த்திக் கோபாவேசத்தோடு கேட்டார்.

" நான் எடுக்கலீங்க ஸார் !—இந்த ஒரே பதிலைத்தான் இருபத்தி நாலு சிறுவர்களும் ஐந்து சிறுமிகளும் ஒரே குரலெடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அத்தனை பேருடைய முகங்களும் பீதியாலும் கவலையாலும் உருமாறிப் போயிருந்தன.

வாத்தியார் தன்னுடைய டெரின் ஸ்லாக்கின் பையைப் பரிதாபமாகத் தடவிப் பார்த்தார் ; மேஜையின் இழுப்பறையை இழுத்தார் ; கண்களைத் துழாவினார். சோகம் மிஞ்சியது முகத்தில். வகுப்பை ஏறிட்டு நோக்கினார். முகத்திலே எள் மட்டுமல்ல ; கொள்ளும் வெடித்தது. இளரத்தம்

விழிகளில் சரம் கட்டியது. இளவட்டம் அல்லவா ?— " இதுக்கு முந்தின பீரியட்டிலே தான் சத்திய கீர்த்தி அரிச் சந்திரன் பாடம் நடத்தினேன். பொய் சொல்லக்கூடாது அப்படின்னு படிச்சுப்படிச்சுச் சொல்லிக் கொடுத்தேன். காந்தித் தாத்தாவோட கதையையும் உதாரணம் காட்டி னேன். பீரியட் முடிஞ்சதும், ஹெட்மாஸ்டரைப் பார்க்கப் போனேன். அந்த அவசரத்திலே என் பார்க்கரை இங்கே மேஜை மேலே வச்சிட்டுப் போனேன். அடுத்த பீரியட்டுக்கு மணி அடிச்சதும் வந்து பார்த்தால், பேனவைக் காணும் ! ..." என்றார். அவர் குரலிலே பேனு காணுமற்போன வேதனை மட்டுந்தானு குரல் கொடுத்தது ?..

ஆசிரியர் வேலாயுதம் கணக்குப் புத்தகத்தைப் பிரித் தார்.

அப்போது, " ஸார், இந்தப் பயல் ராமையா ஒரு புதுப் பேனு வச்சிருக்கான் ஸார், பை மூட்டைக் குள்ளாற !" என்றான் அருகிலிருந்த விநாயகம். பெயர்தான் அப்படி ; மற்றபடி ; விநாயகருக்கு உண்டான லட்சணங்களில் ஒன்று கூட மிஞ்சியிருக்க வில்லை வாண்டுப் பயலிடம்.

ராமையா பேரில் வாத்தியாரின் திருஷ்டி விழுந்தது. அவனுக்குத் திருஷ்டி கழிக்கவா ?—ஊஹூம் ! " டேய், இங்கே வாடா !" என்று அதட்டல் போட்டார்.

ராமையா பயந்து வழிந்த வண்ணம் கையில் புதுப்பேனு வோடு வந்து நின்றான். பேனு நடுங்கியது.

அச்சிறுவனையும் அந்தப் பேனவையும் மாறி மாறிப் பார்வை யிடலானார் வேலாயுதம். " ம்...நீ போகலாம். இது என் பேனு இல்லை ''' என்று கூறிவிட்டு, கையில் விழித்த பிரம்பை மேஜைமீது வைக்கலானார் ஆசிரியர். அவர் பார்வை மறுபடி வகுப்பைத் துருவியது. கோடியிலிருந்த மணிப்பயலைச் சூழ்ந்து 'கசமுச'வென்ற சத்தம் பரவிப அரவம் கேட்டது.

மணிப்பயல் ஆடு திருடின கள்ளன் மாதிரி தானுகவே வந்து ' ஆஜர் ' கொடுத்தான். கிழிந்த புத்தகப் பையை

பிரித்துக் கொட்டினுன். கந்தல் படிந்த நிக்கர் பையைப் பிதுக்கிக் காட்டினுன். " உங்க பேனவை எங்க வாத்தியா ரான உங்க பேனவை நான் எடுப்பேனுங்களா, ஸார் ? அன் னிக்கு ஒரு வாட்டி நான் சோமுவோட சாக்லெட்டைத் தின் னதைக் கண்டு நீங்க எனக்குப் பிரப்பம் பழம் கொடுத்தது எப்பவும் இனி நினைப்பிருக்குங்க ஸார் !..." என்று பரிதாப மாகச் சொன்னுன்.

வாத்தியாரின் கண்கள் ஏன் அப்படிக் கசிகின்றன ? மணியை கை ஜாடையால் அவனுக்குரிய இடத்துக்கு அனுப்பி விட்டார். நீள் மூச்சு பறிந்தது நீளமாக. நீள் மூச் சென்றுல் பின்னே சும்மாவா? அவர் மீண்டும் வகுப்பை நோக்கினுர். " என்ன அநியாயம் இது?...மேஜை மேலே வச்ச பேனு எப்படி மாயமாக மறைய முடியும்? குறளியா வந்து திருடிக்கிட்டுப் போயிடுச்சு? அதெல்லாம் இல்லே. இந்த க்ளாசிலே உள்ள வங்களிலே யாரோதான் திருடி வச்சிருக்கவேணும். பேனவை எடுத்தவங்க மரியாதையாய்க் கொண்டு வந்து என்கிட்டே கொடுத்திடுங்க. எடுத்தவங்களே அடிக்கவேமாட்டேன். இந்தப் பிஞ்சுப் பிராயத்திலேயே நெஞ்சிலே நஞ்சு சேருறதை என்னுலே அனுமதிக்கவே முடியாது ! ஆமாம் !" என்று ஒரு பாட்டம் பேசி முடித்தார். மூச்சு விட வேண்டாமோ ?

மீண்டும், " நான் எடுக்கலே ! நான் எடுக்கலேங்க ஸார் !" என்ற பலவேறு குரல்கள் பலவேறு பகுதிகளினின்றும் எதிரொலித்தன.

வேலாயுதம் சிந்தனை வசப்பட்டார் ; கணக்குப் புத்தகத்தைப் புரட்டினுர்.

அப்போது :

" ஸார், டயம் ஆகுது. நீங்க இப்போ கணக்குப் பாடம் சொல்லிக் கொடுங்க. ஸார் !" என்ருன் பாபு. வகுப்பில் முதல் மார்க் வாங்கும் பொடியன் ஆயிற்றே அவன் !

வாத்தியார் வேலாயுதம் அச் சிறுவனே அன்பு சுரக்க நோக்கினுர். " என் கடமையை மறந்திடுவேனு பாபு. இதோ

நடத்துகிறேன். இன்னிக்கு லாப நஷ்டக் கணக்குப் போடணும் இல்லியா ?" என்றார்.

"ஆமாங்க ஸார் !" என்று ஆமோதித்தான் சிறுவன். பிறகு, தயக்கத்தோடு ஆசிரியரை விழித்துப் பார்த்தான். "ஸார் நம்ப க்ளாஸ் பசங்க எல்லோருமே ஒட்டுக்கச் சொல்லிட்டாங்க. உங்க பேனவை எடுக்கலேன்னு ; பின்னே உங்க 'பார்க்கர்' பென் எப்படித்தான் மறைஞ்சதோ, மர்ம மாய்த்தான் இருக்குது !...ஒரு வேளை, நீங்க ஞாபகமறதியாய் உங்க பேனவை வேறே எங்கானும் ஏமாந்திருக்கவும் வழி இருக்கலாமில்லையா, ஸார் ?" என்று ஒரு கேள்வியைக் கணை தொடுத்தான் பாபு.

வாத்தியாருக்கு உடம்பு உதறத் தொடங்கியது.

அந்தி வாடை இப்படியா அடிக்க வேண்டும்?

"எனக்குத் துல்லியமாக நினைப்பு இருக்குப்பா. என் னேட புது ஜப்பான் பார்க்கரை என் மேஜை மேலேதான் வச்சிருந்தேன். வேறே எங்கேயும் ஏமாந்திடல்லே, பாபு !"

"அப்படியானல், க்ளாஸ் முடிஞ்சதும் சாடாபேரையும் நீங்களே சோதிச்சுப் போடுங்க ஸார் !" என்ருன் பாபு. இமைகள் அழகாகப் படபடத்தன.

"வெரிகுட் ! நானும் அப்படித்தான் யோசிச்சேன். பேனு கிடக்கட்டும் ஐம்பது ரூபாய்தான். ஆனு, சத்தியம் விலை மதிப்பில்லாதது அல்லவா ? இந்த வகுப்பிலே எல்லா ரையும் சோதனை போட்டால்தான், யார் பொய்யாளி என் கிற ரகசியம் புரிய முடியும் !...அப்பத்தான் எனக்கும் மனசு ஆறும் !" என்ருர் வாத்தியார்.

சாக்பீஸ் சுழலத் தொடங்கி விட்டது, அஃதா !

சோதனை முடிந்தது.

சத்தியச் சோதனை அல்லவா அது ?

பாவம், ஆசிரியர் வேலாயுதத்தின் அன்பு முகம் ஏன் அப்படிச் சலனம் அடைந்து விட்டதாம் ?

ஆசிரியரின் காணாமற்போன ஜப்பான் பார்க்கர் அகப்பட்டால் தானே ?

" ஸார் !..."

" என்னப்பா, பாபு ?"

" எங்களிலே யாரும் உங்க பேனாவைக் களவாடல்லே என்கிற உண்மையை சத்தியத்தை நீங்க புரிஞ்சுக்கிட்டு இருப்பீங்க. அத்தோடு, எங்களிலே யாருமே இப்போதைக்குப் பொய் பேசல்லே என்கிற உண்மையையும் சத்தியத்தையும் நீங்க உணர்ந்து நம்பி யிருக்கலாம். உங்க பாடத்தை பாடம் போதிக்கிற கட்டளையை நாங்க எப்பவுமே மதிச்சு அதன் பிரகாரம் நடக்க முயலுவோமுங்க, ஸார் ?"

" பாபு !" வாத்தியார் ஸாரின் கண்கள் தளும்பத் தொடங்கி விட்டன !

சிறுமி கோதை இடைமறித்தாள். ' ஸார் ! இப்போ இன்னொரு விஷயத்தையும் நீங்க யூகிச்சிருக்க வேணுங்க, ஸார். உங்களோட பேனா கடைசி வரையிலும் கிடைக்காததினாலே, எங்களை எல்லாரையும் தவிர, வேறொரு நபர் யாரோ ஒருத்தர் பொய் பேசி, தங்கமான ஆசிரியரான உங்களோட பேனாவை ரகசியமாக அமுக்கி வச்சிருக்கிறாங்க !... அந்தத் திருடனை-பொய்யனை ஆண்டவன்தான் தண்டிக்க வேணும், ஸார். நீங்க பாடம் படிச்சுக் கொடுக்கலிங்களா, பொய் பேசுறவங்களும் குற்றம் புரிகிறவங்களும் எப்பவானும் ஒருநாள் தண்டனை அனுபவிக்காமல் தப்பவே முடியாது அப்படின்னு ?...தப்புச் செஞ்சவன் எப்படியும் மனசு திருந்தி உங்க பேனாவை உங்க கையிலே திருப்பிக் கொண்டாந்து கொடுத்து உங்ககிட்டே மன்னிப்புக் கேட்காமல் இருக்க மாட்டானுங்க, ஸார் !"

உணர்ச்சிப் பிண்டமென அமர்ந்திருந்த வாத்தியாரின் இதழ்கள் துடித்தன.

" நாங்க இனிமேல் விளையாடப் போகலாமா, ஸார் ?"

குரல்கள் பின்னிப் பிணைந்து சாடி ஒலித்தன.

" நில்லுங்க எல்லோரும் !"

ஆணை மொழிந்தவர் ஆசிரியர் வேலாயுதம்தான் !

மாணவர்களும் மாணவிகளும் ஒன்றும் புரியாமல் அப்படியே விழி பிதுங்க மலைத்து நின்று விட்டார்கள் !...

வாத்தியார் வேலாயுதம் மேஜை டிராயரைத் திறந்து ஒரு பொட்டணத்தை எடுத்து மேஜைமீது வைத்தார்.

என்ன பொட்டலம் அது ?—எல்லோரும் விழித்தார்கள் !

" பாபு, இதிலே இருக்கிற மிட்டாயை எடுத்து ஆளுக்கொன்றாகக் கொடப்பா !" என்றார் ஸார்.

சிறுவன் பாபுவுக்கு வியப்பு மேலிட்டது. " எங்களுக்கு எதுக்குங்க ஸார் மிட்டாய் ? பேனா திருடு போன நஷ்டத்திலே உங்களுக்கு இது வேறே வீண் செலவாச்சுங்களே, ஸார் ?" என்று லாப நஷ்டக் கணக்கைச் சுட்டினான்.

" பாபு, முதலிலே நீ மிட்டாயைக் கொடு !" கண்டிப்புடன் உத்தரவிட்டார் வேலாயுதம்.—

எல்லோருக்கும் தலைக்கு ஒன்று வீதம் மிட்டாய் வழங்கப்பட்டது போக, மிச்சம் ஒரு மிட்டாய் ஒரே யொரு மிட்டாய் இருந்தது.

" ஸார், இந்த ஒரு மிட்டாய் உங்களுக்காகவே மிஞ்சியிருக்குங்க, ஸார். இந்த மிட்டாயை நீங்க எடுத்துக்கங்க, ஸார் !" என்று மரியாதையின் பாசம் துலங்க வேண்டினான் பாபு. கனி இதழ்களிலே கனிவு இருந்தது.

வாத்தியாரின் கண்ணீர் வெள்ளத்தை அப்பொழுதுதான் வகுப்புப் பிள்ளைகள் அனைவரும் வெளிப்படையாகக் கவனித்தார்கள் போலும் ! மாணவ மாணவிய ரிடையே பரபரப்பு பதட்டநிலை எழுந்தது. வாத்தியார் ஸார் ஏன் அழவேண்டும்?

" ஸார், நீங்க ஏன் அழறீங்க ? நீங்க இந்த மிட்டாயைத் தின்னதுக்கப்புறம்தான் நாங்களும் தின்போம். அப்பதான் எங்களுக்கும் கிடைக்கும். பேனா கிடைச்சிடும் ஸார். அழாதீங்க !"

ஆசிரியர் உணர்ச்சி வயப்பட்டார். அன்பு காட்டிச் சிரிப்புக் காட்டினர். பிறகு உத்தரவும் காட்டி விட்டார். “ முதலிலே நீங்க எல்லாரும் மிட்டாயைத் தின்னுங்க ! ஊம்

தூய்மையான மனத்தோடு தின்றால், மிட்டாய் இப்படியா அற்புதமாக இனிக்கும் !

“ நாங்க மிட்டாயைத் தின்னிட்டோம், ஸார். இனி நீங்க இந்த ஒரு மிட்டாயைச் சாப்பிடுங்க ஐயா ! ’’ என்று தயவுடன் கெஞ்சி பரிவுடன் அந்த மிட்டாயை ஆசிரியரிடம் நீட்டினன் பாபு.

“ பாபு, நான் இந்த மிட்டாயைத் தின்ன மாட்டேன் ” தின்னவும் கூடாதப்பா ! ” என்ருர் ஆசிரியர்.

“ ஏன் ஸார் ?’’—பதறினன் பாபு.

“ நான் பொய்யன். பொய் சொன்னவனுக்குப் போசனம் கிடைக்காதின்னு நான் பாடம் சொல்லித் தரல்லியா, பாபு? ”

“ ஸார் ! ”

குரல்கள் குறுக்கு மறித்தன.

“ ஆச்சரியப்படாதீங்க நீங்க. நான் பொய் பேசினவன். உங்களிலே யாருமே மனசறிஞ்சு பொய் பேசப்படாதின்னு தவம் இருந்த நான், உங்களை விஷப்பரீட்சை செய்ய நினைச்சு, கடைசியிலே நானே பொய்யன் ஆக நேர்ந்திடுச்சே ! ’ தடுமாறினர் ஸார் ; பேச்சும் தடுமாறியது.

“ ஸார் ! ”

மறுபடி குரல்கள் எதிரொலித்தன.

“ என் பேனு திருடுபோயிட்டுதின்னு பொய் சொன்னேன் நான் இதோ பாருங்க எல்லாரும் ! ” என்று விம்மியவாறு, தன் வேஷ்டி மடியில் மறைத்து வைத்திருந்த பேனவை எடுத்து மேஜைமீது வைத்தார் ஆசிரியர் வேலாயுதம்.

பேளு பளா பளத்தது !...

பாபுவை முந்திக் கொண்டு, கண்ணீரைத் அடைத்தபடி ஆசிரியரிடம் வந்தாள் சிறுமி கோதை.

" ஸார், நீங்க பொய்யன் இல்லீங்க, ஸார்! பொய் பேசக் கூடாதின்னு எங்களுக்கெல்லாம் பாடமும் புத்தியும் படிச்சுக் கொடுத்த நீங்க பெய்யனுக மாற நேர்ந்ததுக்கு உண்டான காரணம் இப்பத்தானுங்க ஸார் விளங்குது! எங்களைச் சோதிக்கிறதுக் காகவேதான் நீங்க இப்படியொரு விசித்திர நாடகத்தை நடத்தி யிருக்கீங்க, ஐயா !...நாங்க உங்க மாணவ-மாணவிகளாகிய நாங்க பொய் பேசாதவங்க என்கிற உண்மையை சத்தியத்தை இனி நீங்க நம்புவீங்களே, அந்த ஒரு பாக்கியம் எங்களுக்கெல்லாம் போதுமுங்க, ஸார்! இப்படிப்பட்ட தங்கமான ஆசிரியருக்கு நாங்க மாணவ மாணவியராக இருக்கிறதே எங்க அதிர்ஷ்டமாக்கும் ஸார் !...ம் சரிங்க ஸார் ! நீங்க மிட்டாயைத் தின்னுங்க ஸார்!

சத்திய தருமத்துக்கு வாய்த்திட்ட ஒரு தரிசனமாகத் தோன்றிய கோதை, அந்த ஒரு மிட்டாயை வாத்தியாரின் அன்புக் கரங்களிலே பெருமையுடன் சமர்ப்பித்தாள்.

வாத்தியார் நப்புக் கொட்டினர் !...

ஆகா ! பாபுஜி புனிதன் காந்தி எவ்வளவு ஆனந்தமாகப் புன்னகை செய்து கொண்டிருக்கின்றார் !...

## ● ● ● இன்று நேற்று வந்த சொந்தமா?

'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ், எழும்பூர் ரெயில் நிலையத்தில் வந்து ஓய்வு பெற்றது தான் தாமதம்; கையில் பிடித்திருந்த தோல் பெட்டியுடன் கீழே இறங்கினான் தங்கப்பன். பெட்டியைத் தரையில் வைத்தான். ரெயில் பெட்டியினின்றும் கீழே இறங்க வழிபார்த்துக் கொண்டிருந்த தன்னுடைய அன்னையைக் கைகளைத் பற்றிய வண்ணம் கீழ்த் தளத்திற்குப் பதமாகச் கொண்டு வந்து சேர்த்தான் அவன்; சாமான்களுக்குத் தாயைக் காவல் வைத்தான்; வாடகைக்காருக்கு வகை செய்யலானான். ஜார்ஜ் டவுனில் ராமசாமித் தெருவுக்கு வந்ததும் தான், தங்கப்பனுக்கு நல்ல மூச்சுப் பிரிந்தது. வாடகைப் பணத்தை 'மீட்டர்' பார்த்து நீட்டினான். பிறகு பெட்டியும் கையுமாக, தாயுடன் வீட்டினுள் நுழைந்தான் அவன். வீடு என்றால் வாடகை வீடு!

"என்ன அம்மா, பெண் பார்க்கப்போன காரியம் சித்திதானே?..." என்று வினவினர் குடித்தனக்காரர்கள் சிலர். "ம்!" என்று வெய்துயிர்ப்பைப் பதிலாக்கிச் சுளித்துக் கொண்டே, வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றாள் மரகதத்தம்மாள்

"தம்பி, நீ போய்க் குளிச்சிட்டு ஓடியாப்பா!"

தங்கப்பன் குளித்துத் திரும்பினன். பக்கத்து வீட்டுப் பையன் 'டிபன்' வாங்கி வந்தான். புதுத் துணிமணிகள் வேண்டுமல்லவா ? எனவே, சாவிச் கொத்தை எடுத்து, ஒரு சாவியை விலக்கி, அந்தத் தோல் பெட்டியைத் திறந்தான். ஒருகணம், தங்கப்பன் சிலையானன் !

"தோல் பெட்டி மாறியிடுச்சு அம்மா ! வேறே யாருடைய பெட்டியோ நமக்கு வந்திருச்சுது !" என்ருன் அவன். இந்தப் பெட்டி, அவனுடைய சொந்தப் பெட்டி மாதிரியே தான் காட்சி கொடுத்தது !

'அட கடவுளே !' என்று பெரு மூச்செறிந்தான் தங்கப்பன்.

அந்தத் தோல் பெட்டியைப் பிரிக்கப் பிரிக்க, அவனுக்கெனக் காத்துக் கொண்டிருந்தவை போல அதிசயங்கள் ஒன்று, இரண்டென்று விளைந்து கொண்டிருந்தன. நவ நவமான நாகரிக உடுப்புக்கள் தனியே ஒதுங்கிக் கொண்டன; பிரிந்து கிடந்த அந் நாட்குறிப்பை மீண்டும் பார்த்தான். படித்தான்.

"பேரழகி சாந்தினி எனக்குக் கிடைப்பதற்கு நான் பெரும் பாக்கியம் செய்திருக்கத்தான் வேண்டும். அப்பா எனக்கெனச் சேமித்திருக்கும் நிதியும், விதி எனக்காக வகுத்துத் தந்து விட்டிருக்கும் நீதியும் என்னுடைய எதிர்காலத்துக்குரிய நற் சகுனங்கள் ! ஆம் ; உண்மைதான். புத்தாண்டு பிறந்து, சித்திரை மாதம் முடிவதற்குள் என் வாழ்க்கைப் புத்தகத்தில் புத்தேடு புரண்டு விடும் !"

டைரியை வீசியெறிந்தான் அவன். கனவும் நனவும் கலந்தன ; இதயம் கொப்புளித்த நீருக்கு வழியா இந்த விழிகள் ?

'சாந்தினி !'

தங்கப்பன் ஒருமுறை தனக்குத் தானே அப்பெயரைச் சொல்லிக் கொண்டான் ; இன் மழலைப் பைங்கிளிக்கு ஒவ்

வொரு பெயராகச் சொல்லிக்காட்ட, அது செங்கனி வாய் திறந்து அப்பெயர்களைத் திருப்பிச் சொல்லிக் கேட்கையில் ஏற்படும் அகமகிழ்வு கனிந்தது ; கண்களை ஒரு கணம் இறுக மூடிக் கொண்டான். அப்பேரழகி தன்னுடைய நயன வட்டங்களை விட்டுப் பறந்து செல்லக் கூடாது என்று அவன் தன் விழிகளை அவ்வாறு மூடிக்கொண்டானோ? அவன் மறுகணம் விழிகளைத் திறந்த தருணம் இதயத்தின் அடித்தளம் விட்டு ஆத்திரப் பெருமூச்சு வெளிக் கிளம்பிற்று. ஏன், அந்த அழகுப் பசுங்கிளி சிறகடித்துப் பறந்து விட்டதா ?

‘ சாந்தினி ! ’

தீக்குச்சியும் தீப்பெட்டியும் இதயம் பிணையச் சந்திக்கும் போது, எரி நெருப்பு உருவைக் காட்டுவது இயற்கைதானே? அவனுள் தீ எரிந்தது ! சாந்தினி என்னும் அந்த ஒரு பெயர் ஓராயிரம் பெயர்களாகப் பெருகி அவனது நெஞ்சில் தீயை வளர்த்தன. தங்கப்பன் துடித்தான் ; துவண்டான், தீ சுடாதா ? முட்டப் பெருகிக் கரை புரண்டது வெள்ளம்.

“ தம்பி, சாப்பிடுப்பா ! ”

அவன் மனம் திருச்சி மலைக்கோட்டையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தால், சென்னையின் நினைவு எழவில்லை.

“ தங்கப்பா !...தம்பி தங்கப்பா ! ”

பெற்ற பாசம் உற்ற அன்புடன் தட்டிக் கூப்பிட்டது. தொண்டைக் குழியில் வேதனை புறப்படும் வரை, வாய் ஓயாமல் கூவி அழைத்த பலகாரத் தட்டு, அவனது பரிதாபக் கோலம் கண்டு நிலை கலங்கியது.

“ அம்மா ! ”

மகன் வடித்த சுடுநீர் பெற்றவளின் மாணிக்கக் கையில் தெறித்தது.

“ தம்பி, நெருப்பு சூடுதான் ; ஆனாலும் சுடு தண்ணி அதை அவிச்சுப்பிடும் ; இல்லையா ?...அதேபோல, உன்னோட இந்தச் சூடான கண்ணீர் உன் மனசிலே எரிசிற நெருப்பை

அணைச்சுப்படும், தம்பி !...மலைக் கோட்டைப் பிள்ளையாரும் நம்ம பிரஹதம்பாள் அம்மனும் நல்ல முடிவைக் காட்டாம இருக்க மாட்டாங்க. சரி, நீ இப்ப பலகாரத்தை சாப்பிட்டுப்பிட்டு, வேலைக்குப் புறப்பட்டுப்போ. இந்தச் சனியனை மூடிப்பிட்டு எழுந்திரு ! ''

தங்கப்பனின் கையில் ' முகவரிச் சீட்டு ' ஒன்று தட்டுப் பட்டது. எம். நாகநாதன் என்ற பெயருக்கு அடியில் அலு வலகம், வீடு ஆகிய இரண்டின் முகவரிகளும் அச்சடிக்கப் பெற்றிருந்தன. கண்களைத் துடைத்த வண்ணம், ' கை மாறிய ' அந்தப் பெட்டியை ' மறுபடியும் துழாவிய வேளை யில், புதியதொரு நிழற்படம் ஒன்று அவனுக்குரிய கைவிரல் களில் சிக்கியது.

' விலாசினி அல்லவா இவள் ? இவளுடைய படம் இவன் பெட்டியில் எப்படி வந்தது ? '

* * *

சிந்தாதிரிப்பேட்டையில் பஸ்ஸிலிருந்து இறங்கினான் தங்கப்பன். அவனுடைய கையில் அந்தத் தோற்பெட்டி இருந்தது. சைக்கிள் ரிக்ஷா ஒன்றை அமர்த்திச் சென்று கொண்டிருந்தான் அவன். குறுக்கோடிய தெருக்களை யெல்லாம் காலால் ஏற்றிவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்காரன் பறந்தான். ஆனால் தங்கப்பனுக்கோ தன் வழியில் குறுக் கிட்டுப் பாய்ந்த நினைவுகளை ' சற்றே விலகியிரும் , பிள்ளாய்!' என்று பணித்து, அல்லது வேண்டி, வழி விலக்கிச் செல்லும் மார்க்கம் புலன்களில் ஒட்டவில்லை !

' சாந்தினி ! '

தங்கப்பன் ஏன் அவளை அழைத்தான் ? மலைக்கோட்டைப் பதுமையை அவன் ஏன் கூவிக் கூப்பிட வேண்டும் ? அவன் என்ன செய்வான் ? பாவம், காலமும் கனவும் அவனுக்கு விடுகதைகள் போட்டு விட்டனவே ?

' நான் என்ன செய்யட்டும் அக்கா ? நம்ம சாந்தியை நம்ம தங்கப்பனுக்குக் கொடுக்கவேணும்னுதான் நினைச்சுக்

கிட்டிருந்தேன் ; ஆனால், 'லவிதம்' வேறு மாதிரியாக விதித்து விட்டதே? சாந்தினி தங்கப்பன் ஜாதகங்கள் சரிவரப் பொருந்தவில்லை, அக்கா !'

கண்ட கனவுக்கும் கொண்ட நினைவுக்கும் வெற்றி முத்திரை பதித்துத் திரும்பிவிட வேண்டும் என்று தங் கப்பனும் அவனைப் பெற்ற மாதாவும் 'தூத்துக்குடி எக்ஸ் பிரஸ்' வண்டியில் பயணமானார்கள். ஆனால், அதே 'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்' அவர்கள் இருவரையும் சுமந்து திரும்புகையில், இடிந்த மனக் கோட்டைகளின் துகள்கள் மாத்திரமே எஞ்சிக் கிடந்தன. கனவு ராஜ்யத்தின் நுழை வாயிலைத் தரைமட்டமாக்கிவிட்ட அந்த இனம் புரியாச் செயலுக்குப் பெயர் தானா விதி ?

அன்று புதுக்கோட்டை தனியரசாக இயங்கியது. தங் கப்பன் பிறந்தான். அவனுக்குச் சொந்த மாமன் மகள் சாந்தினி. மரகதத்தம்மாளின் உடன் பிறந்த தம்பி சோமசேகரன் திருச்சியில் 'வசதி'யுடன் திகழ்ந்தார். என்றாலும், தங்கப்பனின் கல்லூரிப் படிப்பு சென்னையிலேயே தொடர்ந்தது ; எம். ஏ. படிப்பு ; பொருளாதாரப் பிரிவு ; வெற்றி பெற்ற இனிப்புச் சேதியை மட்டிலுமே அவனது தந்தை அனுபவிக்கக் கொடுத்து வைத்தார். தனியார் நடத்திய கல்லூரியில் 'லெக்ச்சரர்' ஆனான் தங்கப்பன். இருநூற்றைம்பது ரூபாய்ச் சம்பளம் ; பாங்கில் தந்தை சேமித்துச் சென்ற பணம் பத்தாயிரம். பட்டண வாழ்வு இதுவரை அவனுக்குச் சோதனைகள் தரவில்லை ; ஆனால் இப் போது, அவனைச் சோதித்து விட்டது ; ஏன், அவனே சோதனைப் பொருளானான் !

மனம் ஒரு 'போட்டோ ஆல்பம்.' தானும் சாந்தினியும் பிஞ்சுப்பிராயம் தொட்டு, இதயம் தொட்டு உறவாடி மகிழ்ந்த இனிய நாட்களை அவனது மனம் 'காமிரா' வாகிப் படமெடுத்தது. ஆனால் அதே நிகழ்ச்சிகள் இன்றைக்குப் படமெடுத்து ஆடும் பாம்புகளாகி விட்டனவே ? 'உம்மைப் பெருவினை' யும் ஓர் அரவமோ ?

வெங்கடேசக்கிராமணித் தெருவில் அவ்வீட்டின் முன்னர் சைக்கிள் ரிக்ஷா நின்றது.

“மிஸ்டர் நாகநாதன்...!” என்று குரல் கொடுத்தான் தங்கப்பன்.

* * *

“உங்களுடைய உதவிக்கு மிகவும் நன்றி, மிஸ்டர் தங்கப்பன்!” என்ருன் நாகநாதன். வார்த்தைகளில் நன்றியறிவு மேலோங்கிப் பேசியது.

“பெட்டிகள் மாறிவிட்டன. உங்கள் பெட்டியைக் கொண்டு வந்து சேர்ப்பிக்க இயலவில்லை. ஏனென்ருல், நான் வைத்திருந்தது போல நீங்கள் உங்களுடைய விலாசமிட்ட சீட்டு எதையும் வைத்திருக்கவில்லை. உங்கள் பெட்டியைத் திறக்க வேண்டிய சூழ்நிலை வந்ததால்தான் நான் திறந்தேன். மன்னிக்கவேண்டும்!” என்று கூறினுன் நாகநாதன்.

“என்னையும்தான் நீங்கள் மன்னிக்கவேணும். ஏனென்ருல், நான் உங்கள் பெட்டியைத் திறந்து பார்த்தேன்; அதனுல்தான், உங்கள் இருப்பிடம் புரிந்தது!” என்று பதிலுக்குச் சமாதானப் படுத்தும் முறையில் தங்கப்பன் பேசினுன்.

“பரவாயில்லை!”

“ம்!”

தங்கப்பனைக் குறித்து நாகநாதன் வினவினுன்;

“எனக்குத் தஞ்சாவூர்ப் பக்கமுங்க; எஸ். எஸ். எல். ஸி படிச்சிருக்கேன். ஒரு மருந்துக் கடையில் வேலை பார்க்கிறேன். கல்யாணமானவன்!” என்று புள்ளி விவரம் தந்தான் தங்கப்பன்.

“நான் ஐ. ஏ. எஸ். பரீட்சை எழுதப் போகிறேன்; அப்பாவுக்குத் திருச்சியில் கண்ணுடித் தொழிற்சாலை உண்டு. எனக்கு ஒரே ஒரு தங்கை; பெயர் விலாசனி. அவள் படிப் பக்காகக்கான் நான். அம்மா எல்லோரும் இங்கே இருக்

ரும். அவள் திருமண விஷயமாகத்தான் அலேகிறேன். எனக்குச் சித்திரையில் கல்யாணமாகி விடும். எங்கள் அப்பாவுக்குச் சமதையான இடம். மலைக் கோட்டையில் சோமசேகரன் அவர்களின் புதல்வி, சாந்தினி என்று பேர். பி. ஏ. பட்டதாரி. சாந்தினிக்கு வேறு எங்கோ மாப்பிள்ளை தயாராக இருந்தாலும். எங்கள் அப்பாவின் தொடர்பு ஏற் பட்டதும், என்னையே மாப்பிள்ளையாக்கிக் கொள்ள முடிவு கட்டிவிட்டார். பெண்ணைப் பார்க்க திருச்சி சென்று திரும் பும் போதுதான், நம் பெட்டிகள் இடம் மாறி, கைமாறி விட்டன !''

நாகநாதன் கைப்பிடித் துண்டை எடுத்து நெற்றியில் ஒற்றினன். அந்த இடத்தில் செம்மை படர்ந்தது. சுருள் முடியை அலட்சியத்தோடு ஒதுக்கி விட்டான் அவன்.

தங்கப்பனின் இதயம் அழுதது; கண்ணீரை உண்டு விழுங்கினன் அவன். 'பாவி ! என் கனவைச் சிதைத்து விட் டானே காலன் நாகநாதன் ? எவ்வளவு பெருமை தவழப் பேசுகிறன் ! பேசுவதற்கு என்ன ? தேவதையெனத் தோன் றும். சாந்தினி கிடைத்து விட்டாள் அல்லவா ? ஏன் பேச மாட்டான் ?'

" நான் போய் வருகிறேன் !''

" இருங்கள், காப்பி சாப்பிட்டுப் போய் வாருங்கள் ! அழைப்பு அனுப்புகிறேன்; கலியாணத்துக்கு அவசியம் வந்துவிட வேண்டும் !''

" ஆஹா !''

சமையற்காரனுக்கு வாயெல்லாம் பல்.

" ஆகட்டுங்க; நிச்சயம் வருகிறேன் !'' என்று விடை பெற்றுத் திரும்புகையில், தங்கப்பன் " வணக்கம் ஸார் !'' என்ற குரல் கேட்டுத் தலையை நிமிர்த்தினன். இடது கையில் பிடித்திருந்த பெட்டி நடுங்கியது. வணக்கம் !''

வந்து நின்ற பெரிய காரிலிருந்து விலாஸினி இறங்கி நின்றாள்.

"நான் போய் வருகிறேன், விலாசினி!" என்று புறப்பட்டான் தங்கப்பன். 'என் ஸ்டுடண்ட் விலாசினி!'

* * *

கல்லூரி உத்தியோகத்திற்கு உண்டான உடைகளைக் கழற்றி விட்டு, தன்னுடைய அறைக்குள் நுழைந்தான் தங்கப்பன்.

"தம்பி, உனக்குச் சேதி தெரியுமா?"

"சொன்னால்தானே அம்மா தெரியும்?"

அவன் பேசிய பேச்சு அவனுக்கே நகைச்சுவையாகப் பட்டது. கையில் கொணர்ந்திருந்த இனிப்புப் பொட்டலத்தைப் பிரித்து அன்னையிடம் கொடுத்து விட்டு முகத்தை உயர்த்தினான் அவன்.

"தம்பி, உன் ஜாதகமும் சாந்தினி ஜாதகமும் ரொம்பவும் அற்புதமாப் பொருந்தியிருக்குதாம். திருச்சியிலிருந்து அந்த ஜோஸ்யர் வந்திருந்தார்; எதேச்சையாப் பார்த்தேன். புதுச் சம்பந்தம் கிடைச்சா, ஏகப்பட்ட பணம் 'புரட்டிக் கொள்ள' வழி ஏற்படும்னு நினைச்சுத்தான் என் தம்பி—உன் மாமா இப்பிடி நம்பளை ஏமாத்தியிருக்கிறான்! ...ம்! தங்கப்பா, சாந்தினிக்குக் கலியாணம் நடக்கும் அதே நாளிலே உனக்கும் கல்யாணம் பண்ணி வைச்சாத்தான், என மனசும் ஆறுதல் படும்!" என்று வேதனையும் லட்சிய உறுதியும் இழை பின்னிப் பேசினாள் மரகதத்தம்மாள்.

"முன் வினைப்படிதானே அம்மா எல்லாம் நடக்கும்?... பணம் பணத்தைத்தானே நாடும்?...நீங்க பலகாரத்தைச் சாப்பிடுங்க அம்மா!" என்று கெஞ்சினான் தங்கப்பன்.

"இந்த நிமிஷத்தோட, எனக்கு ஒரு தம்பி இருக்கிறதையே மறந்துப்பிட்டேன்!" என்று கண்ணீர் பெருக்கினாள் மரகதத்தம்மாள்.

சாந்தினியின் வதனம் அவனது இதயத்திரையில் நிழலாடியது; தன் தந்தையின் கடைசித் தீர்ப்புப் படிக்கப்

பெறும் நேரத்தில் சாந்தினியின் கண்மலர்கள் பனித்திரை ஏந்திய காட்சியை அவன் எப்படி மறப்பான் ?

' சாந்தினி, நீ பாக்கியவதி !...என்னைவிட எல்லா வகையிலுமே உனக்கு ஏற்ற மாப்பிள்ளை மிஸ்டர் நாகநாதனே தான் !...உன் அப்பா கல்யாணப் பத்திரிகை அனுப்பினாலும், அனுப்பாவிட்டாலும், என் இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்க நேரில் ஓடி வருவேன் !...'

* * *

அதிகாலையில், சோமசேகரனைக் கண்ட மரகதத்தம்மாளுக்கு ஒருபுறம் ஆச்சர்யமும், மறுபக்கம் ஆத்திரமும் ஏற்படலாயின.

" வா !" என்று கூட வரவேற்புக் கூறுமல் நின்ற அவளிடம் திருமண அழைப்பு ஒன்றை கொடுத்தார் சோமசேகரன்.

" அக்கா, இந்தப் புகைப் படத்தை நான் பார்க்காமல் இருந்திருந்தால், நான் உடன்பிறந்த பாசத்துக்கே நன்றி செலுத்தாதவனுகி யிருப்பேன்.

என் கண்களைத் திறந்துவிட்ட இப் படத்தை நான் எப்போதும் மறக்கவே முடியாது அக்கா !" என்று சொல்லிக் கொண்டிருந்தார் சோமசேகரன்.

அப்பொழுது, குளித்து முடித்துத் திரும்பிய தங்கப்பன், தன் மாமா ஏந்தியிருந்த அந்தப் படத்தை நோக்கினுன். அவனைத் திகைப்புணர்வு ஆட்கொண்டது. சோமசேகரனும் மரகதத்தம்மாளும் பிஞ்சுப் பிராயத்தினராகக் காட்சி தந்தார்கள் !

' அம்மா தன் தம்பிக்கு இந்தப் படத்தைத் தபாலிலே அனுப்பி வைக்கச் சொல்லி, எதிர்வீட்டுப் பையனிடம் கொடுத்தார்கள். இதைப் பார்த்தாவது, தன் தம்பியின் மனம் மாறி, உடன் பிறப்பின் மகிமையை எண்ண வழி பிறக்கும் என்பது அம்மாவின் உள்ளக் கருத்து. ஆனுல், நானே, அந்தப் போட்டோவை அனுப்பச் செய்யாமல், அதை ரகசியமாக வாங்கி என் பெட்டியடியில் வைத்துக் கொண்டு விட்

டேனே ?...பின், இந்தப் படம் எப்படி மாமாவுக்குக் கிடைத்தது ?' என்று மனம் மறுகினன் தங்கப்பன்.

" உனக்குப் பணக்காரச் சம்பந்தி கிடைச்ச பெருமையைச் சொல்லிட்டுப் போக வந்தியே, அது மட்டும் நல்லது தான் !" என்று ' அர்த்தம் ' அமைத்துப் பேசினுள் மரகதத்தம்மாள்.

" அக்கா என்னை மன்னிச்சுப்பிடு. நம்ம சாந்தினி தான் இப்படத்தை வீட்டுச் சுவரிலேயிருந்து எடுத்து எங்கிட்டே காட்டிச்சுது !" என்று திணறினர் சோமசேகரன்.

" தம்பி, உட்கார். நீ உன்னோட ஏழை அக்காவை மறந்தாலும், நான் என்னோட பணக்காரத் தம்பியை மறக்க முடியுமா ?நானும் என் மகனும் உன் மகள் கல்யாணத்துக்குக் கட்டாயம் வாரோம் !" என்ருள். அவள் குரல் தடுமாறியது.

" அக்கா, முதலிலே இந்தக் கல்யாணப் பத்திரிகையைப் பாரேன் !"

அழைப்பில் இருந்த பெயர்கள் ஃ

மணமகன் ஃ தங்கப்பன்.

மணமகள் ஃ சாந்தினி,

*

தங்கப்பனின் பழைய நாட் குறிப்பு ஏடு புரண்டது

' சாந்தினி ! என் நெஞ்சில் நீ என்றென்றுமே பிஞ்சுப் பிராயத்துச் சாந்தினியாகவே வாழ்ந்திடுவாய் ! உன் அழகுக்கு என்னைப் ' பிணை ' வைக்க விதி ஒப்பவில்லை. ஆனாலும், உன்னை மறக்கவேண்டிய கட்டம் வந்தால், எனக்குக் கட்டாயம் பைத்தியம்தான் பிடிக்கும். சாந்தினி, நீ பாக்கியவதி ! என்னைக் காட்டிலும் சகல விதத்திலும் சிறந்தவர் ஒருவர் உனக்குக் கணவராய் வரப் போகிருர். நீ வாழி !'

நடந்து முடிந்தது பூராவையும் கனுப்போன்றே அவன் உணரவேண்டியவன் ஆனன். விரல் வழி வழிந்த தேன்

வாய்க்குத் திரும்பினாற்போல, இந்தத் திருப்பம் அவனுக்கு இனித்தது !

இப்பொழுது, தங்கப்பனின் மனம் விம்மிக் கண்ணீர் வடித்துப் புலம்பியது : “ சாந்தினி, உன்னுடைய தியாகம் பெரிது ! இன்று நேற்று வந்ததா நம் சொந்தம் ?”

* * *

ஏகப்பட்ட தம்ளர்கள் உடைபட்டன !

தங்கப்பன் விழி மலர்ந்தான் ; வாய்ச் சிரிப்பு ஏடு திரிந்தது. அவன் மீண்டும் சிரித்தான் !

“ சாந்தினி !”

“ ............... ”

“ பேச மாட்டாயா ?”

“ ஓடி வர மாட்டாயா ?”

“ ............... ’

“ சாந்தினி !”

“ .............. ”

“ கனி இதழ் நுனி விலக்கிப் பதில் சொல், சாந்தினி !”

“ ............ ”

“ மையல் நிறை கயல்விழி மலர்ந்து என்னைப்பார், சாந்தினி !”

“ ............ ”

“ சாந்தினி !”

“ ஐயோ ! சாந்தினி !”

“ ............ ”

கிழித்துக் கிடந்த டைரியின் இதழ்களைத்தான் அப்படிப் பார்த்தானு அவன்? இல்லை, அந்தப் புது அழைப்பிதழைத் தான் அவ்வாறு வெறிக்க வெறிக்க நோக்கினுனு? அல்லது, அந்தத் தினசரிப் பத்திரிகையைத்தான் அப்படி அவன் பார்த் தானு?

செய்தி :

" தன் தகுதி, நிலை ஆகியவற்றை எண்ணிப்பார்க்காமல், பிரபலமான நாடக நடிகை சாருமதியைக் கலியாணம் செய்து கொண்ட பாலகோபாலன், இப்போது அந்த நடிகை யால் விவாக ரத்துச் செய்யப்பட்டு நடு வீதியில் நிற் கிருன் !..."

உண்டு முடிந்தது; தாம்பூலம் தரித்துக் கொண்டு, கடைசிக் குழந்தையைக் கையுடன் அழைத்துக் கொண்ட செட்டியார்—உரிமையாளர், புறப்பட்டார். தயாராகக் காத்து நின்றது கார். கைகூப்பியவாறு அவர்களுக்கெல்லாம் நன்றி சொன்னார் செட்டியார். அவர்களுக்குக் கங்கு கரை யற்ற சந்தோஷம்.

கார் புறப்பட்டது.

அவர்கள் என்கிறேனே—அந்த அவர்கள், அந்தச் செட்டியாரின் கம்பெனியில் வேலை பார்ப்பவர்கள். மாதவன், சிதம்பரம், ராமநாதன், தியாகராஜன்-இது அவர்களது பெயர் ஜாபிதா. பொறுப்பு வாய்ந்த உத்தியோகங்கள்; பொறுப்புடன் நிர்வகித்தார்கள்.

நாளெல்லாம் ஹோட்டலில் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாதே என்ற அனுதாப மேலீட்டால் ஒரு யோசனை சொன்னார் செட்டியார், ' மெஸ் ' ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று. உரிமையாளரின் பூரண ஒத்துழைப்பில்—அதாவது பண உதவியினால் அடுத்த வாரமே ' மெஸ் ' ஒன்று ஜாம் ஜாம் என்று ஆரம்பமாயிற்று.

அடுத்த சில நாளில் ஆபீஸில் வேலை பார்த்த அந்த நால்வர்களும் செட்டியாருக்கு 'படே' விருந்தொன்று வைத்தார்கள். செட்டியாரின் பெருந் தன்மைக்கு நன்றி சொல்ல வேண்டுமல்லவா! முறை என்று வேறு உண்டல்லவா! செட்டியார் விருந்து முடிந்து காரில் புறப்பட்ட தருணம் அந்நால்வர்களுக்கும் புன்னகை மெட்டிசைக்கக் கூறிய நன்றி மொழிகள் அவர்களுக்கு அமிர்த தாரையாகச் சிந்தினதில் வியப்பேது?

"உங்களுக்கெல்லாம், ஊஹூம், நமக்கெல்லாம் அடுத்த மாதம் ஒண்ணும் நம்பர் டின்னர் ஒன்று கைமேல் காத்திருக்கிறது. நம் நண்பர் தியாகு தன் பிரமச்சாரிய வாழ்வுக்கு முற்றுப் புள்ளி போடத் தீர்மானித்து விட்டார். அதாவது அவருக்குக் கல்யாணம்; ஒன்றாக இருக்கும் அவர் இரண்டாகப் போகின்றார்..." என்றான் மாதவன்.

"நண்பருக்கு என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்! அவரது தாம்பத்தியம் புதுமையுடன் திகழப் பிரார்த்திக்கிறேன்."

இப்படி ஒன்று போல மற்றவர்கள் மூவரும் தங்கள் தங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தியாகராஜன் அப்பொழுது தன் எதிர்கால மனைவி பற்றிய இன்ப நினைவில் லயித்திருந்தானோ, என்னவோ? அவனுடைய புன்னகை முகத்தில் வியர்வைத் துளிகளின் புள்ளிக் கோலத்துடன், இன்பக் கனவின் எழிற் கோலமும் கைலாகு கொடுத்துச் சேர்ந்து கொண்டன.

"தியாகுவின் திருமண வைபவத்துக்கு அடியேன் தம்பதி சமேதராக ஒரு வாரம் முன் கூட்டியே வந்திருந்து கல்யாணத்தைச் சிறப்பாக நடத்தி வைக்கச் சித்தமாக இருக்கிறேன். நண்பர் ராமனுஜனும் தன் மனைவியைக் கூட்டி வந்து விடுவார்..." என்று சொல்லிவிட்டு, நண்பர் குழாமைப் பார்த்தான் மாதவன்.

" ஆஹா ! நானும் என் திருமதியைக் கட்டாயம் அழைத்து வந்துவிடுகிறேன் " என்ருன் ராமனுஜன் வெற்றிப் புன்னகை வசந்தம் பாட.

ராமனுஜனும் மாதவனும் ஒரு முகமாக சிதம்பரத்தை நோக்கினுர்கள். அவர்களது முகங்களில் கேள்விக் குறி தொக்கி நின்றது. சிதம்பரத்தின் முக மண்டலம் எந்தப் பதிலேயும் தெரிவிக்கக் காணுேமே ! அவன் ஏனோ தலேயைக் கீழே தாழ்த்திக் கொண்டவாறு, தாம்பூலத் தட்டில் கிடந்த கிராம்பொன்றை எடுத்து உதட்டில் சுவைத்துக் கொண்டிருந்தான்.

" சிதம்பரம், நீங்களும் தான் என் கல்யாணத்துக்கு உங்கள் மனேவி சகிதம், தம்பதி சமேதராக எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன் " என்ருன் தியாக ராஜன். உரிமையுடன் அன்பில் பிறந்த பாந்தவ்யமும் அவன் குரலில் உறவாடின.

" ‹ன்னியுங்கள், தியாகு. இந்த ஜன்மத்தில் உங்கள் ஆசை வேண்டுகோளே என்னுல் நிறைவேற்ற முடியாததற்கு ரொம்பவும் வருந்துகிறேன். அது என்னு டைய மறந்த கன வாசிவிட்ட பழங்கதை !..."

சிதம்பரத்தின் பேச்சில் அளவிட முடியாத ஆருத்துயர் இழைபாய்ந்திருந்தது. ஏன் இத்தனே ஏக்கம் ? ஏன் இவ் வளவு விரக்தி மனப்பான்மை ? காரணம்...!

" காரணம் என்ன ? ஏன் அப்படி நீங்கள் கரம் பற்றிய உயிர்த் துணேவியை உதாசீனம் செய்து ஒதுக்குகிறீர்கள்...... என்ருன் தியாகராஜன் மறுபடியும் இடைமறித்து.

சிதம்பரத்தின் இதழ்களில் பசை பாய்ந்திருந்திருக்கு மோ ? ஏன் அவன் அப்படி வாய்மூடி மௌனியாகிவிட்டான்?

" சிதம்பரம் ! பெண்ணின் வாழ்வு தன் கணவனின் இன்ப அரவணேப்பில், அன்புப் பராமரிப்பில் தான் பரி பூரணம் அடைகிறது. அவள்—உங்கள் மனேவி உங்களுக் குரியவள் ; உங்கள் வாழ்வுதான் அவளுக்கு வையம் ; உங்கள்

நினைவுதான் அவளுக்கு உயிர். அவள் வாழ்வும் வளமும் தானே உங்கள் மூச்சு! நீங்கள் அறியாததல்லவே சிதம்பரம், இவை யனைத்தையும் கடந்தது கண்ணீருடன் கழிந்தொழியட்டும். உங்கள் மனைவியின் வருங்காலத்தை—நாளைப் பிறக்கவிருக்கும் நாளைத் திருநாளாக்குங்கள்...இது உங்கள் கடமை; அக்கினி சாட்சியாக உங்கள் 'மறுபாதி'க்கு நீங்கள் அளித்த வாக்குறுதியுங்கூட..." என்றான் ராமனுதன், குரலில் உணர்ச்சி கழித்தோட.

"ராமனுதன், என் கடமையை நினைவு படுத்துகிறீர்கள். ஆனால் அவள் கடமை? கொண்ட கணவனின் கவலையைப் போக்கக் கவலையில்லாமல், வெறும் நகைப் பைத்தியமாக அலைவதுதானு? இப்போது நினைத்தால் கூட நெஞ்சு குமுறுகிறது. அப்பொழுது வேலைபார்த்து வந்த கம்பெனியில் நான் பொறுப்பேற்றிருந்த காஷியர் வேலையில் அன்று இருபது ரூபாய் திட்டக் குறைச்சல் ஏற்பட்டது. அந்த நாள் ஆடிட்டிங் நடப்பதாக இருந்தது விஷயத்தை ஒரு மட்டாக அவளிடம் சொல்லி அவள் அப்பா செய்துபோட்ட ஒற்றை வடச் சங்கிலியை அடகுவைத்து இருபது ரூபாய் பெற்று கணக்கை நிரவல் செய்துவிட்டால் விரைவிலேயே எப்படியும் நகையை மீட்டுத் தருவதாகக் கெஞ்சினேன். அவள் பெண்ணுக இருந்தும் இவ்விஷயத்தில் பேயானுள். என் வேண்டுகோளையும் மறுத்து விட்டாள். கடைசியில் எப்படியோ ஒருமாதிரி பணத்தைக் கட்டிக் கணக்குப் பார்த்ததில் நான் தான் வரவு செலவுப் புள்ளிகளை மாற்றி எழுதி விட்டது புரிந்தது. அன்று வைத்த வைராக்கியம் இன்றுவரை மாறவில்லை. மாதங்கள் இருபது ஆகின்றன. இனியுமா அவளை அழைத்து நான் வாழ்க்கை தொடங்குவது? என்னை உதாசீனம் செய்தவளின் முகத்தை மீண்டும் நான் திரும்பிப் பார்க்கவா? ஊஹூம், ஒரு கணம்கூட எண்ணவும் மனம் ஒப்பவில்லையே அவளைப்பற்றி. மன்னியுங்கள் நண்பரே.."

கணவன் என்னும் கடமை மறந்து பேசிய சிதம்பரத்தின் வார்த்தைகளுக்கு மீளவும் ராமனுதன் மறுமொழி சொல்லத்

தொடங்கினான். "திருமணம் வெறும் ஐந்து நிமிஷச் சடங்கில்லே, அதைப் புரிந்து கொள்ள ஒரு வாழ்க்கை போதாது, தெரியுமா? உங்கள் மனத்திலுள்ள குரோதத்தை—அசட்டுப் பிடிவாதத்தை அலக்காக மூட்டை கட்டி வைத்து விட்டு, உங்கள் துணைவியை மறுவாழ்வு பெறச் செய்யுங்கள். அதுவே உங்கள் கடமை; அக்கினி சாட்சியாக அவளைக் கைபிடித்த தருணம் நீங்கள் செய்து கொடுத்த வாக்குறுதி? தவறு செய்வது மனித இயல்பு. அதை மன்னிப்பதுதானே தெய்வீகம்...?"

விம்மி வந்த கண்ணீர் ராமனுதனைப் பேசவொட்டாமல் நாவடைக்கச் செய்து விட்டது.

சிதம்பரம் ஒரு கணம் அதிர்ச்சியுற்றான், ராமனுதனின் கண்கள் சிந்தின நீர்மணிகள் அவனை அப்படிச் செய்தது. தன் விஷயத்தில் அவன் கொண்டுள்ள அன்பும் ஈடுபாடும் அவனைத் தன் நிலைமறக்கச் செய்தன.

"ராமனுதன், உங்கள் அன்பும் அக்கறையும் மகத்தானது. உங்களுக்கு நான் ரொம்பவும் கடமைப் பட்டிருக்கிறேன். ரேணுகாவை அழைத்து வரும்படி நாளைக்கே என் மாமனுருக்குக் கடிதம் எழுதிவிடுகிறேன். சரிதானே...? என் கடமையை நினைவுபடுத்தி, உணரச் செய்ததற்கு மிக்க நன்றி..." என்றான் சிதம்பரம். குனிந்த தலை நிமிர்ந்து. முகத்தில் அன்றுவரை நிலவியிராத அழகான புதுக்களை மெருகு பூசப்பட்டிருந்தது. புது வெள்ளத்தின் மிதப்பும் பூரிப்புமல்லவா அது!

"ஆஹா! ரொம்ப தாங்க்ஸ் மிஸ்டர் சிதம்பரம்! ஒரு பெண்ணின் வாழ்வில் புது மலர்ச்சி தோன்றச் செய்த புண்ணியத்தில் அடியேனுக்கும் உள்ள பங்கில் பெருமைப் படுகிறேன்; பெருமிதம் கொள்ளுகிறேன். நம் தோழர் தியாகுவின் திருமண முகூர்த்தத்துக்கு நாம் மூவரும் கட்டாயம் தம்பதி சகிதம் போய் வருவோம். அப்படியென்றால், நாம் நால்வருமே பெரிய வீடு பிடித்து குடும்பங்களை இங்கேயே செட்டில் செய்து விடுவோமே. ஆனால் நம் அருமை 'மெஸ்'

ஸுக்குத்தான் 'குட்பை' போட வேண்டும்.....எப்படி" என்றுன் ராமனுதன் பொங்கும் குதூகலத்தில்.

* * *

**வி**டிந்தது......

"இனி நாமெல்லாம் நண்பர் சிதம்பரத்தைத் தரிசிக்கக் கூட முடியாது. அதற்குக்கூட திருமதி சிதம்பரம் அவர்களின் அனுமதி தேவையாக்கும்......" என்று சுலாட்டாக் குரலை முன்னேட விட்ட வண்ணம் உள்ளே நுழைந்தார்கள் தியாகராஜனும் மாதவனும்.

அங்கு சிதம்பரம் மட்டுமே இருந்தான். அவர்களை வர வேற்றுன். தன் மனைவியை அழைத்து வந்து விடுமாறு தனது மாமனுருக்கு தபால் எழுதிய விபரத்தை நண்பர்களிடம் காட்டி விட்டுத்தான் 'போஸ்ட்' செய்தான் சிதம்பரம் அதற்குத்தான் அவனை நண்பர்கள் உரிமையுடன் கேலி பண்ணினுர்கள்.

தங்கள் குழுவில் ராமனுதனைக் காணுத அவர்களுக்குத் திகில் பரவிற்று. அவன் அறையை நாடிச் சென்றுர்கள். மாலையில் சிதம்பரத்தின் புது வாழ்வுக்கு அடித்தளமிட்டுப் பிரிந்தவர்கள் தாம், அப்புறம் ஒருவரை யொருவர் சந்திக்க முடியவில்லை.

ராமனுதனின் அறை திறந்தது திறந்தவாறு கிடந்தது. சாமான்களெல்லாம் போட்டது போட்டபடி சிதறிக் கிடந்தன மூலைக் கொன்றுக. இரவு போடப்பட்ட விளக்குப் போலும், அதுகூட இன்னும் அணைக்கப்படாது எரிந்து கொண்டிருந்தது. சிகரெட் துண்டுகள் பல பல சிதறிக் கிடந்தன.

அவர்கள் மூன்று பேரும் ஒருவரை யொருவர் மாறி மாறிப் பார்த்த வண்ணம் இருந்தார்கள்; பேசவில்லை. ராமனுதன் அறையில் காணப்படாததும், அறையின் அலங் கோலமும் அவர்களுக்கு ஏதோ ஒரு புதிராகத்தான் பட்டது

" இதோ ஒரு போட்டோ இருக்கிறதே..." என்று சொல்லியவாறு கீழே கிடந்த புகைப்படத்தை எடுத்து நீட்டினான் தியாகராஜன்.

" இது ராமனுஜனின் மனைவியின் போட்டோ. முன்பு இவர்கள் திருமணப் படம் தினத்தாள் ஒன்றில் வெளி வந்தது நினைவிருக்கிறது......" என்றான் சிதம்பரம்.

" இங்கே பாருங்கள் எத்தனை கடிதங்கள்..." என்று சொல்லிய மாதவன் மூலைக் கொன்றுப் கிடந்த அத்தனை கடிதங்களையும் ஒன்று திரட்டினான். அவை ஒவ்வொன்றும் 'பிரியமுள்ள கணவரவர்களுக்கு' என்று ஆரம்பித்து கடைசியில் 'தங்கள் அடியாள் மீனு' என்று ஒரே வாசகமாக முடிந்திருந்தது.

" மீனு என்பது ராமனுஜனின் மனைவியாயிற்றே. ஒன்றும் புரியவில்லையே. எங்கே ஒரு கடிதத்தைப் படியுங்கள் பார்க்கலாம்."

சிதம்பரம் கடிதத்தைப் படிக்கலானான் ;

" பிரியமுள்ள கணவரவர்களுக்கு "

அடியாள், உங்கள் மனைவி மீனு, வணக்கம். என்னுடைய முந்திய கடிதங்கள் அத்தனையும் உங்களுக்குக் கிடைத்திருக்கலாம். ஆறாக வடிந்த என் ரத்தக் கண்ணீரினால் எழுதப்பட்ட அத்தனை கடிதங்களுமா இன்னமும் உங்களுக்கு ஒரு பொட்டுக் கண்ணீரைக் கூட, ஒரு துளி இரக்கத்தைக் கூட உற்பத்தி பண்ணவில்லை. ஐயோ...! உங்கள் கைப்பிடித்தவள் நான். என்றோ ஒரு நாள்தான் தங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை சொன்னேன். சினிமாவுக்குப் போக வேண்டுமென்றேன். நீங்கள் கூடாதென்றீர்கள். நான் மறுத்துப் போய்விட்டேன் படம் பார்க்க வேண்டுமென்ற குஷியில், வந்திருந்த தோழிகளுடன். தவறுதான். அதற்குத்தான் எனக்கு இந்த பன்னிரெண்டு மாசம் கடுங்காவல் தண்டனையா ? ஐயையோ, நான் அடைபட்டுச் சாகாமல் செத்துக் கொண்டிருக்கும் என் வாழ்வுச் சிறையில் எப்பக்கம்

நோக்கிலும் உங்கள் ஆசைமுகமும். அன்பு விழிகளும், சிரிக்கும் உதடுகளும் தான் என் அகக் கண்களின் முன் தோன்றுகின்றன. அதனால்தான் நாலும் இந்த உயிரைப் பிடித்துக் கொண்டு சாகாமல் இருக்கிறேன். பெண் பரிபூரணமடைவது கணவனின் ஆதரவுப் பெருக்கினால் என்பதாக நீங்கள் எவ்வளவு முறை என்னிடமே சொல்லி யிருக்கிறீர்களே...! கணவன் மனைவியரிடையே ஊடலும் பிணக்கும் ஏற்பட்டால் தான் வாழ்வு ரசனை பெறும் என்ற கொள்கை கொண்ட 'தாம்பத்தியக்' கதைகள் பலவற்றை என்னிடம் கொடுத்துப் படிக்கச் செய்திருக்கின்றீர்களே...!

அத்தான், எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா? முன்பெல்லாம் இரண்டு மாதத்துக்கு ஒருமுறை பட்டணத்திலிருந்து எனக்காக 'டாண்' என்று ஓடிவந்து பூவை மாநகரில் குதித்து விடுவீர்களே... இப்போது வருஷம் ஒன்றாகப் போகிறதே...! எனக்கென துளி இடமாகிலும் அளியுங்கள். துளி இடம்! இனியும் என்னைச் சோதிக்காதீர்கள். பட்டதெல்லாம் போதும், நான் கணத்துக்குக் கணம் இறந்து கொண்டிருக்கிறேன். ஒரு முறை தங்களது தேவ தரிசனம் இம்முறையாகிலும் கிடைக்கச் செய்வீர்களென்று நம்புகிறேன். சருகாகிவிட்ட என்னைத் தள்ளிவிடுவீர்களா?...அத்தான்...!

தங்கள் அடியாள்,

அபலை மீனா"

சிதம்பரம் துளிர்த்திருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

"என் சீரழிந்து போயிருந்த வாழ்வைச் செம்மைப் படுத்தியவர் ராமநாதன். ஆனால் அதே ராமநாதன் தன்னுடைய அபலை மனைவியின் இத்தனை கடிதங்களுக்கும் இரக்கங் காட்டினதாகத் தெரியவில்லையே. எனக்கு எத்தனை எத்தனை உரிமை மொழிகளைச் சொன்னார். என் பொருட்டு அவர் வடித்த கண்ணீர்தானே என் திரையிட்ட கண்களைத் திறந்து விட்டது. ஆனால் காலமெல்லாம் கண்ணீர் வடித்துக்

கதறிக் கொண்டிருக்கும் தன் அபலை மனைவி மீனுவின் வாழ்வுக்குப் புத்துயிர் அளிக்க உணர்விலலையே. இதயமற்ற பாவி அவர்! ஆம்; அவரை இப்போதே கண்டு, எப்படியும் அவர் மனைவியை ஏற்றுத் திரும்ப ஆவன செய்ய வேண்டும். அப்புறம் தான் ஆபீசெல்லாம். அப்பப்பா, இத்தனை நாட்களாக இந்த ரகசியத்தை மூடி மறைத்து விட்டாரே ..'' என்று வீறுடன் மொழிந்த சிதம்பரம் மேலே தொடர்ந்து பேசத் தொடங்கின சமயத்தில், அவன் கையில் உறையிட்ட கடிதமொன்றைத் தபால்காரன் கொணர்ந்து நீட்டிச் சென்றான்.

" அன்புள்ள நண்பர் சிதம்பரத்திற்கு "

இந்தக் கடிதம் உங்களை—நம் நண்பர்களைக் கட்டாயம் வியப்பிற்குள்ளாக்கு மென்பதை நான் அறிவேன். என்னை விசித்திரப் பிறவி என்றும் விநிவிக்கப்பட முடியாத, புரியாத புதிர் என்றும் கூடத் தூற்றுவீர்கள்.

அன்று நான் தங்களிடம் நீங்கள் உங்கள் மனைவியைப் புத்துயிர் பெறச் செய்ய வேண்டுமென்று எவ்வளவோ மன்றாடிக் கடைசியாக வெற்றியும் பெற்றேன். ஆனால் அதே சமயம் என் உள்ளம் எரிமலையாக, சூறுவளியாக மாறியதை யாரும் அறிந்திருக்க முடியாது. நான் என் மனைவியைக் கடந்த சில மாதங்களாக 'விலக்கி' வைத்திருந்த புதிரை யாரும் அறிய மாட்டார்கள். அவள் செய்த சிறு பிழை என்னுள் இமாலயப் பிழையாகத் தோன்றியது; நான் பேயாகிப் போனேன். அவளை ஒதுக்கினேன். எங்களிடைப் பெரும் பிளவு சுவரெழுப்பி நின்றது. அவளை—அவள் பெயரைக்கூட எண்ணிப் பார்க்களன் நெஞ்சம் சம்மதம் சொல்ல மறுத்து விட்டது. மனத்தின் புதிருக்கு உவமையே கிடையாதோ? ஆகையால் தானே நானே ஓர் புதிராகிப் போக நேர்ந்தது. என் மனைவியை அபலையாக்கிய அந்தரங்கத்தை என் மனதிலேயே புதை பொருளாக்கி விட்டேன். என் வினையா? அவள் வினையா? அவ்வப்பொழுது நீங்களெல்லாம் என் மனைவியைப் பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு ஏதேதோ

பொய் சொல்லி தப்பித்து விட்டேன். அவள் செய்த ஓர் சிறு தவறு என்னுள் அப்போது பேயாகச் சுற்றி இதுவரை எப்படியோ என் வைராக்கிய வெறியைக் கெட்டிப்படுத்தி விட்டது. அவள் உயிரைப் பணயம் வைத்து எழுதிய கண்ணீர்க் கடிதங்கள் அத்தனையும்கூட என்னை மனித இதயம் கொண்டவனுக்க—மனிதப் பண்பு கொண்டவனுக்க வழி விடவில்லை. ஆனால் அன்று தாங்கள் தங்கள் துணைவி செய்த சிறு குற்றத்தை மன்னித்துவிட வேண்டுமென்றும் தங்கள் மனைவி ரேணுகாவை நீங்கள் மீண்டும் ஏற்றுப் புதுவாழ்வு தொடங்க வேண்டுமென்றும் உங்கள் மனைவியின் சார்பில் நான் கூறிய வாதங்கள் இதோ என் கண்களைத் திறந்து விட்டன ! என்னை அவை மனித மனம் படைத்தவனாக ஆக்கி விட்டன ; மனிதனாகி விட்டேன் !

நான் அன்று உங்களிடம் உங்கள் இல்லாளின் பக்கம் வாதமிட்டு வடித்த அதே கண்ணீர் உங்கள் மனதை வெற்றி வழிக்கு மாற்றியது போல, அதே என் கண்ணீர் இந்த க்ஷணத்தில் என் மனைவியின் தரப்பில் தர்க்கம் செய்து என் மனசாட்சியை வெற்றி கொண்டு, என்னையும் என்பிரிய மீனாவுக்குரியவனாக்கி விட்டது ! மரத்துப் போய்க் கிடந்த என் தார்மீக உணர்ச்சியும், அசட்டுக் கௌரவத்தினாலும் ஆத்திரத்தினாலும் அஸ்தமித்து விட்டிருந்த மனிதத் தன்மையும் அந்த சந்தர்ப்ப வேகத்தில் நான் பேசிய பேச்சினால் உதயமாகி என் வாழ்வையே ஒளி பெறச் செய்து, என் இதயத்தின் குரல் என்னைத் திருத்தி விட்டது. விந்தைதான் ! அதுவே எங்கள் எதிர்கால வாழ்வுக்குரிய புது வளத்திற்கும் வனப்பிற்கும் ஆசி கூவட்டும். இனி என் மீனா பசுந்தளிர் ! இதோ, இரவோடு இரவாக 'இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸி'ல் புறப்படுகிறேன். புனர் வாழ்வு பெற்ற மீனாவுடன் புது வாழ்வு பெற்ற நான் புத்தம் புதிய உலகிலே புதுயுகம் தொடங்க அங்கு ஓடி வருகின்றேன் !

மறந்து விட்டேன், பார்த்தீர்களா ? வரும்போது என் மீனா. தங்கள் அன்பு ரேணுகாவையும் கையுடன் கையாகக்

கைகோர்த்துக் கொண்டு தங்கள் முன் சமர்ப்பித்து விடப் போகிருளாம் !

நண்பர் தியாகுவின் மணவிழா என்றும் நம் இருவர் நினைவுகளிலும் பசுத்துளிராகக் காட்சியளிக்கும். ஆம் ; அது தானே நம் இருவரது விசித்திர மனங்களையும் மாற்றி யமைத்து சருகாகிப் பட்டுப்போன நம் இருவரது மனைவி யரையும் தளிராக்கிவிட ஏதுவாக அமைந்தது !

தங்கள் அன்பன்,

ராமனுதன் '

"ராமனுதன் இப்போதுதான் மனிதனுகி யிருக்கிருர் ; மீனு பாக்கியவதி !" என்றுன் சிதம்பரம் புதுப் பூரிப்புடன்.

பக்கத்துத் தெருக் கல்யாண வைபவத்தில் நாதஸ்வரக் காரன் பொழிந்து கொண்டிருந்த ஆனந்த பைரவியின் இன்பப் பண் காற்றில் தவழ்ந்து நண்பர்களிடையே அமுதச் சூழ்நிலையைப் பரிமளிக்கச் செய்து கொண்டிருந்தது.

# ● ● ● ஒற்றைத் துளி !...

ஸ்ரீ தண்டு மாரியம்மாள், போர்த்துக்கீசிய மாதா கோயிலைக் காத்துக் கொண்டிருந்தாளோ என்னவோ, அந்தக் கிழவியைக் கட்டிக் காத்தாள்; அவளுடைய ஒட்டிய சாண் வயிற்றுக்குப் படி அளந்தாள்; படியளக்கும் கடனுக்கு மூலாதாரமாக இருந்த அவளது 'சோற்றுக் கடை'யையும் வளர்த்தாள்; வாழ்த்தினாள்; வாழ வைத்தாள்!

"பாட்டி!"

"ம்!"

கடைவாயில் புகையிலை மட்டைக்குச்சி; எச்சில் ஊறியதால், வெறும் 'ம்' என்ற ஆமோதிப்பு மட்டிலுமே புறப்பட்டது. நரை மயிர் காற்றில் அலைந்தது. எழுபத்திரண்டு மைல் கற்களைத் தாண்டிய பெருமிதத்தில் ஆற்றாமையின் குரல் ஒலித்ததோ? வாழ்வின் அநுபவ முத்திரையா அந்த வெண்மைக் கோலம்?

ரிக்ஷாக்காரன் துட்டுக் கொடுத்தான்; பசி அடங்கிற்று என்ற நினைப்புத் தலை காட்டும் வரையில் 'மூசு மூசு' என்று அவன் சாப்பிட்டான். பலமாக ஏப்பம் விட்டான். பிசிறு தட்டிக் கிடந்த நாரத்தங்காய்த் துண்டம் வாய்க்கு

உணக்கையாக இருந்தது. கிழிசல் காக்கிச் சட்டையின் விளிம்புக் கோட்டில் வேர்வைத் துளிகள் வரம்பு கட்டின.

கோடை வெயில், காட்டேரித் தேவதையின் கண்கள் பார்க்கப் பயங்கரமாகத் தோற்றுவது இயல்புதானே ?

வாடிக்கைக்காரர்களின் பழகின முகங்களும், கேட்டு அலுத்துப்போன குரல்களும் அந்த விநாடியில் ஒதுங்கிக் கொண்டன. ஒரு குரல் பளிச்சென்று ஒலித்து, ஒரு முகம் பளிச்சென்று தெரிந்தது. "சோறு, சோறு" என்று பதறினன் வந்தவன். எங்கிருந்து வந்தான் அவன் ?

அவனுக்கு இரைப்பு எடுத்தது ; வாட்ட சாட்டமாக இருந்தான் ; நாவற்பழச் சிவப்பு ; வேர்வை வழிந்தது ; முடி திருத்தகத்திலே எதிர்க் கட்டை' போடப்பட்ட வதனம். ஆஹா ! காதலிக்கத் தோன்றும் ! அழுக்குப் பனியன் ; முண்டாப் பனியன் ; கந்தல் நிஜார். இரைப்பு இன்னமும் நிற்கவில்லை. சிவந்த கண்களில் களைப்பு ஊறியது. சுற்றிச் சூழ நோக்கினன்.

"ஆயி !..."

"என்ன ?"

"சோறு ; இந்தா துட்டு !"

எட்டணு நாணயம் கிழவியின் கல்லாப் பெட்டியான அந்த ஓட்டைச் சருவச் சட்டியில் விழுந்தது. சத்தம் கட்டையாக இருந்தது. நாலு இடத்துத் தண்ணீர் கண்டவளாயிற்றே கிழவி ; சும்மா இருப்பாளா ? சோதித்தாள். வந்த இளைஞனின் நாணயம் தேசாந்தரம் போய் விட்டது ; எட்டணுவைத் தலையைச் சுற்றி வீசினுள்.

இளவட்டம் கண் கலங்கினுன்.

கிழவி பார்த்தாள். அடுத்த விநாடியில், அகப்பை சுறுசுறுப்புக் கொண்டது.

"உம் பேரு என்ன தம்பி-?"

"மாரி !"

"இந்தா, புடிச்சுக்க. கெடைக்கிறப்ப துட்டைத் தந்துப்புடணும்...ஆமா !''

மாரியின் பார்வையில் செம்பாதி கிழவி நீட்டிய சாதத்திலும், மிகுதி பிசிறு பாய்ந்தது சட்டைக்காரி ஒருத்தியிடத்திலும், அழகுப் பாவையின்மீதும் பகிர்ந்தோடியது. பிறகு, சாதத்தை வாங்கிக்கொண்ட மகிழ்வுடன். பதற்றம் பதிந்த பார்வையைப் பரப்பி வீசினான். வெடிப்புக் கண்டிருந்த இதழ்க் கங்கிலே குறுமுறுவல் தடம் காட்டிற்று. உணவைக் கண்டு ஒன்பது நாட்கள் இருக்குமோ ?...பறக்கப் பறக்கச் சாப்பிட வேண்டும் என்ற துடிப்புடன், முதற் கவளத்தை அப்படியே கொத்தாக அள்ளினான். முருங்கைக்காய், பூசணித் துண்டுகள் விரல்களிடையே நழுவின. சாதத்தை வாய்க் கருகே கொண்டு சென்ற போது. அவனுடைய 'சோற்றுக் கை' நடுங்கியது. மனச்சான்று நடுங்குவது உண்டாமே ! மறுகணம், கவளச் சோறு கை நழுவியது, விரல் வழி வழிந்த இன்பத் தேன் போல. சோற்றுப் பருக்கைகள் ஒட்டி உற வாடின விரல்கள் நிஜார்ப் பைக்குள் சென்று மீண்டபோது, பர்ஸ் ஒன்று முகங்காட்டியது. பர்ஸை எடுத்துக் கிழவியின் காலடியில் வீசினான். பறந்தான். 'யாபாரத்திலே கவனமாயிருந்த அந்தக் கிழவி, எப்படியும் அந்திக்குப் பணப்பையைக் கண்டு அதை எடுத்து வச்சுக்கிடும். நல்ல வேளை ; செகப்புத் தொப்பிங்களுக்குத் தப்பிச்சாச்சு ! ஆமா, எம் மூஞ்சியை அந்த இன்ஸ்பட்டரு எப்பிடிக் கண்டுபிடிக்க முடியும் ?'

சந்துமுனைத் திருப்பங்களின் வழியே மாரி போய் விட்டான்.

கருக்கிருட்டு. கொறுக்குப்பேட்டைப் பகுதி என்றால், இருட்டுக்குப் பஞ்சம் இருக்க முடியுமா ?

அகல் விளக்கின் ஓரத்தில் கிழவி குந்தியிருந்தாள். சூறைக் காற்றுக்கு மல்லுக் கொடுத்தது விளக்கு. சமாளித்தது. விளக்கு எரிந்தது. காற்றலைகள் சுருக்கம் பாய்ந்த மனிக்கு இதம் தந்தன.

அந்தத் தோல் பையையே இமைக்காமல் நோக்கினாள் கிழவி. அடிக்கொரு வாட்டி கிழவி, கிழவி என்றால் நன்றாக இல்லையல்லவா? அவளுக்கு அழகான பெயர் இருந்தது. அவள் சொக்கி! பணப்பை கக்கிய பணம் நோட்டுக்களாக வும், நயா பைசாக்களாகவும், வேறு சில்லறை நாணயங் களாகவும் கீழே பரப்பியது. விரல் விட்டு எண்ணினாள். இரு பத்தைந்து ரூபாய்க்குப் பதினேழு காசு குறைச்சல். மீட்டும் பார்த்தாள் கிழவி. காசும் பணமும் சுழன்றன. பற்று அறுத்த தவமுனியின் பற்று இழந்த பார்வையல்லவா அது? திடீரென்று அவள் பார்வை கலங்கியது. காரணம் இதுவே. மாரியின் முகம் அவளது நினைவில் கலந்தது. 'ம், அச்சா! அப்படியே இருக்கான். எம்புள்ளே மாணிக்கமே மறு பொறப்புக் கொண்டு வந்திருக்கிறாப்போலவே தோணுது பேசாம அவன் திண்டிவனத்திலேயே இருந்திருக்கப் புடாதா? அந்தக் குட்டி மங்கம்மா சொக்குப் பொடி போட்டு எம் மவனைப் பம்பாய்க்குக் காடு மாத்திக் கூட்டிக்கினு போயிட் டாளே! அப்பன் பரலோகம் பறிஞ்ச கதைகூட அவனுக்குத் தெரியாதே! பாவி நான்! பத்து மாசம் சொமந்த புண் ணியத்துக்குக்கூட என்னைப்பத்தித் துளி அக்கறை கொள்ளக் காணுமே அந்தப் புள்ளே. எதுக்கும் அதிஷ்டம் வேணு மில்ல.'

எண்ணங்கள் இறந்த காலத் தடத்தில் வழி நடந்தன.

தட்டிக் கதவு தட்டப்படும் ஓசை புறப்பட்டது. கிழவி உணர்வைக் கூட்டி எழுந்தாள்; சேலைத் தலைப்பினால் முகத் தைத் துடைத்தாள். கைவிளக்கு வெள்ளெழுத்துப் பார் வைக்குக் கை கொடுத்தது.

"மாரியா?"

"ம்!"

ஊம்' கொட்டிக்கொண்டே வெளிக்கதவின் வழியை மூடினான். இருட் செறிவில் ஒளிச் சிதறல் அடங்கியது.

"மாரி, எம் வீடு எப்படி ஒனக்குத் தெரியும்?"

“ தண்டையார்ப்பேட்டையிலே ரிஸ்கா இஸ்க்கிற வனுக்கு இதுகூடத் தெரியலேன்னு, பின்னே அவன் பேசாம கூவத்திலே வுழுந்து செத்துப் பூடலாமே ஆயி ?”

சிருஷ்டிப் புதிருக்கு மேம்பட்ட பேச்சு.

“ ஆமாம், நெசமாவே நீ மாரியேதானு ?”

“ ஏனும் இப்பிடிக் கேக்கிறே நீ ?”

“ சும்மா !”

ஆறு வருஷங்களுக்கு முன்னம் பாசத்தை எடுத்துக் கொண்டு, பாசமுகத்தை மட்டிலும் வைத்துவிட்டுப் பிரிந்த தன் அருமை மகன் நெஞ்சில் விளையாடியதை அவள் ஏன் சொல்ல வேண்டும் ?

“ பாவம், மதியத்திலே நீ சோறு துண்ணலேயே ; இப்பக் கொஞ்சம் போட்டுத்தரவா ?”

“ ம் !”

அன்பின் சுமையைக் கண்களால் தாளமுடிய வில்லை போலும் !

மாரி சாப்பிட்டான்.

கிழவி சொக்கியின்முன் பணப்பை சுழன்றது. ‘ இன்னம் எனக்கு மட்டுப்படலேயே ! நல்ல புள்ளே மாதிரி தோணு றுனே ; இவனு இம்பிட்டுப் பணத்தையும் திருடியிருப்பான் ? ...இவன் மத்தியானம் திடுதிப்புனு சாப்பிட்ட சோத்தைக் கூட வீசிப்புட்டு ஓடின சடுதியிலே, தானுக்காரங்க வந்து வீசாரிச்சாங்களே என்னே ? ஒருவேளை, இவனேயேதான் தேடினுங்களோ ? ஆத்தா, மாரியம்மா ! என்ன சோதனேயோ, புரியமாட்டேங்குதே !’

“ ஆயி, நான் மதியத்திலே வீசிப்புட்டுப் போன மணி பர்சைக் குடுப்பியா ? என்னேப் பெத்த அம்மா சாக பொழைக்கக் கெடக்குது. இன்னிக்கு விடிஞ்சது தொட்டு ஒரு நயா பைசா வரும்படி குதிரலே. அம்மாளுக்கு ரொம்ப வும் முடியலே. டாக்டர் ஐயாசிட்டே காட்டினேன். பணம்

கேட்டாரு. கார்ப்பரேசன் ஆசுபத்திரி மருந்தும் கொணம் காட்டால. என்னைப் பத்து மாசம் சொமந்த புண்ணிய வதிக்குக் கடைசிக் காலத்திலே வைத்தியம் செய்யக்கூட முடியலேயே என்கிறத்தை நெனைச்சாக்கக் கிறுக்குப் புடிச்சிடும் போலே இருக்கு. கடைசிலே ஒரு முடிவுக்கு வந்திட்டேன். காலம்பறச் சினிமா ஆட்டம் முடிஞ்சு வந்த ஒரு மைனர்கிட்டேயிருந்து லாந்தினேன் அந்த மணிபர்சை. வேறே வழி இல்லேயே !...ம், சல்தியாக் குடு, ஆயி ! நான் ஓடணும் !"

கிழவி பானைக்குள் கையை விட்டு எடுத்தாள். மாரியை நெருங்கினாள். பத்து ரூபாய்த்தாள் ஒன்றினை நீட்டினாள். "இந்தா, இது எம் பணம். வாங்கிக்கினு நீ ஓடு! அந்தப் பணம் அத்தனையையும் விடிஞ்சதும் போலீசு டேஷன்லே குடுத்துப்புடப் போறேன். அந்நிய ஆளு உடமையை எடுத்தாப் பாவம். நீ போ !" என்று சொல்லி நிறுத்தினாள் கிழவி சொக்கி.

கதவு பதமாகத் திறந்தது.

சட்டம் நுழைந்து விட்டதா ?

சுருட்டை முடியும் க்ஷவரம் செய்யப் பெறாத முகமும் வாடிய பாவனையும் சாட்சியங்களாக நின்றன; வறுமைக் கூண்டில் நின்ற அவன் தரையில் சாய்ந்தான். பசி மயக்கம். உண்ட மயக்கம் அல்ல.

ஓடி ஒளிந்துகொள்ள முனைந்த மாரி அண்டி வந்து புதிய முகத்தைப் பார்த்தான். பாவம்! ஏழைமையை அறிய வேண்டுமானால், இன்னோர் ஏழையால்தான் முடியும் என்கிறார்களே ; மெய்தானோ ?

கிழவி விசுக்கென்று வந்தாள் ; முகத்தில் லேசாக நீர் தெளித்தாள். மயங்கியவனின் விழிகள் மலர்ந்தன. தாறுமாறாகக் கட்டிக் கொண்டிருந்த கிழிசல் வேட்டியைச் சரி செய்தன கைகள். எழுந்தான். தனக்கென்று வைத்திருந்த மிச்சத்தை அவனுக்குக் கொடுத்தாள் அவள். மூசு மூசு என்று சாப்பிட்டான்.

" ஓம் பேரு ?"

" மயில்சாமி !"

" ஐயோ, இவனுச்சும் எம் மவன் மாணிக்கமா இருக்கப் படாதா ?"

" ஒனக்கு அப்பன் ஆயி...?"

" எல்லாம் இனி நீதான், தாயே. நான் நாதியத்த அநாதை. வெறகு வெட்டிப் பொளேச்சுச் சேத்த பணம் கொஞ்சம் வச்சிருக்கேன். நாளேய தொட்டு எனக்கு நீதான் சோறு போடணும்" என்று செருமலுடன் விவரம் வைத்தான் மயில்சாமி.

மாரியின் வலக் கையில் ஊசலாடிய பத்து ரூபாய் நோட்டுப் பரப்பிலே அவன் தாய் நின்ருள். அவன் வெறி பிடித்தவன் போன்று அங்கிருந்து செல்ல எத்தனம் செய்தான்.

" அண்ணுத்தே, இரு. நானும் ஒங்கூட வாரேன்."—வாசலில் வந்து நின்ருர்கள்.

" ஊஹூம், நான் ஓடணும். எங்க அம்மாவுக்குக் கடுமையான காச்சல். இந்தப் பத்து ரூபாய்க்கு டாக்டரு சொன்ன ஊசி கெடைக்குமோ, கெடைக்காதோ, புரியலேயே ! சரி, நான் போறேன்."

" நில்லு அண்ணுத்தே. ஒன் கதையும் காரணமும் என்னேக் காட்டியும் பரிதாபமா இருக்குது. இந்தா, இருபத்தஞ்சு ரூபா. வா, நானும் ஒன்கூடவே வாரேன். ஒன் அம்மாளுக்கு வேண்டியதை வைத்தியம் செய்யுவோம். அப்பாலே நீ எனக்குத் தந்துப்பிடு, போதும். எனக்கென்ன, அப்பனு, அம்மாவா ? நீ கொடுத்து வச்சவன் ; ஒனக்கு அம்மா இருக்கு. ஆமா, நீ இப்பச் சொன்னது அம்பட்டும் நேசமா, இல்லே...!"

அடுத்த கணத்தில், மயில்சாமியின் கன்னத்தில் பளீரென்று அறைந்த பெருமை மாரியைச் சேரும்.

“ நீ என்னை மன்னிச்சிடு. நீ சொன்னது மெய்தான்; புரிஞ்சு போச்சு. இந்தா, பணம்; இருபத்தஞ்சு ரூபா! முடிஞ்சுக்க; அத்தக் கெழவி பணத்தையும் வச்சிக்கிடு. ஆபத்துச் சம்பத்துக்கு உதவும். நட, எனக்கு இந்தப் பட்டணக்களை புடிசாக்கும்!” என்று நீர்மல்க, நெஞ்சுருகச் சொன்னான் மயில்சாமி.

முப்பத்தைந்து ரூபாய்ப் பணத்தில் மாரியின் விழிநீர் சொட்டிக்கொண்டேயிருந்தது.

விடிந்தது.

மாரியின் தாய் மறுபிறப்பெடுத்துவிட்டாள்.

‘ எங்க அம்மா பொழைச்சுக்கிட்டாங்க. இனிமே நான் திருடவே மாட்டேன்.’

* * *

மயில்சாமியும் மாரியும் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தார்கள்; எழுந்து கண்களைக் கசக்கிக் கொண்டார்கள். ‘ நாஸ்தா ’ கடைக்குக் கூப்பிட்டான் மாரி. கொட்டாவி பறிந்தது. அலுக்கை அதற்குள் போய் விடுமா, பின்னே ?

“ ராத்திரி அடிச்சுப் போட்டாப்பிலே நீ தூங்கினியே; எனக்குத்தான் தூக்கம் புடிக்கல்லே.”

ஊரென்று இருந்தால், சேரி இல்லாதிருக்குமா? நண்பர்கள் இருவரும் தோழர்களாயினர். மடங்கி மடங்கி வழி நடந்தார்கள். ‘ நாஸ்தா ’ கடைக்குள் சென்று மீண்ட போது, உதயசூரியனின் தோற்றம் புலப்பட்டது.

மாரியின் உதடுகளில் தீச்சுடர் புகை கக்கியது. அடுத்த இரண்டாவது நிமிஷத்தில் ‘ஆ!’ என்ற ஓசை வெளி வந்தது. கை விலங்கின் ரூபத்தில் சட்டம் சிரித்தது.

மயில்சாமி ஓடத் தலைப்பட்டான்.

கிழவி சொக்கி அந்தப் பகுதிப் போலீஸ் ஸ்டேஷனி லிருந்து சுமை கடந்த மனத்தோடு, பெற்றுத் திரும்பிய நல்ல பெயருடன் நடந்தாள். அவளுக்கு முன்னே வந்து நின்ருர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வேணுகோபால்.

" தாயே. இன்னிக்கு மத்தியானச் சாப்பாட்டுக்கு நான் கட்டாயம் வந்து விடுவேன். சோறு சமைச்சு வச்சுப்பிடுங்க " என்ருர் அவர்.

கிழவி நடுநடுங்கினுள் ; நெற்றிமேட்டில் அதிசயம் விளு வடிவெடுத்து வேடிக்கை காட்டியது ; வேடிக்கை பார்த்தது.

" எசமான் !...நீங்க..." என்று தடுமாறினுல் சொக்கி.

" ஏன் பயப்படுறீங்க ! பாவம், உங்களுக்கு என்னைப் புரி யாது. ஆனு, மயில்சாமியைத் தான் உங்களுக்குத் தெரியும் உங்களை நான் மறக்க முடியாது. தாயே ! மாரிக்கு இரக்கப் பட்டுக் கொடுத்த பத்து ரூபாய் இத்தாங்க. எனக்குப் போட்ட உங்க சோற்றுக்கு மட்டும் பணம் தர எனக்கு வக்கு இல்லீங்க, தாயே !"—ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டரின் உருவிலே அவள் தன் மாணிக்கக் கட்டியைத் தரிசித்தாளோ ? .

* * *

" அண்ணுத்தே !"

சிறைக்கூடத்தில் கம்பிகளுக்கு மத்தியில் இருந்த மாரி நிமிர்ந்தான்.

போலீஸ் அதிகாரி வேணுகோபால் நின்ருர்.

சுற்றிச் சூழ விழித்தான் கைதி.

" மாரி, உன்னுடை தாய்ப்பாசம் பெரிசு. ஆனுலும், நீ திருடினதைச் சட்டம் அநுமதிக்கவோ, மன்னிக்கவோ முடி யாது. குற்றத்துக்கு உண்டான தண்டனையை நீ அநுபவிச்

சானதும், உன்னோட தம்பி மயில்சாமி உனக்கு எப்பவும் நல்ல வழியிலே உதவி ஒத்தாசை செய்வான். உன் தாயாருக்கு வேண்டிய பணி விடைகளையும் கவனிச்சுச் செய்யத் தவறவே மாட்டேன். நீ நிம்மதியா இருக்கலாம். என்ன அண்ணாத்தே, அப்பிடிப் பாக்குறே ?''

கன்னத் தழும்பை முத்தமிட்ட அந்த ஒற்றைத் துளிக்குப் பெயர் இன்னதென்று தெரிந்தால், தயவு செய்து சொல்ல மாட்டீர்களா ?

## ● ● ● தரிசனம்

முத்துமாரியம்மன் தேரோட்டம் நடந்து முடிகிறது !... பொன் அந்தியின் பூந்தென்றலிலே அழகு மகுடியின் தேனமுதப் புன்னகவராளி பூம்புனல் வெள்ளத்தின இசை அலைகளாகிப் பொங்கிப் பெருகி வழிகிறது; வழிந்து கொண்டே யிருக்கிறது.

முன்னடியான் சந்நிதியிலே அந்த நல்லபாம்பு நாதப் பாம்பாகி, மகுடியின் நாதத்தில் மயங்கியும் கட்டுப் பட்டும் படம் எடுத்துப் படம் விரித்து மெய்ம்மறந்து ஆடுகிறது; ஆடிக் கொண்டிருக்கிறது !...

"பலே...சவாசு !..." கரவொலி. செங்கோடன் புதிய தெம்போடு கருவம் துலங்கத் தலையை நிமிர்த்தினன். மூச்சு வாங்கியது. பொருட் படுத்துவானு? கைகளிலே நளின முடன் இழைந்திருந்த மகுடியை இடுப்பில் லாகவமாகச் செருகிக் கொண்டான். பின், தேள் கொடுக்கு மீசையை ஒருமுறை கம்பீரத்தோடு தடவிவிட்டுக் கொண்டான். அவன் பார்வையில் தெம்பு துறத்தது. சுற்று முற்றும் பார்வையை ஓட விட்டான். அவன் அட்டகாசமாகச் சிரிக்கக் கேட்கவா வேண்டும் ?

மையத்தில் விரிக்கப்பட்டிருந்த கந்தல் கிழிசலில் இப்போது காசுகள் விழத் தொடங்கின.

பிடாரன் செங்கோடன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். ஈசனுக்கு மாத்திரம்தான் பாம்பை அணியத் தெரியுமா, என்ன? அவனும் அந்தப் பாம்பை பாசத்தின் அன்போடும் அன்பின் பாசத்தோடும் குழந்தையை அள்ளியெடுத்து அணைத்துக் கொள்வதைப் போன்று வாரியெடுத்து அணைத்துக் கொண்டபின், கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டு, கூட்டத்தை வலம் வந்தான்.

கைதட்டல் மீண்டும் ஒலிக்கிறது; எதிரொலிக்கிறது.

" ஐயாமார்களே! அம்மாமார்களே! என்னோட 'நல்லதை' நல்லாப்பாருங்க. பல்லுப்போனாலும் சொல்லு போகப்புடாது அப்படின்னு ஒரு பேச்சுச் சொல்லுறது நாட்டுவளமை. ஆனா, என்னோட இந்தச் சாமிக்குப் பல்லுப் போயிடல்லே. ஆகச்சே, அதோட சொல்லும் போயிடவே போயிடாதுங்களே!...பார்த்தீங்களா இந்த ரெண்டு கோரைப் பல்லையும்?...பாம்புக்கு விஷம்பல்லிலேன்று செப்புவாங்க. மெய்தான் அட்டியில்லேதான். ஆனா, இந்த நல்லபாம்பு சத்தியத்துக்கும் தர்மத்துக்கும் மகுடிக்குக் கட்டுப்படுற தொப்பக் கட்டுப்பட்டதாக்கும்! பல்லுப் போன பாம்பைப் பிடிச்சாந்து பாவலா காட்டி, ஒங்களை ஏய்ச்சுப் பிழைக்கிற ஈனச் சென்மம் இல்லேங்க நான்! நான் செங்கோடனுங்க! பதில் வெட்டு இல்லாத அசல் குறப் பொறப்புங்க!....ஆனதாலே, அவங்க அவங்க கையிலே மடியிலே இருக்கிறதை வஞ்சனை பண்ணாம இந்த ஏழை பாழை மேலே இரக்கப்பட்டு வீசிட்டு நடங்க. உங்க வாய்க்கு ஒரு வாட்டிக்கு வெத்திலைச் சருகுக்காகும். ஆனா, எங்க ரெண்டு ஜீவன்களும் பசியாறுற புண்ணியம் உங்களுக்கு ஆகும். எனக்குப் படி அளக்கிற எஞ்சாமி இது; இதுக்கு நான் படிபோட வேணுமில்லீங்களா?...

உணர்ச்சிப் பெருக்குடன் பேசிக் கொண்டே சுற்றி வந்து நின்றான் பாம்பாட்டி. ஆற்றாமை மேலிட்டது. களைப்பைத்

தீர்த்து உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆறுதல் படிந்த உணக்கையை உண்டு பண்ணத்தான் மேலும் காசுகள் உருண்டோடி வந்து வீழ்ந்தன போலும்! "தருமசிந்தை கொண்டவங்க நீங்க! நல்லா எழுதிக் கிடக்கோணுமாக்கும்! கறுப்பனும் மாரியும் உங்களுக்குத் துணை இருப்பாங்க!" என்றான். கையெடுத்துக் கும்பிட்டவாறு தன்னை மறந்து அப்படியே நின்றான் அவன்.

பொட்டுப் பொழுதிற்குள் அத்தனை கும்பலும் எப்படித்தான் பாம்பைக் கண்ட படையாகக் கலைந்ததோ ?

சுருக்குப்பை திரம்பி வழிந்தது.

செங்கோடனின் குழி விழுந்த கண்கள் இரண்டும் தளும்பித் தத்தளித்தன. பெருமூச்சு பூ நாகமாய் வெளியேறிற்று. 'எம்புட்டு நேசக் கண்ணாட்டி என்னோட கண்ணு ரெண்டையும் திறந்து வச்சுப்புட்டுத்; தன்னோட அழகான கண்ணு ரெண்டையும் மூடி எட்டு மாசம் கழிச்சு, இண்ணிக்குத்தான் வரும்படி உபரியாய் மிதந்து கிடைச்சிருக்குது!... அஞ்சலை இருந்திருந்தாக்க, இம்மாம் பொழுதுக்கு பயாஸ்கோப்பிலே ஆடுறதாட்டம் ஆடிப்பாடிக் காட்டி யிருக்காதா? ...நான் பொசுப்பு இல்லாத கட்டையாகிப் பூட்டேனே! ஐயையோ!...ம்...அது இட்ட ஆணையைக் கட்டிக்காக்கத் தானுக்கும் இந்தக் கட்டையிலே ஊடாடிக்கிட்டு இருக்கிற இந்தப் பாளத்த உசிரை வலுக்கட்டாயமாய்க் கெட்டியாய்ப் பிடிச்சுக்கிட்டும் இருக்கேன்!—' நினைவுகள் தாழம்பூச் சிதறல்களாக மணத்தன. கனிந்த கடமைப் பண்பு பூண்ட ஓர் ஆறுதலோடு, சுருக்குப் பையை இடுப்பில் முடியிட்டு மகுடியுடன் செருகிக் கொண்டான். பெட்டிப் பாம்பைத் தோளிலே தொங்கவிட்டவனாக, நகரலானான்

மதுரை வீரன் பின்னே தங்கி விட்டார்.

செங்கோடனின் கால்கள் பூமியில் பாவின. சுருக்கென்றது அவனுக்கு. 'பாவம், சன்னாசிக் கிழம்!...எம் பேரிலே அவருக்குக் கெட்டாப்பிலே வயித்தெரிச்சல் மூண்ட

ருக்கும். அதுக்கு நான் என்ன செய்யட்டுமாம் ?...எனக்குச் சாமி அளந்தபடி எனக்கு ! ஊம் !...'

நிழல் நீண்டது, ஆசையின் விதியைப் போலே !

*　　　　*　　　　*

[illegible]ன்பிறைக்கு முகில் துண்டத்திடமிருந்து விடுதலை கிடைத்த ஆனந்தம் தலைழத்த வேளை அது.

சாலையின் மடக்கம் வந்ததும், செங்கோடன் 'சடக்' கென்று நின்று விட்டான். காடு மேடு காணுமல், கண் மண் தெரியாமல் கட்டறுத்துப் பாயும் காட்டாற்று வெள்ளமாகச் சுழித்திட்ட ஆசையின் வெறித் துடிப்போடு—தவிப்போடு ஈசான்ய முடுக்கில் பளிச்சிட்ட அந்தக் கட்டடத்தையே வெறித்துப் பார்த்தான்.

அது கள்ளுக்கடை.

செங்கோடன் தனக்குத் தானே ஒருமுறை சிரித்துக் கொண்டான். உயிரின் துணை தன் பங்குக்கு விடுதலை வாங்கிக் கொண்டு விதி வழியேப்பிரிந்துவிட்ட துர்ப்பாக்கியத்தின் ஏக்கத்திலும் ஏமாற்றத்திலும் எலும்பும் தோலுமாக உருகி, உருக்குலைந்து போய்விட்ட அவன் நெஞ்சில் இப்போது புதிய ஆசை, வெறியாகக் கிளர்ந்தெழுந்தது. நெஞ்சைத் தடவிப் பார்க்க வேண்டியவன் சுருக்குப் பையைத் தடவிப் பார்த்தான். 'காசுதான் உண்டன இருக்குதே! இண்ணைக்கு ஒருவாட்டி மட்டும் ஆசைதீர, மூச்சுமுட்ட கள்ளுத்தண்ணி குடிச்சா என்ன ? குடியா முழுகிப்புடப் போவுது ?,—கால்களை விசிறிப் போட்டான்.

அடுத்த கணத்திலே :

' புஸ்...ஊஸ்...ஸ் !'

பெட்டிப் பாம்பு சீறுகிறதா ?

இல்லை, மனப்பாம்புதான் அப்படிச் சீறுகிறதோ ?

அல்லது...?

செங்கோடன் கண்களை மூடி மூடித் திறந்தான். அவன் மேனி வெல வெலத்தது. வேர்வை பெருகியது. தள்ளாடித் தடுமாறித் தவித்தான், ' அஞ்சலைப் பொண்ணே ! சீருதே இனி. என்னைச் சமிச்சுப்புடு. தட்டுக் கெட்டுப் போகமாட் டேன். உன் ஆணையை இனி இந்தச் சென்மத்துக்குச் சோதிச்சுப் பார்க்கவே துணிய மாட்டேன் ! என்னை நம்பு, அஞ்சலை !' விம்மிப் புடைத்து வீரிட்டுப் புலம்பியபடி, அவன் தன் குடிசையைக் குறிவைத்துத் திசை திரும்பினான்.

அங்கே :

" யாரு, செங்கோடனுங்காட்டி ? "

குரல் குறுக்கு மறித்தது.

உறுத்துப் பார்த்தான் செங்கோடன்.

சன்னாசிக் கிழவன் களைத்துச் சளைத்து நின்றான். ஏக்க மும் ஏமாற்றமும் முகத்தில் உப்புக் கோடு மறித்திருந்தன. அவனது வயிற்றுப் பிழைப்பில் செங்கோடன் மண்ணை அள்ளி வீசி விட்டானே என்பதனாலா அந்த வேதனையும் நெட்டுயிர்ப்பும் ?

' ஊம் ' கொட்டினான் செங்கோடன். இறும்மாப்புத் தொனி.

" இண்ணைக்குத் திருநாளிலே சம்பாத்தியம் எக்கச்சக்கம் ஆனதினாலே, கள்ளுத் தண்ணியும் எக்கச் சக்கம்தான் போலே ! அப்பிடித்தானே, செங்கோடா ? "

கேள்வியில் தொற்றிப் பற்றிய எகத்தாளம் செங்கோட னுக்கா புரியாது ? அவன் நிமிண்டிவிட்ட நாகம் ஆனான். " சம்பாத்தியம் கூடுதல்தான். ஒப்புக்கிறேன். அது என் னோட சாமி அளந்தபடி. உண்ணாட்டம் சாவாடுசெத்ததை வச்சு மாரடிச்சுக்கிட்டு இருந்தாக்க, நானும் உம் மாதிரி மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கிட்டுத் திரும்ப வேண்டியது தான், கிழவா ! ஒனக்கு வயசு வளர்ந்திருக்குதே தவிர, புத்தி சத்தி வளரக் காணோமே ? அதாலே நானே என்னைப் பார்த்து கூடுதலாய்க் குடிச்சியாக்கும் அப்படின்னு பல்லு

மேலே பல்லுப் போட்டுக் கேட்கிறத்துக்குத் துணிஞ்சிட்டே! இல்லையா, சன்னாசிக் கிழவா?'' என்று சோளம் பொறிய எதிர்வினாச் கொடுக்கலானான்.

நோட்டம் புரிந்த புள்ளி கிழவன் சமர்த்தாகச் சமாளித்தான். "அடடே, சும்மா கேலிக்குக் கேட்டதுக்காகவா இம்புட்டுச் சடனை கொண்டுப்புட்டே நீ? செங்கோடா, நீ தங்கம்னா தங்கம் இல்லியா?...ம்...பாவம், அந்த அஞ்சலைப் பொண்ணு செத்து மடிஞ்சதுக்கப்பாலே நீயும் சாகாத பிணமாவே ஆகிப்பூட்டே! அறந்தாங்கிச் சந்தைத் தெருவிலே உன்னைக் கண்டு தண்டினதுக்கு அப்பறம் உன் உடம்பு ரொம்ப வசம் கெட்டுப் போயிடுச்சே! ஒண்ணுக்கும் ரோசிக்காம, என் ரோசனைப்படி எம்மவ ராசாத்திக் குட்டியை நீ கண்ணாலம் கட்டிக்கிட்டியானா, உனக்கும் நல்லது, எனக்கும் நல்லது! என்னா செப்புறே?'' என்றான் கிழவன்.

செங்கோடன் கிழவனைச் சோகம் சூழ ஊடுருவினான். "கிழவா, என்னோட நெஞ்சிலேயும் நினைவிலேயும் எம்புட்டு ஆசைக் கண்ணாட்டி அஞ்சலை தெய்வமாய் சதா காலமும் விளையாடிக்கிட்டு இருக்கையிலே, எனக்கு உன்மக ராசாத்தி என்னத்துக்காம்? எனக்கு அந்தரங்க சுத்தியோடே காவலாகவும் துணையாகவும் இருக்கத்தான் என்னோட 'சாமி'— நாகர்சாமி, இருக்குதே?.. நீ உன் பாதைக்கு மடங்கு. நான் என்பாதையிலே பறியிறேன்!'' என்று முகத்தில் அறைந்த மாதிரி பேசிவிட்டு, சுமை இறங்கிய மனத்தோடு நடக்கலானான். புதிய ரத்தம் பாய்ந்திருக்க வேண்டும்!

*  *  *

**போ**த்தல் காலி.

பாம்புக்குப் பால் வார்த்து முடிந்தது.

மனநிறைவும் நன்றி யறிவும் நிறக்க அந்தப் பாம்பு பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடந்தது.

செங்கோடனுக்கு வாய் கொள்ளாமல் சிரிப்பு வழிந்தது. "எஞ்சாமியோ ! இண்ணிய நாள் வரையிலே நான் பட்டினி கிடந்தாலும், உன்னை ஒரு வேளையாச்சும் காயப் போட்டிருக்கேனு ? நீ நல்லவனுக்கு நல்லவன் ; பொல்லாதவனுக்குப் பொல்லாதவன். அந்தத் துப்பு விளங்காதா எனக்கு ? சரி, சரி. உன்னோட பசிப்பாடு மூந்து போச்சு. இனி என் பசிக்கு வகை சொல்லணுமில்லே ? என்ன, நாயந்தானே, சாமி ?" என்று சிரிப்பும் களிப்புமாகச் செல்லமாய்க் கேட்டுக் கொண்டே குடிசையை அணைத்து நின்ற ஆலமரத் தூரடிக்கு மறுகினுன் அவன். கொம்பேறி மூக்கனுக இருந்தவன் இப்படித் தண்ணீர்ப் பாம்பாட்டம் ஆகி விடுவானு ?

நிலவில் பால் பொங்குகிறது.

அடுப்பில் உலை பொங்குகிறது.

செங்கோடனின் கண்கள் கொப்புளித்தன. அடுப்பில் சுள்ளியைத் தள்ளிவிட்ட போது, நெருப்புச் சுட்டு விட்டது. துடித்தான். 'அஞ்சலைத் தங்கம் என்னைச் சோதிக்காம இருந்திருந்தாக்க, எனக்கு ஏதுக்கு இம்மாங் கொத்த இடு சாமச் சோதிப்பெல்லாம் வருது ?' ஊன் உருகியது.

'நல்லது' தன் போக்கில் இரை தேடிக் கொண்டிருந்தது.

'அஞ்சலை !...'

செங்கோடன் தவித்தான்.

இதே மாதிரியான நிலா மலர்ந்த ஒரு நல்ல பொழுதில் தானே காட்டேரிக் காட்டுப்பத்தையில் அவன் அஞ்சலையைச் சந்தித்து, போட்டி போட்டுக் கொண்டு இந்த நல்ல பாம்பை மகுடி ஊதிப் பிடிக்க முயன்று, கடைசியில் பாம்பை 'நஞ்சு கட்டி'க் 'கைலாகு' கொடுத்துச் சாதுர்யமாகவும் சமர்த்தாக வும் பிடித்து வென்று, அதே மூச்சிலேயே அஞ்சலையையும் வென்று ஆட்கொண்ட அந்த நல்ல பொழுதை அவனுல் எங்ஙனம் மறக்க இயலும் ?

அள்ளிச் செருகிய செவ்வந்திப்பூக் கொண்டையும் அள்ளிச் செருகாத அன்புப் புன் சிரிப்புமாகப் பொலிந்த

அஞ்சலை நீங்காவிடை பெற்ற அந்த அவல வேளையைத்தான் அவன் மறக்கச் சாத்தியமா என்ன ?

அன்று அந்தியில் மோதை தலைக்கேற, தட்டித் தடுமாறிக் குடிசை வாசலை அடைந்த செங்கோடன், நெஞ்சு வலி தாளாமல் தீக்கங்கில் பட்ட புழுவாகத் துடித்துப் பதைத்துக் கிடந்த உயிரின் துணைவியான அஞ்சலைக்கு என் னென்னவோ மருந்து மாயமென்று புகட்டியும் அவளுடைய அருமை மிக்க ஜீவனை அவனால் கட்டிப் பிடித்துக் காக்க முடியாமல் போய்விட்டது ! 'நீங்க எம் பேச்சைத் தட்டிப்புட்டு கள்ளுக் கடையே சதம்னு கிடக்காமல் இருந் திருந்தா, சாகப்போற சமயத்திலே இன்னம் கொஞ்ச நாழி உங்க மடியிலே உங்க மகளாட்டம் நான் தலைவச்சு அமைதி யோட மடுத்துக்கிட்டு இருந்திருப்பேனே, மச்சானே ? நான் பறிஞ்சதுக்கப்பாலே நீங்க கள்ளுக் கடையை நாடிப்போக மனம் துணியவே படாதுங்க ! என்று ஆணை பரப்பினாள் அஞ்சலை.

சோற்றுக் கலயத்தில் ஆவி பறந்தது

'அஞ்சலை' ஒன்னை நான், எப் பி ற ப் பு க் கு மே மறப்பேனு ?

செங்கோடன் இருமினன் ; லேஞ்சைக் கொய்து சுடு நீரைத் துடைத்துக் கொண்டான். "மச்சான் !" என்ற புதுக்குரல் கேட்டு, ஏறிட்டுப் பார்த்தான்.

ஆ !—என்ன கூத்து இது ?

மோகினி அவதாரம் எடுத்த பாவனையில் பாம்பாட்டி முனியனின் மகள் ராசாத்தி புன்னகையும் புது நிலவுமாகக் காட்சியளித்தாள். எட்டத்தில் குடிசையை ஒட்டி நெளிந் திருந்த நல்லபாம்பின் பதவிசான கோலத்தைக் கண்டு. அதிசயத்தோடு ரசித்திருப்பாளோ ?

செங்கோடன் சுதாரித்துக் கொள்ளாமல் இருப்பவனு ? கொஞ்ச நாழிகைக்கு முந்தி தன்னை வசப்படுத்த முனியன் சொக்குப்பொடி தூவி 'லாந்திப் பிடிக்க'ப் பாடுபட்ட

அந்தத் தந்திரத்தையும் அவன் நினைத்துப் பார்த்தான். நினைவில் வைரம் பாய்ந்தது.

" மச்சானே ! "

" ஊம் ! என்னு இங்கிட்டு அத்திபூத்தாப்பிலே காற்று அடிக்கிருக்குது ? "

" மச்சானுக்குப் படி போடுற இந்த நல்லபாம்பைக் காண வேணும்னு ஒரு ஆசைமூண்டிச்சு. ஓடியாந்தேன். நாளும் பொழுதும் இந்த நல்லதோடவே விளையாடிக்கிட்டு இருந்தால்கூட தேவலாம்தானுங்க, மச்சானே ! "

அவன் விநயமாகச் சிரித்தான்.

இந்த ராசாத்திக் குட்டி மோகினியேதான் !...

" பேசுங்க, மச்சான் ! "

" உனக்கு ' செகல் ' இருந்தா, இந்த நல்லபாம்போடே நல்லா விளையாடு. அடி மடியிலே கமுக்கமாய் ஒளிச்சு வச்சிருப்பியே நாகநாளிவேர், அதை எடுத்துக்கிட்டு விஷம் கட்டி விளையாட முடிஞ்சா, விளையாடேன், ராசாத்தி !...',

ராசாத்தியின் அழகான வதனம் ஏன் அப்படிச் சலனம் கட்டித் திகழ வேண்டும் ? அவள் ஏன் அப்படித் தவிக்கிறுள். " மச்சான், வந்து......" சொல்ல நினைத்ததைச் சொல்ல இயலவில்லை அவளால்.

சிரித்தான் செங்கோடன். " ஏலே ராசாத்தி, ஒன்னோட சூது என்கிட்டே ஒரு நாளும் பலிக்கவே பலிக்காது ! அதுக்கு நான் ஆள் இல்லேயாக்கும் ! நல்லதனமா உன் தடத்திலெ நட. இல்லாங்காட்டி, நான் நல்லவனுய் இருக்க வாய்க் காது ! " என்று வீராப்புடன் பேசிஞன்.

பூமணம் இப்போது அங்கே வீசிஞல்தானே ?

* * *

**சா**லை ஓரம்.

பின்னிரவு.

புண்ணிய பூமியின் பயங்கர அமைதி.

செங்கோடன் அடித்துப் போட்ட பாங்கில் சுரணை தப்பிய தூக்கத்தில் அமிழ்ந்து கிடந்தான்.

தலைமாட்டில் பாம்புப் பெட்டி. தொலைவிலே சேரி நாய் ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

காலடி அரவம் அரவமாகப் பதுங்கி நெளிந்த துப்பு பாவம், செங்கோடனுக்கு எப்படித் தெரியக் கூடும்.

ஆனால்—“ ஐயையோ, ஆத்தாடியோ ! ”

வான் முட்டிப் பிளந்த அபய ஓலம் காற்றில் அலைந்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான் செங்கோடன்.

ஓலையைப் பிராண்டிப் பாய்ந்த மங்கிய ஒளியில் அவன் கண்ட காட்சி...

கிழவன் முனியன் கையில் பற்றியிருந்த நஞ்சு இறக்கும் மூலிகை நாகதளிப்புடன் நீலம்பாய்ந்து நுரை தள்ளிப் பிணமாகக் கிடந்தான். தலைமாட்டில் நல்லபாம்பு ! ..

செங்கோடனின் மனிதத் தன்மை விம்மிற்று. பாவிக் கிழம் ! என் பாம்பைப் பொட்டியோட லாந்திக்கிட்டு ஓடி, இதை வச்சுக்கிட்டுப் பிழைக்க நினைச்சிருக்கான். துப்புப் புரிஞ்ச ‘ நல்லது , அவன் கையிலேருந்து விடுதலை வாங்கிக் கிட்டு, அவனுக்கும் விடுதலை கொடுத்திருச்சுது !...அடபாவி ! ஒன் தலைவிதி இந்தச் சூதுக்கா களவு ஆகவேணும் ?

நல்ல பாம்பு இப்போது பெட்டிப்பாம்பு !

வெள்ளி முளைத்தது.

செங்கோடனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. வீணாப் போன பழிக்கு என்னை ஆளாக்கிப்பூடுமோ விதி ?...தவித்தான். பாம்போடு விடிவதற்குள் குடிசையை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்று முடிவுக்கு வந்த நேரத்தில், அவன் மனச்சாட்சி சம்மதம் கொடுக்க மறுத்தது. ‘நான் என்ன தப்புத்தண்டா செஞ்சேனும் ?—அவன் இன்னது செய்வதென்று மட்டுப் படாமல் உழன்று கொண்டிருந்தான்.

அந் நேரத்தில் ராசாத்தி அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தாள். "அடபாவி! நீயும் உன் பாளத்த பாம்பும் கூட்டுக் கூடிச் சதி பண்ணி என் அப்பன் உசிரைக் குடிச்சுப் புட்டீங்களே?" என்று குற்றம் சுமத்தினாள்.

செங்கோடன் நிதானமாகப் பேசினான்:

"இந்தாப்பாரு புள்ளே! அனாவசியமாய்ப் பழி சுமத்தினே, அது சங்கிலிக் கறுப்பருக்கு அடுக்காது. ஆத்தா பாதம் பெரியவளுக்கும் பொறுக்காது! உன் அப்பன் என்னென்னமோ தில்லு மல்லு—தகிடுதத்தம் செஞ்சும், மாயம் பண்ணியும் என்னோட சாமியை எங்கிட்டேயிருந்து பறிச்சுக்கிட எத்தனிச்சான். ஆனா; அது பலிக்கலே! கடைசியிலே என்னோட பாம்பைக் களவாட நினைச்சிருக்கான் போலே. பாம்பு—நல்லபாம்பு பாடம் படிச்சுக் கொடுத்திருச்சு குற்றம் செஞ்சா, அதுக்கு உண்டான தண்டனையை அனுபவிக்காமலா தப்ப ஏலும்! இந்தப் பாடம் ஒனக்கும் கை கொடுக்கும், ராசாத்தி! தப்பு எங்க பேரிலே இருந்தாத் தானே நாங்க பயப்படவேணும்?...உன் அப்பனை ஏந்திக்கிட்டு முதலிலே கிளம்பு, ராசாத்தி!" என்றான்.

பிணம் மறைந்தது. 'பாவம்!...'

*    *    *

இருள் கனத்துக் கிடந்தது.

செங்கோடன் சுயப்பிரக்ஞை இழந்து, செத்தசவம் போலே ஓலைக் கிழிசலில் கிடந்தான். விஷக் காய்ச்சல் என்றால், சாமான்யம் அல்லவே!

மனம் கொண்டவன் மருந்து கொடுத்தான், 'உடை கஞ்சி'யும் கொடுத்தான்.

ஆந்தையின் அலறல் கேட்டுத்தான் செங்கோடன் உசும்பிக் கொண்டிருப்பானோ? அவன் பார்வை எடுத்த எடுப்பிலே பாம்புப் பெட்டியை நாடி ஓடியது. மறுகணம் பதைத்துத் துடித்துத் தவித்தான். 'ஐயையோ! எஞ்சாமி

எங்கிட்டுப் பறிஞ்சிருச்சு ?...காலம் பறவிலேருந்து இத்தி பால் கூட பல்லிலே படாத துப்பை விளங்கிக்கிட்டு, இனியும் எனக்குச் சுமையாய் இருக்கப் படாதின்னு ரோசிச்சு ஓடி யிருக்குமோ ? ஐயையோ ! நான் என் சாமியை எங்கிட்டுப் போய்த்தேடுவேன் இந்த நிலைமையிலே ?... பிள்ளைகுட்டியைக் காட்டாத தெய்வம் இந்தப் பாம்பைத்தான் நம்மளுக்கு குஞ்சாய்க் காட்டியிருக்குதுங்க, மச்சான். ஆனபடியாலே, நீங்க எந்தக் காரணத்தைக் கொண்டும் நம்ப நல்லபாம்பைக் கைமாத்தியோ, கைவிட்டுப்புட்வோ கூடவே கூடாதுங்க, மச்சானே ! 'அப்படின்னு ஆணை வச்சீதே என்னோட அருமைப் பொஞ்சாதி அஞ்சலை ! ஆத்தா நாகம்மையே ! என்ன சோதனை இது ?'—அனலில் பூவாகக் கருகினான் அவன்.

மறுகணம், 'புஸ்...ஸ்'என்ற ஒலி கேட்டது. திரும்பிப் பார்த்தான் அவன். என்ன ஆச்சரியம் !...நல்லபாம்பு நெளிந்து நெளிந்து. ஊர்ந்து வந்தது.

அவன் அந்தப் பாம்பைத் தடவிக் கொடுத்தான், பாசத் தோடு. விழிகள் கசிந்தன. திடுதிப்பென்று நெஞ்சில் வலி எடுத்தது. நெஞ்சைப் பற்றிக் கொண்டு புரண்டான். "ஐயையோ ! வலி தாள முடியலையே ?" என்று அலறினான். வேர்வை மண்டிப் புரண்டது. மெள்ள எழுந்தான். தன் தலையை அந்த நல்ல பாம்பின் தலைக்கு நேராக நீட்டிக் கொண்டு, கண்ணீர் துளும்ப அதை ஊடுருவிக் கூர்ந்து நோக்கினான்." சாமி, என்னை என்னோட அஞ்சலைக் குட்டி கூப் பிடுது. நான் உன்னை விட்டுப் பறிய வேண்டிய வேளை நெருங் கிக்கிட்டு இருக்குது. எனக்கு நீ துணையாவும் உனக்கு நான் துணையாவும் கடைசி மட்டுக்கும் இருக்க வேணும்னு ஆணை யிட்ட அஞ்சலைப் பொண்ணோட ஆசையை இதுமட்டுக்கும் நாம ரெண்டு பேருமே நாயப்படி காப்பாத்திப்புட்டோம், இது பரியந்தம் எனக்குத் துணை இருந்த உனக்குத்தான் நான் துணை இருக்க லவிதம் இல்லே !..என் உயிர் கூட்டுக் குள்ளாற ஓடிக் கிட்டிருக்கிறப்பவே, நீ உன் இஷ்டப்படி எங் கானும் காட்டுப் பக்கம் ஓடிப்போயிடு, சாமியே !..." என்று

நெஞ்சுருக்க கதறி வேண்டிக் கையெடுத்துக் கும்பிட்டான் செங்கோடப்பிடாரன்.

ஆனுல்...அந்த நல்பாம்பு ‘ ஊகூம் ’ என்ற பாவனையில் தலையை உலுக்கியது.

“ சாமியே ! என்னோட கண்ணுக்குக் கண்ணுன என் சாமியே ! உன்னை நான் எப்பிறப்புக்குமே மறக்கவே மாட்டேன் சாமி !...”

செங்கோடனின் கண்கள் மூடிக் கொண்டன. மறு இமைப்பில் :

சிதறிக் கிடந்த மகுடியின் மீதமர்ந்த அந்த நல்லபாம்பு ஒருகணம் வெகு அற்புதமாகப் படம் எடுத்து, படம் விரித்து ஆடியது ; விளையாடியது. செங்கோடன் மகுடி ஊதி இசைக்கும் புன்னுகவராளியின் இசை அதன் செவிகளிலே இழைந்திருக்க வேண்டும் ! விளையாட்டு முடிந்தது. செங்கோடனைச் சுற்றி வலம் வந்தது. பிறகு—

செங்கோடனின் காலடியைத் தஞ்சமடைந்த அந்த நல்ல பாம்பு மீண்டும் படம் எடுத்தது ; படம் விரித்தது படம் விரித்த தலையை மண்ணில் அடைக்கலம் வைத்து ஓங்காரமாகவும் ஒய்யாரமாகவும் மூன்று தடவை அடித்தது அடித்துக் கொண்டது. சத்தியத்தின் ஒலியாகவும் தருமத்தின் குரலாகவும் சப்த அலைகள் மிதந்தனவோ ? மறுகணம் :

பொங்கிப் பீறிட்ட ரத்த வெள்ளத்தின் நடுவே மண்ணிடைத்தலை சாய்ந்துவிட்டது அந்த நாதப் பாம்பு.

**வி**டிகிறது !...

சத்தியத்தின் தர்மமாகவும் தர்மத்தின் சத்தியமாகவும் அமரப் புன்னகையோடு தேவதரிசனம் தந்து கொண்டிருக்கிறது அந்த நல்ல பாம்பு ! ..

# ●●● தம்பி உடையான்

ராஜாத்தியை உள் வாசலில் இருத்தி வைத்துவிட்டு வெளி வாசலுக்கு வந்தாள் பூங்காவனம். கடலைக் கொடிப் பட்டறை மீதிருந்த சிவசாமியை ஓரக்கண்ணால் அளந்த வண்ணம், 'கவ்வல்' கம்பினால் எஞ்சிக் கிடந்த கடலைக் கொடிகளைச் சுருட்டி மடக்கி தூக்கி வீசினாள் அவள். பழகிப் போன குறிப்புக்கு இரு தரப்பிலுமேதான் வெற்றி. அவளைப் போலவே, அவனும் வேர்வைக்கு அணை கோலினான்.

"பாளத்த வெய்யில் ஆளை வறுத்து எடுத்துப்பிடும் போலே!"

"ஆமா, மச்சான். நீங்க சொல்றது மெய்தானுங்க!"

பூங்காவனம் சொல்லி வாயை மூடவில்லை. கோடை வெயில் குணம் மாறியது. மழை கண் திறந்தது. அதே சமயத்திலே, ராஜாத்தியின் சிணுங்கல் அழுகையும் கண் திறந்தது. கோடை மழை நினைத்தால் பொழியும்; குழந்தையின் கண்ணீர் மழைக்கும்கூட நேரம் காலம் கிடையாது தானே?

சிவசாமி பட்டறையினின்றும் தரையில் குதித்தான். பூங்காவனம் ஓடிப்போய் மகளை எடுத்துக் கொண்டாள்.

" நம்ம மாணிக்கத்தைக் காணலையே, மச்சான்? பள்ளிக்கோடம் விட்டிருப்பாகளே?...நான் பெத்த மவன் தூத்தலிலே நனைஞ்சிக்கினு எங்கனே அவதிப்படுருனே? எனக்கு ஒண்ணும் மட்டுப்படல்லீயே? " என்று வருந்தினாள் அவள்; சேலைத் தலைப்பினால் தலையைத் துடைத்துக் கொண்டாள்; ராஜாத்திக்குச் சிரிப்புக் கொள்ளவில்லை.

" ஒரு மூச்சு பறிஞ்சு போய் புள்ளையைத் தேடிக்கிட்டு ஓடியாரேன். பூங்காவனம்! " என்று சொல்லிவிட்டுச் சிவசாமி வாசலுக்கு விரைந்தான். அப்பொழுது விண்ணுக்கும் மண்ணுக்கும் ஊடாகப் பொன்நிறக் கதிர்கள் விளையாடின; தூவானம் அழகுடன் திகழ்ந்தது.

" அப்பா! " என்று சன்னக் குரலெடுத்துக் கூவியபடி ஓடிவந்தான் மாணிக்கம். பாதங்களிலே ஊர்ந்திருந்த வேகம் தன் போக்கில் மட்டுப்பட்டது. மாணிக்கத்தின் தலையைத் துடைத்தாள் பூங்காவனம்.

' தூத்தலுக்கு எங்கேடா ராசா ஒண்டியிருந்தே?..." என்று கவலையுடன் கேட்டான் சிவசாமி.

" அரசமரத்து ஒண்டலிலே அப்பா!"

" எம்புட்டு வக்கணையாச் சேதி சொல்லுறான், கேட்டீயளா, மச்சான்? "

" ம்! " என்று 'ம்' கொட்டிக் கொண்டே வந்த சிவசாமி தன் மகனுடைய மேற் சட்டையையும் 'ட்ரௌச'ரையும் கழற்றினான். பைகளிலிருந்து மிட்டாய்கள் சில உதிர்ந்து விழுந்தன.

" ஏதுடா இதெல்லாம் கண்ணு? "

" சேக்காளி குடுத்தான்!..."

" இல்லே மாமா! இவுக பெரியப்பா குடுத்தாக. எங்கண்ணாலே நான் கண்டேனாக்கும்! " உண்மையைச் சொல்லிய பெரு மகிழ்ச்சியுடன் வந்து நின்றாள் சிறுமி அல்லி.

' யாரு அல்லி, வேலாயுதத்தோட அப்பாவா? "

"ம்!...உங்க அண்ணாச்சி, மாமா!" என்று அழுத்தம் வீசிப் பேசினாள் சுட்டிப்பெண்

சிவசாமியின் பற்கள் ஒன்றுடன் ஒன்று உரசின. "அண்ணாச்சி!"—மறுகணம், கையிலிருந்த மிட்டாய்களைத் தூர வீசியெறிந்தான் அவன். "ஏலே, இனிமே அங்கனே போனே, அப்பவே உன்னை முறிச்சுப் போட்டுப் பிடுவேன். ஆண் குஞ்சு சாமி பிடிச்சுப் போடலைன்னு நெனைச்சுக்கிடுறேம்!" என்று அபாய அறிவிப்பைக் காட்டி, கைகளையும் ஓங்கினான் தந்தை.

குழந்தை மனம் விம்மியது!

* * *

'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்!' என்பது வரலாறும் காப்பியமும் வடித்துக் கொடுத்த உண்மை.

குப்புலிங்கம் சேர்வைக்கு இரு கண்கள்போல, பெரிய சாமியும் சிவசாமியும் அமைந்தார்கள். சிவசாமி தம்பி; பெரியசாமி மூத்தவன். பிஞ்சு உள்ளங்களுக் கெல்லாம் அவர்கள் இருவரும்தான் 'தலைக் கட்டு' கொண்டவர்கள்; 'கார்வார்' போன்ற உரிமைக்கும் பாத்தியம் பூண்டார்கள். ஒருநாள், 'உப்புக்கோடு' மறித்து விளையாடினார்கள். தண்ணீர் 'பாய்ச்சி' முடிந்ததும், கரையில் காக்கும் பொறுப்பு பெரியசாமியின் தலையில் விழுந்தது. அந்த விளையாட்டில் முறைமையில் இன்னொருவன் தப்புச் செய்தான். உடன் பிறந்தானை எதிர்த்த பொடியன்கள் எழுவரையும் எதிர்த்தான் தம்பி சிவசாமி 'எங்க அண்ணாச்சியை இந்த ஊர்க்காட்டிலே ஒருத்தன் கை நீட்டித் தொடவா?...' என்று வீறு பேசி, தமையனைக் காத்து வெற்றியும் பெற்றான்.

சிவசாமி சின்னவன் தானே? அவனுக்கு ஒரு திருப்பம் அம்மை கண்டது. குய்யோ முறையோ வென்று, வெளி வாசலில் செருகப்பட்டிருந்த வேப்பிலைக் கொத்தைப் பார்த்து அழுதான் பெரியசாமி. உடன் பிறப்பு இல்லையெனில், அவ் வுடம்பு பாழ் என்ற முதுரைக்குப் பொழிப்புரையாக அமைந்

தது அவன் வடித்த கண்ணீர். அம்மன் இரங்கினாள்; அம்மை இறங்கியது! "தம்பி! தம்பி!" என்று வானத்துக்கும் பூமிக்கும் கூத்தாடினான் பெரியசாமி.

பெரியசாமியும் சிவசாமியும் பையன்களாகவே இருந் திருக்கலாகாதா...?

*  *  *

பொடுகுத் தலையில் தூதுவளை இலைச்சாற்றைப் பிழிந் தாள் பூங்காவனம். வாயைத் துடைத்துவிட்டு 'லேஞ்சை' எதறித் தோளில் போட்டபடி வந்தான் சிவசாமி. நண்டுக் குழம்பு இன்னமும் அவன் கையில் மணத்தது; 'வெத்திலைச் சருகு' போட்டுக் கொண்டான் அவன். மண் வெட்டி, கடப்பாறை, கரணை அரிவாள் போன்றவைகளை எடுத்து உள்ளிருந்த 'சாப்பு'க்குள் போட்டு மூடினான் அவன்.

நிலவுப் பெண் பூ முடித்துச் சிங்காரப் புன்னகையை வெள்ளி முலாம் பூசி வெளியேற்றிய வண்ணம் 'வெள் ளோட்டம்' வந்து கொண்டிருந்த ஆனந்தமான பொழு தல்லவா அது!

மாணிக்கம் "ஆத்தா!" என்று அழுதான். புண் வலித்திருக்க வேண்டும்.

"ரெண்டு பொழுது போனதும் பொடுகு குணமாகிப் பிடும்டா, கண்ணு!...மாரியம்மன் தேரோட்டத்தன்னிக்கு உனக்கு முடி இறக்கவேணும். அதுக்குள்ளாற எப்படியும் தலைப்புண்ணு சாடா காஞ்சிப்பிடும்!" என்று விளக்கினான் சிவசாமி. 'பாவம்' நான் அண்ணைக்கு அப்படித் தலையிலே குட்டி யிருக்கப்புடாது!, என்ற கழிவிரக்கம் அவனுள் கோட்பாடு காட்டிற்று. அதே வேளையில் சிவசாமியின் மனம், மாணிக்கத்தை அடிப்பதற்கு வழி காட்டிய துணை நிகழ்ச்சியை நினைத்தது; அந்தத் துணை நிகழ்ச்சியின் ஆதார சுருதியாகக் குரல் தந்த தலைமைச் சம்பவம் ஏடு திருப்பியது. அவன் பார்வை உங்கோ திசை போனது. அவன் உதடுகள், "அண்ணுச்சியாமே! அண்ணுச்சி!" என்று உரக்கக் கத்தின.

ஆண்ட பெருமாள் ஆசாரி நாட்டு வைத்தியர்; கை ராசிக்காரர். சூரணம் பச்சிலையும் அவருக்குள் அடக்கமே! அவர் வந்து சிவசாமியிடம், "தம்பி, உங்க அண்ணாச்சி பெரியசாமி, சேதி தெரியா தாங்காட்டியும்?...அந்தி சாஞ்சுங்கூட மிளகாய்க் கண்ணுகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கிட்டிருந்தாராம். ஏற்றமரம் முறிஞ்சு, உச்சாணியிலே நின்ன உங்க அண்ணாச்சி தவறி அப்படியே சாம்பான் கிணத்துக்குள்ளறவே விழுந்துப் பிட்டாகளாம்!...மஞ்சப் பத்து போடுறதுக்கு கொடுத்து வச்சிருக்குது வழியிலே போன ஆளுங்க அவரைக் காப்பாத்தி வெளியேத்தித் தூக்கிக்கிட்டு வந்து வீட்டிலே போட்டிருக்காங்க! இன்னம் பேச்சு இல்லே!...ஆமா, உங்களுக்குத் தெரியாதா?...நீங்க போய்ப் பார்க்க வேணுமா, தம்பி?" என்று விவரம் சொன்னார்.

சிவசாமி 'ம்' என்று பெருமூச்சைப் பிரித்தான். அங்கிருந்து விரைவு பாய்ச்சிச் சென்று மறைந்தான்.

"பெரியப்பாவுக்கு மேலுக்கு முடியலேயாம். சொல்லு ஆத்தா!" என்று வேண்டினான் மாணிக்கம். ப—ட—ம் எழுத்துக்கள் சிலேட்டுப் பலகையில் அழிந்திருந்தன.

"ஆமா, ஆமா!..."

*  *  *

ஐயனார் குதிரையையே இமை வலிக்க, நெஞ்சு வலிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் சிவசாமி. அவனுடைய விழிகளிலே ஆத்திரம் பொங்கியது

தோளுக்கு மேல் தோழன் என்ற அளவுக்குப் பெரியசாமியும் சிவசாமியும் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் தான், குப்புலிங்கம் சேர்வை கண்களை மூடினார். கடன் கட்டி போக, சேந்தங்குடி ஜமீன் கிணற்றுத் தொங்கலில் இருந்த இரண்டு சோளக் கொல்லை அவர்கள் இருவருக்கும் மிஞ்சின. பெரியசாமியின் பொறுப்பில் இவை இருந்தன; அண்ணனும் தம்பியும் உழைத்தனர். சாண் வயி...

பிரம்மப் பிரயத்தனமான யிருந்தது. இதற்கிடையில், பெரியசாமி பட்டணத்துப் பக்கம் போய்ச் சாயாக்கடை வைத்து மூன்று வருஷங்களை ஓடவிட்டு ஊருக்கு ஓடிவந்த போது, அவனிடம் பணப் புழக்கம் மிஞ்சி யிருந்தது; கல்யாணம் கட்டிக் கொண்டான். இரண்டு சோளக் கொல்லையில் தனக்கு ஒன்றை எடுத்துக் கொண்ட பெரிய சாமி, தம்பிக்கு ஒன்றையும் ஈந்தான். ஆனால், பெரியசாமி யின் பால் அதிருஷ்ட தேவதையின் நோக்கு விழுந்திருந்தது. எனவே, அவன் தொட்டது துலங்கியது. ஆனால், தம்பியான சிவசாமி உடல் உழைப்பையே நம்பினான்; உழைப்பு முழுப் பலன் சொல்லி விடுமென்று கூறுவது சாத்திய மில்லைதானே!

காலம் நிற்கவில்லை.

பூங்காவனத்தின் மீது சிவசாமிக்கு இஷ்டம் விழுந்தது; கல்யாண விஷயத்தைச் சொன்னான் அவன்; தன் தமைய னிடம் பிரமாதமாக எதிர்பார்த்தான் அவன். ஆனால் அவ னோ நூறு ரூபாய் மட்டுமே கொடுத்தான். "எங்கிட்டே இதுக்கு மேலே கிடையாது. நான் சுயார்ஜிதமாகச் சம்பா திச்சுக் கை கொஞ்சம் வலுத்தப் புறந்தான் கண்ணாலம் காட்சியைப் பத்தியே மனசிலே நினைச்சேன். அது போலே, நீயும் சொந்த மாச் சம்பாரிச்சு ஆனதும், உன் மனசுக்கு ஏத்தவளைக் கட்டிக்கிடேன்!" என்று நிர்த்தாட்சண்யமாகத் தீர்ப்பளித்து விட்டான் பெரியசாமி.

அன்று தினம் உடன்பிறப்புப் பிளவு கண்டது; 'முகா லோபனம் நின்றது.

பெரியசாமியின் 'கை' ஓங்கியது; வெள்ளாமை விளைச் சல் மட்டுமல்ல, கொடுக்கல் வாங்கல் தொழிலும் நடத்தி னான். மிளகாய் 'உபயத்'துக்கு ஐந்து பத்து கடன் கொடுத் தும் வரலானான் அவன். தலைச்சன் குழந்தை வேலாயுதம். அவன் பிறந்ததும், அதிருஷ்டம் மேலும் வளர்ந்தது.

சிவசாமி தனிமரம் ஆனான். மேலத் தெருவில் இருந்த பூங்காவனத்தின் பூங்கரம் பிடித்தான்; அந்தக் குடிசை யிலேயே வாழ்க்கை நடத்தினான். கையடக்கமாக 'டீ கடை'

ஹன்றை நடத்தினுன். வரவுக்கும் செலவுக்கும் போக, அணு கணக்கில் உண்டியல் கலயத்தில் 'நிதி' சேரத் தொடங் கியது. தலைச்சன் மாணிக்கம்.

மாணிக்கத்தைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தான் சிவசாமி. அப்போது பெரியசாமி மாணிக்கத்திடம் வழியில் கண்டு ஒரு ரூபாய் கொடுத்தாரும்! இதை மகன் வாய் மொழியில் கேட்டதும் சிவசாமி அந்தப் பணத்தை ஆள் மூலம் அண்ண னிடம் அனுப்பிவிட்டுத்தான் மூச்சு விட்டான். 'என் கண்ணுலத்தை நடத்தி வைக்காத அண்ணனுக்கு. எனக்கு மூணும் வருசம் பேதி வந்து சாகப் பிழைக்கக் கிடந்தப்ப ஒண்ணு அரை தந்து உதவாத அண்ணனுக்கு இப்போ என்ன புதுசா கரிசனை வந்து முளைச்சுதாம்?...சாகப் போறப்ப, இம்பிட்டுக் கஞ்சத்தனத்தையும் தான் தலைமேலே சுமந்துகிணு போவணும்!... நூறு அம்பது பணம் சேர்ந் திருக்கிறதைக் கடைசிக் காலத்திலே தலையிலே தூக்கிக் கிட்டா போகப் போருங்க?...ம்!'—இவ்வாறு வருந்திய நாட்கள் ஒன்ரு, இரண்டா?

* * *

மாணிக்கம் பள்ளிக்குப் புறப்பட்டான்; கோணியால் செய்யப்பட்ட புத்தகப் பை தோளில் இருந்தது; நெற்றியில் விபூதி இலங்கிற்று.

சிவசாமி வந்து வாசலில் நின்ருன். அவனைத் தேடி ஓடி வந்தான் ஒருவன். "சிவசாமி, உங்க பெரியசாமி அண்ணுச் சிக்கு தொண்டைக்கும் வாய்க்கும் இழுத்துப் பறிச்சுக்கிணு இருக்குது; உன்னை ஒரு வாட்டி பார்த்துப்பிடணும்னு கை யோட கூட்டியாரச் சொல்லுருரு; உங்க அண்ணுச்சி மகன் வேலாயுதம் வேலை பார்க்கிற குறிஞ்சிப்பாடிப் பாத்திரக் கடைக்குப் பையனை உடனே அனுப்பும்படி தந்தி கொடுத் திருந்துச்சு; பாவம், வேலாயுதத்துக்கு அம்மை பூட்டி யிருக்குதின்னு பதில் தந்தி பேசியிருக்காளாம்!...என்ன தீவினையோ, உங்க அண்ணுச்சி பெரியசாமிக்குத் தன்னோட மகன் கையாலே கொள்ளி வைச்சு, வாய்க்கரிசி ஏத்துக்

கிட்டறத்துக்குக் கூட லவிதம் போடலே!"...என்ருன். சிவசாமி சிலையாகி விட்டான்.

சிவசாமி காயகல்பம் ஏதும் சாப்பிடவில்லை. ஆனுலும் அவன் சிறுவன் ஆனுன். காலத்தின் பாசம் அவனுள் பெருக்கெடுத்தது. முன்னம் ஒரு நாள் இம்மாதிரி உப்புக் கோடு விளையாடிய வேளையிலே, தான் தன் தமையனைக் காத்த நிகழ்ச்சியை எண்ணமிட்டான். அவ்வளவு தான்; அவன் ஓடினுன். "ஏலே முருகு, நீயும் உங்க அண்ணனுமே சண்டை போட்டுக்'கிடலாமா? ராசியாயிருந்து விளையாடுங்கப்பா!" என்று சொல்லி, அண்ணன்—தம்பியைச் சேர்த்து வைத்தான்; பிறகு திரும்பினுன். காற்பாதங்களில் இருந்த கண்ணீர் அவன் முன் தெரிந்தது. "அண்ணுச்சி!" என்று கூவிக் கதறியபடி ஓடினுன் சிவசாமி!

* * *

"பெரியப்பா!...பெரியப்பா!"

சிவசாமி அவ்வீட்டிற்குள் அடியெடுத்து வைத்ததும், கேட்ட முதற் குரல் இது. அவன் விழித்துப் பார்த்தான். மாணிக்கம் தேம்பியழுது கொண்டிருந்தான். அவனது பிஞ்சுக் கரங்களிலே பத்து ரூபாய் நோட்டுக்கள் பல இருந்தன; காலடியிலே ரொட்டிகளும் மிட்டாய்களும் இருந்தன.

"அண்ணுச்சி!...அண்ணுச்சி!..."

அழைத்தான் சிவசாமி; கூவினுன்; கதறினுன்!

'தம்பி!' என்று கூப்பிடக் கூடாதா பெரியசாமி? அவன் வாயில் மஞ்சள் துணி விளங்கியது,

'அண்ணனுக்கும் தம்பிக்கும் கடைசிக் காலத்திலேயாச்சும் ஒட்டுதல் இருந்திருக்கப்படாதா?...பெரியசாமியோட கஞ்சத்தனம் நல்லவேளை, சிவசாமி மகன் மாணிக்கம் வரை செல்லுபடியாகலே!. மாணிக்கத்தும் பேரிலே என்னமோ உசிரையே வச்சிருந்தார் மூத்தவர்!...அப்பன்—ஆத்தாளுக்குத் தெயுயாம கடைசி வரைக்கும் பெரியப்பன் பக்கத்திலேயேதான் இந்தப் பையன் கிடந்தான்!

காதுகளின் இடைவெளியில் காற்றில் மிதந்த செய்திகள் சிவசாமியை அண்டின !

" சரி, அப்பாலே குளிகை வந்திடும். கொள்ளி வைக்கிறது யாருன்னு முடிவு பண்ணலையா ?" என்று பெரியவர் ஒருவர் வினவினர்.

" அண்ணச்சி !...ஐயோ அண்ணச்சி !..."

விழிநீருடன் வீறு கொண்டு எழுந்தான் சிவசாமி ; குறுக்கே ஓடி வந்தான் சிறுவன் மாணிக்கம் !

" அப்பா ! .....வேலாயுதம் அண்ணச்சி வரலைன்ன நானே தான் கொள்ளி வைக்கோணுமின்னு பெரியப்பா கேட்டுக்கிருங்க !..."

மாணிக்கம் குழந்தைத் தெய்வம் !

## ● ● ● உப்புக்கு ஒரு விதி !

சிலட்டூர் அடைக்கன் வைத்தியரிடமிருந்து வாங்கி வந்த சூரணப் பொட்டலங்களையும் தைலப் போத்தலையும் கட்டிக் காத்துக்கொண்டு, குடிசையின் நிழலை மிதித்த காசி, " ஏலே, பொன்னுயி !...பொன்னுயிக் குட்டியோ !" என்று மகத்தான நேசம் கொப்புளிக்க அலட்டினுன். வெய்யில் தாழத்தான் அங்கிருந்து புறப்பட்டான். ஆனுலும் சாமான்யமான வெக்கையா? வறுத்துத் தொலைத்து விட்டதே? மூன்று கல் தொலை என்றுல், லேசா, என்ன ? பாவம், இருமல் துளைத் தெடுத்தது. களைப்பும் அசதியும் ஆற்றுமையும் வேர்வை யைக் கூட்டின. 'ஒரு வேளை, அந்தித் தண்ணி தூக்கியார துக்கு கால்பாவியிருக்குமோ' எம்பொஞ்சாதிக் குட்டி பொன்னுயி ? காணலையே ?'

அந்திவானத்தின் அழகின் விதியெனப் பரவிக்கிடந்த விந்தைக் கோளங்களை ரசிக்கத் தெரிந்தவன் காசி. மெய்யான சங்கதிதான் ! ஆனுல், தன்னுடைய நேசக் கண்ணுடி பொன்னுத்தாவின் மண்டிக்கிடந்த பருவ எழிலை முழுக்க முழுக்க அனுபவிக்கப் பழகியவன் அவன் ; அனுபவிக்கத் தெரிந்தவன் !

மன்மதன் என்றுல் மன்மதன்தான். ஆள் அப்படி வாட்ட சாட்டமாக இருப்பான். சாபம் கொண்ட மன்மதன் மாதிரி

இப்போது ஆகிவிட்டான். பாவம்! காசம் என்ருல், பின்னே சும்மாவா?

தூக்கம் சொக்கியது. பொன்னுத்தாவிடம் சொக்கி விட்டவன் அல்லவா? அவள் அழகு அப்படி; உடல் வாகு அப்படி; பேச்சு அப்படி; மூச்சு அப்படி! சொக்குப் பொடி வைத்திருந்தாளா அவள்? ஊஹூம்! சரி அவன்தான் அந்தப் பொடியை லேஞ்சில் முடிந்து வைத்திருந்தானு? அதுவும் கிடையாது! பின்னே?—பின்னேயோ, அல்லது முன்னேயோ ஏற்பட்ட பொசிப்பு—தாலிப் பொசிப்பு அவர்கள் இருவரையும் முடி போட்டு விட்டது. வேடிக்கைப் பார்த்தது பனங்குளம்.

வெளித்திண்ணையில் வேப்பங்காற்றின் வாடையில் துணியை உதறிப் படுத்தவன் மருந்துப் பையைத் தலைமாட்டில் வைத்துக் கொண்டே, குறட்டை விடலானுன். அரையே வீசம் நாழிகை ஓடியது. 'ஆத்தா பிடாரி!' என்று தன் குல தெய்வத்தை உதட்டில் நிறுத்திக் கொண்டே எழுந்தான். கொண்டவளை பாசம் கொள்ள, அன்பு மேலிட, நேசம் பெருக்கெடுக்க, மீண்டும் கூப்பிட்டான் காசி.

சூன்யம் கைகொட்டிச் சிரித்தது.

எங்கே பொன்னுத்தா?

பொன்னுத்தா எங்கே?

ஏதோவொரு நினைவு கொடி மின்னலாக அவனுள் திடுதிப்பென்று ஓட்டம் காட்டியது. உந்திக் கமலம் கிட்டிப்புண் கழிபட்ட பாங்கில் பதைபதைத்தது. 'ஊக்கூம்! பொன்னுத்தா நல்லகுட்டி. இருவத்தஞ்சி மாசமா ஒட்டிக்கெடந்த பந்த பாசத்தை உதறிப்பிட மனசொப்புற கழுசடையில்லே, புறம்போக்கு இல்லே. குடிக்காணியாட்சிப் பாத்தியம் கொண்டவன் நான் இருக்கேனே! பிடாரி ஆத்தா, எம் மனசான மனசிலே இம்மாங்காலமாத் தோணுதை ஒரு கெட்ட நினைப்பை இன்னிக்கின்னு அருப்புருவமா எதுக்கு தோணச் செய்யிறே?...' அயர்வின் அழுத்தம் புகைச்சல் இருமலை

அழுத்திவிடவில்லை ; தூண்டி விட்டது. இருமினுன் ; விலாக் குடை எலும்பில் நோவு கண்டது. ‘ஆத்தாடி! அய்யாடி!’ என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டான். வாசல் முட்டியி லிருந்த மிளகாய்க் கொல்லைத் தண்ணீரில் ஒரு லோட்டா பருகினுன் அவன். முகத்தை லேஞ்சினுல் துடைத்துக் கொண்டே, பனியனைக் கழற்றினுன். இப்போது கொஞ்சம் இதமாக விருந்தது. நெஞ்செலும்புகளை எண்ண வேண்டுமா? ...பொன்னுத்தாதான் அவ்வுரிமைக்கு உறவு பூண்டவள். அவளைக் காணேமே ?

பொன்னுத்தா எங்கே ?

போதையூட்டும் அந்த அழகான விழிகள் எங்கே? போதை கொண்ட அத்த எழில் கொண்ட உதடுகள் எங்கே ?

எங்கே பொன்னுத்தா ?

கவர்ச்சி கோடைப் பலாச்சுளையாகக் கனிந்து, மணமுட்டி நின்ற தன்னுடைய ஆசைக் கண்ணுடியை நினைவில் பார்த்து, நெஞ்சால் அனுபவித்து, அந்த அனுபவத்தில் விளைந்த ஓர் அன்பான ஆறுதலோடு, திண்ணையில் ஏறினுன் காசி. அந்தி வெளிச்சம் நிலைப்படியில் நின்றது. கதவுகளைப் பார்வை யிட்டான். கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. இடுப்புக் கயிற்றில் தொங்கிய சாவிக் கொத்தை எடுத்தான். மேல் மூச்சு—கீழ்மூச்சு வாங்கியது. கண்கள் பஞ்சலடைந்திருந்தமை யால் பூட்டின் துவாரம் சரிவர மட்டுப்படவில்லை. அந்தப் பூட்டுக்கு இரண்டு சாவிகள். ஒன்று அவனிடம். இன் னென்று அவள் வசம். பூட்டிக் கொண்டு எங்கோ போய் விட்டிருக்க வேண்டும் பொன்னுத்தா. முன் மாதிரி அவ் வளவு காசு பணம் பெட்டகத்தில் இல்லையென்ருலும், துணி மணிகள், சாமான் சட்டு, நகை நட்டு என்று ரூபால் இரண் டாயிரத்துக்கு மேல் தேறும். திறந்து போட்டுவிட்டுப் போவாளா ? கெட்டிக்காரி ஆயிற்றே பொன்னுத்தா ? இரண்டு சாவியின் அந்தமான யோசனையை வெளிப்படுத்தின வளே பொன்னுத்ததாதான். பொருள் எதுவானுலும், ரொம்பக் கெட்டி அவள். கெட்டிக்காரி அல்லவா ?

‘ பொன்னுத்தா !’

உள் நெஞ்சம் அழைத்தது. வெளி நெஞ்சம் அழகு காட்டியது. சொக்கினான் காசி. மறுநொடியில், ஏனோ அவன் மேனி அல்லாடத் தொடங்கியது. ‘ பிடாரி ஆத்தா, ஏம் மானத்தைக் காத்துப்பிடு !’ இருமல், கண்களைக் கலங்க வைத்தது ; தும்மினான்.

கதவுகள். திறந்தன.

மருந்துகளை ஈசான்ய முடுக்கில் காபந்தாக ‘முட்டு’க் கொடுத்து வைத்தபின், பார்வையை மேயவிட்டான் காசி மேய்ச்சலிலிருந்து திரும்பிய கிடாரி கத்தியது. கத்தட்டும். எடுத்தஎடுப்பிலே, அவன் பார்வையில் கட்டுப்பட்டது. சோற்றுக் கலயம். ‘மதியத்துக்கு காப்பித் தண்ணிகுடிச்சுக்குடுங்க. அந்திக்கு வந்தடியும் சுடுசோறு ஆக்கிப் போடுறேனுங்க, மச்சான். மாங்கொட்டைலாவி,ஆக்கினகுழம்பு வச்சிப்பிடுறேன். வெள்ளெனவே வந்துப்துபிடுங்கங்கிறேன் ! ’ என்றாள் ! கலயத்தில் ஆவி பறந்தது.

காசியின் இடுக்கு விழுந்த கண்கள் தளும்பின. வெளிப்புறத்துத் தாழ்வாரத்தின் மேல் வச உத்தரத்தில் வைத்திருந்த புகையிலைப் பொட்டலத்தை எடுத்த போது, மற்றொரு சாவியும் சேர்ந்து விழவே, சோர்ந்து போய்க் குனிந்து அதை எடுத்தான். ‘ பூட்டைப் பூட்டி ஒரு நாளும் இப்படி வைக்காதே எங்க பொன்னுத்தா ?...என்ன சங்கதி, ஏது சங்கதின்னு ஏதொண்ணுமே விளங்க வில்லையே ? ’ நினைவுகள் தறிகெட்டுச் சுழன்று, ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொண்டு, அவனைப் பாடாய்ப்படுத்தின. தும்மல் நிற்கவில்லை.

கோழிகள் அடையத் தொடங்கின.

மணக் கொல்லை’யில் வாசம் செய்த ஏழெட்டுக் குடிசைக் காரர்களும், “ வௌக்கு வைக்க வந்துப்பிடும் பொன்னுத்தா ! ’’ என்று ஆறுதல் சொன்னார்கள்.

காசி விளக்கைக் கொளுத்தினான். விபூதிக் ‘ கொட்டுக் கூடை’யில், பொன்னுத்தாவின் தங்கக் கழுத்திலே திருப்

பூட்டிய தாலிச் சரடு—அவனுடைய தாலிச்சரடு தரிசனம் கொடுத்தது !

* * *

தலைக்கோழி கூவத் தொடங்கிவிட்டது.

இன்னமும் காசி விழித்துக் கொண்டேதான் இருந்தான். அவனோடு அவன் இருமலும் விழித்துக் கொண்டு இருந்தது துணை வேண்டாமா ?

உடல் நலிவோடு, கால்கடுக்க நடந்துபோய், கைகாட்டி, பணம் நீட்டி, வாங்கி வந்த மருந்துகள் அப்படியே அச்சுக் குலையாமல் இருந்தன.

வடித்து வைத்த—ஆமாம், பொன்னாத்தா கையினால் வடித்து வைத்த சோறு அப்படியே இருந்தது.

பொன்னாத்தாவைத்தான் காணோம் !...

எங்கே பொன்னாத்தா ?

கூப்பிடு தொலைவில் இருந்த கணக்கன் விடுதி அத்தை வீட்டுக்கு ஓட்டமாக ஓடிப்போய் விசாரித்தான் காசி. கை ஒய்ந்த வேளைகளிலே, மனம் விட்டு வாயாடிக் கொண்டிருக்க பொன்னாத்தா அங்குதான் செல்வது வழக்கம். அங்கும் வரவில்லையாம் பொன்னாத்தா. அங்கு இருந்த கைக் குழந்தை என்றால், அவளுக்கு ஒரு தனி ஈடுபாடு. அங்கும் போகவில்லையாமே !—மற்றபடி, அவள் கொல்லையிலிருந்த குடிசைகளிலே அதிகம் புழக்கம் வைத்துக் கொள்ள விரும்பமாட்டாள். ' இங்கிட்டாலே சன்னாட்டம் வச்சுக்கிடுறது எம் மனசுக்கு ஒப்பாதுங்க. நான் பொண்ணாப் பொறந்த செம்மம், யாரோ ஒருத்தி ஓடியார்து, எங்கிட்டோ ஒருத்தனுக்கு முந்தானை விரிச்சுப்புட்டாளேன்னு ரோசிச்சுக்கிட்டு இருப்பாங்க ! என்னை நம்புறீங்க நீங்க. நான் ஒங்களை நம்புறேன். இந்த நம்பிக்கை நம்ப ரெண்டு பேருக்கும் தெய்வ மாட்டம். இந்தத் தெய்வம் நம்ப ரெண்டு பேரையும் கடைசி மட்டுக்கும் வாழ வச்சுக் காப்பாத்திட்டா, அது போதுமுங்க,

மச்சான்!' அடிக்கொரு முறை பொன்னுத்தா சொல்லு வாள். மீண்டும் ஒரு தரம் சொல்ல, பொன்னுத்தாவைக் காணவில்லை !

சிம்னி விளக்கத்தைத் தூண்டி விட்டான் காசி. வயிற் றைப் புரட்டியது கை எட்டும் வசத்தில் இருந்த நீராகாரத் தைப் பருகக் கூட அவனுக்கு நாட்டம் இல்லை. மனம் குமைந்தது ; எரிந்தது. திறந்து வைக்கப்பட்டிருந்த பெட்ட கத்தின் மீது திறந்த விழிகளை ஓட்டினன். பொன்னுத்தாவுக் கென்று செய்து போட்ட நகை நட்டுக்கள், அவளுக்கென்று எடுத்த துணி மணிகள் எல்லாம் அப்படியே இருந்தன. தென் புறத்தின் மூலையைப் பார்த்தான் அவன். அவள் இந்த மண்ணில் கால் பதித்தபோது, அவளது உடைமையாகக் கட்டிக் கொண்டு வந்த சுங்கடிப் பச்சைச் சேலையும் தட்டு மறித்த ஊதா ரவிக்கையும் அங்குதான் தொங்கிக் கொண் டிருக்கும். அவை இரண்டையும் இப்போது காணவில்லை !...

ஏக்கப் பெருமூச்சு.

பெருச்சாளி அட்டகாசம் செய்தது.

திருநீற்றுமடல் நழுவி விழுந்தது. அதில் இருந்த தாலிச் சரடு பரிதாபமாகத் தரையில் நிலைகுப்புறக் கிடந்தது. அதை எடுத்தான் காசி. கைகள் நடுங்கின. ஈர்க்குச்சிக் கைகளால் அதைப் பத்திரமாகப் பற்றியபடி, கண்களில் ஒற்றிக் கொண்டான். முழங்கைகளில் ஈரம் படர்ந்தது. 'மச்சான்' என் சாதிசனம், வூடுவாசல் அல்லாத்தையும் ஒங்களை நம்பி உதறிப்பிட்டு ஓங்க' பின்னடி வந்திட்டனே. கடைசிவரைக் கும் நீங்க மனசு மாறிடாம, என்னை வச்சுக் காப்பாத்திட வேணும், 'என்று சொல்லி வரம் கோரி' கையடித்து வாங்கிக் கொள்ளவில்லையா அவள் ?

பங்குனி உத்தரத் தெப்பம். நகரம்—சேந்தாங்குடித் தெப்பம் என்றால், அண்டை அயலில் பதினறு கிராமங்களுக் குள்ளாக ஏகப் பிரசித்தம். காசி திருநாள் காணச் சென் றான். திருநாளைக் காணும் வழியில், பொன்னுத்தாவைக் கண்டு கொண்டான். அந்தி சாய்வதற்குள் அவனும் அவளும் பல தடவைகள் சந்தித்துக் கொண்டார்கள். ஒரு

பலகாரக் கடையின் முன்னே, பொன்னுத்தாவை இடித்துக் கொண்டே பல்லை இளித்துச் சென்றான் ஒரு விடலை. இதைப் பார்க்க நேரிட்ட காசி, தன்னுடைய பட்டுச் சொக்காயின் கைகளைச் சுருட்டி, வலுக் கொண்ட 'முஷ்டி'யைக் காட்டி' அந்த விடலையின் கழுத்தைப் பிடித்து மொத்தி விட்டான். "ரொம்ப நல்ல ஆம்பளை நீங்க. சாடா ஆளுங்களும் வேடிக் கைப் 'பார்த்தாங்க. நீங்க ஒண்டியுந்தான் அக்குரும்புக்குப் புத்தி படிச்சுக் குடுத்தீங்க!" என்றாள். கடைசியில், அவளைப் பற்றிய விசாரிப்பு நடந்தது. விட்டகுறையோ, தொட்ட குறையோ அவளது புது முகத்தைப் பார்த்த சடுதி யிலேயே, தன்னையும் மீறிய வகையில் அவளிடம் ஒரு மையல் உள்ளூறக் கனிந்து தன்னைக் கிறங்கச் செய்த ஈடுபாட்டின் உள்ளுணர்வை மதித்துத்தான், அவன் அப்படி விசாரித்தான். பிறகு தன்னுடைய பசைபச்சாப்பு நிலவரத்தின் வசதி யையும் கூறினன். "ஓங்க நல்லதனமான குணம் எம் மனசைத் தொட்டிடுச்சிங்க. என்னை மாரிதி நீங்களும் ஒண்டிக் கட்டைன்னுக்க, நான் ஒங்ககூடவே வந்துப்பிடுறேனுங்க. எந்துணிச்சலை நீங்க மதிச்சீங்கன்னு, அது எம்புட்டுப் புண்ணி யந்தானுக்கும்!" என்று, அவளாகவே ஒரு நல்ல தீர்ப்பை— அவனே எதிர்பாராததொரு தீர்ப்பை வழங்கியும் விட்டாள். 'அல்லாம் பிடாரி விளையாட்டுதான்!' என்று மனம் கொண்டு, அவளது தீர்ப்பை ஆமோதித்தான் காசி. தன்னை நம்பிக் காத்திருந்த தன்னுடைய முறைப் பெண் முத்தம்மா வைப் பற்றின நினைவு அப்போது ரவைகூட அவனுக்கு இல்லை!

இதே போன்றதொரு நிலவில் பொன்னுத்தாவும் காசியும் இந்த மனைக்கு வந்தார்கள். வந்த மறுதினம், தாலிச்சரடு செய்து அவளுக்குப் போட்டான் அவன். பட்டுக்கண்டாங் கியும் பட்டு ரவிக்கையும் கிட்டின.

முத்தம்மா ஒதுக்கிக் கொண்டாள்.

காசி முகடு. அவன் மனசுக்கு அவன் சாட்சி. இள ரத்தம். அக்கரைச்சீமைப் பணங்காசு எக்கச்சக்கம். இஷ்டப்படி விளையாடட்டும். நம்ப யாரும் வாயை விட்டுப்

புடப்புடாதாங்காட்டி!' என்று கொலைக்குள் வாயடைத்துப் போனார்கள்.

கொட்டாவியுடன் தும்மலும் தொடர்ந்தன. தட்டுப் பலகையில் கிடந்த 'லீலைப் படங்கள்' தென்பட்டன. எரிச்சலுடனும் அருவருப்புடனும், வேதனையுடனும் அவன் அவற்றை எடுத்தான். 'மச்சான்' உசிரோட இருக்கிற அரிதி, உண்ணு தின்னு ஆண்டு அனுபவிச்சிட்டுப் போயிட வேண்டியதுதான் நாம்!' என்று பாடம் சொல்லிக் கொடுத்து வந்தவள் பொன்னுத்தா.

போதையூட்டின அந்தப் படங்களையும், நெஞ்சிடை நிரவி நின்ற பொன்னுத்தாவின் கட்டுக் குலையாத அந்தப் போதை உடலையும், மெலிந்து நலிந்து போய்விட்ட தன்னுடைய மேனியின் நிலையையும் பார்த்து, இருப்புக் கொள்ளாமல் தவித்தான் காசி. ஆத்திரமும் அழுகையும் முட்டி மோதின. விரக்தி கோலோச்சியது.

எங்கோ ஆந்தை கத்தியது.

'பொறந்த வூட்டை நாடி நாகுடிப் பக்கம் போயிருக்குமோ எம்பொஞ்சாதி? ஊகூம். அங்கிட்டுப் பறியாது. ரோசக்காரப் பொண்ணு அது!' நினைவுகள் ஓடின. 'பொஞ்சாதி!'—எண்ணிப் பார்த்த போது, ஏனோ ஒரு திகில்—இனம் விளங்காத் திகில் பற்றிப் படர்ந்தது. 'ஒரு வேளை, பொன்னுத்தா என்னை ஏமாத்திப்பிடுமோ? நம்பிக்கை மோசம் பண்ணிப்பூடுமோ?...ஊகூம்! அப்படி ஒரு காலும் பண்ணிப்புடாது!...அக்கரைச் சீமையிலே சம்பாரிச்சாந்த கை ரொக்கம் ஐயாயிரத்தையும் அதோட காலடியிலே கொட்டின என்னையரா அப்பிடி மனந் துணிஞ்சு ஏச்சுப்பிடும்?...இன்னமும் எனக்கு அதைப்பத்தி சம்சயப்பட மனசே ஒடல்லே!...அடுத்துக் கெடுக்கிற ஈனப்புத்தி அதுக்கு இருக்காது!...

கைபிடித்த பொன்னுத்தாவைப் பற்றி தன் மனத்தில் உருவாகியிருந்த அந்த நம்பிக்கைப் பலத்துடன் அவன் மௌனத்தோடு மௌனமாகச் சில கணங்களைத் தள்ளினான்.

இந்த இருபத்தைந்து மாதங்களிலே அவர்களுக்குக்குள் ஒரு பிணக்கு உண்டா ?—இல்லை !

கடந்த நாலுமாதமாகத்தான் காசி பாயும் படுக்கையும் ஆனான். பெட்டிப் பணமும் கரைந்தது. மிச்சம் மீதம் இருந்த கொல்லைகளைக் கிரயம் செய்து, பணம் சேகரம் செய்து, தஞ்சாவூர் சென்று ராஜ வைத்தியம் செய்து பார்க்க வேண்டும் என்று அவன் முடிவு கட்டியதற்கே, அவளுடைய ஆர்வமான தூண்டுதலே காரணமாகும். ஒருவேளை தனக்கு ஏதாவது ஆகிவிட்டால், தன்னை நம்பி வந்தவளுக்கு ஒரு புகல் வேண்டுமேயென்று, அவள் வசம் இரண்டாயிரம் ரூபாய் ரொக்கத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்றும், வீட்டையும் அவ்வீட்டை ஒட்டிய தாளடித் தாக்கு ஐந்நூறு குழிப் புஞ்சையையும் அவள் பேருக்குப் பத்திரம் எழுதி வைத்து விடவேண்டுமென்றும் மனத்துள்ளே திட்டம் கட்டியிருந்தான் காசி.

நேற்றைக்கு இரவு அவன் இருமிக் கொண்டே தூக்கம் பிடிக்காமல் படுத்துப் புரண்டு கொண்டிருந்தான். இடைவெளி கட்டிப் படுத்திருந்த அவளோ, அந்தப் படங்களை வெறிக்க வெறிக்கப் பார்த்தபடி, சோகமே உருவாகக் காட்சி தந்தாள். அவனுக்குப் புரிந்துவிட்டது. ஏக்கப் பெருமூச்சோடு, மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். இருமல் வாட்டியது. இருமல் விட்டதும், அந்தப் படங்களை அவளிடமிருந்து பறித்து மறைத்தான்.

" ஏ புள்ளே ! சும்மா தூங்குலே !..." என்று எரிச்சலும் ஆத்திரமுமாகப் பேசினான் காசி.

ஏமாற்றமும் ஏக்கமும் புடைசூழ, பொன்னுத்தாயைக் கோபம் காட்டி விட்டு, ஒதுங்கிப் படுத்தாள்.

பொய்க்கோபம் இல்லையா அது ?

'பொன்னுத்தா மெய்யாலுமே எம் மேலே சடனைப் பட்டுக்கிட்டுத்தான், எங்கிட்ட சொல்லாமக் கொள்ளாமக் கூட ஓடிப்பிடுச்சோ ? எம்புட்டு நம்பிக்கை வச்சிருந்தன்

அதுபேரிலே ?...எம்மாம் தீவினை செஞ்சுடுச்சு அது ?...'தாலிச் சரடு அவனது துயரத்தையும் சந்தேகத்தையும் வளர்த்தது. வயிறு எரிந்தது.

மறந்திருந்த அந்தப் படங்களைக் காற்று காட்டியது, மீளவும்.

சேட்டை கெட்ட தன்னை ஒருமுறை ஆற்றுமையோடு, ஏக்கத்தோடு, வேதனையோடு பார்த்துக் கொண்டான் காசி. வான்நிலவு மனநிலவின் பழங்கதையை நினைவூட்டியதோ ? ' என்னை பொன்னுத்தா மறந்திட—அம்மாஞ் சுருக்கண மறந்திட எப்படி ஏலும் ? என்னாலே பொன்னுத்தாவை இந்தச் செம்மத்துக்கு மறந்துப்புட ஏலவே ஏலாது !... நன்னி கெட்ட நாயில்லே நான் !...,

கைகளை ஊன்றிய வண்ணம் மெள்ள எழுந்தான் காசி. கோணல் கிராப்பு முடிகள் கண்களைக் குத்தின. கோபத்தோடு ஒதுக்கிவிட்டான். ' பொன்னுத்தா என்னை ஏச்சுப்புட்டு மெய்யாலுமே எங்கிட்டும் ஓடியிருந்தாக்க, அப்பாலே நான் இந்த ஊர் நாட்டிலே எப்படி தலை நிமிர்ந்து நடப்பேன் ?...ஐயோ...பிடாரி ஆத்தா !'—கண்கள் கசிந்தன. கசிவில் சொட்டிய ஒரு துளியைக் கையிலேந்தினான். ' இன்னியத் தேதி மட்டுக்கும் ஒரு வாட்டிகூட அழுது நான் அறிஞ்சதில்லே. அதுக்காகத்தான், இப்பிடி இப்ப எம் மானத்தையே விலை கூவ வச்சுப்பிட்டியா ஆத்தா மூத்தவளே ? ' மீண்டும் தனக்குத் தானே பைத்தியங் கொண்ட பாவனையில் சிரித்துக் கொண்டான். மீளவும் தன்னைத் தானே நோக்கினான். ' எம்மேலே நம்பிக்கை கெட்டுப் பூடுச்சோ அந்தக் குட்டிக்கு ?...'மருந்துகள் காட்டுக்கும் மேட்டுக்குமாகச் சிதறின.

காசிக்கு இனி மண்டை தாங்காது

நிலம் தெளியவில்லை.

' பாவிமக ஏத்திப்புட்டா என்னை.!—இந்தக் காசி எட்டுக் காரத்துக்குக் கிட்டி அடிச்ச அசல் புள்ளியிங்கிற தாக்கலைப் புரிஞ்சுக்கிடலே ! என்னோட அடிமடியிலே ஒளிஞ்சுக்கிட்டு இருக்கிற பட்டாக் கத்திக்கு பாச்சா காட்டிப்புட்டு ஒளிஞ்சுக் கிட பொன்னுத்தா ஒனக்கு வயசு காணுமாக்கும் ? ஊம், பார்த்துக்கிடுறேன் ஒரு கை ! ..'பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டே, கதவைப் பூட்டிவிட்டு வெளி வாசலுக்கு வந்தான் காசி. மடியைத் தடவிக் கொண்டான். பட்டாக் கத்தியும் பணக்கற்றைகளும் தட்டுப் பட்டன. ஏனோ தன் வீட்டை ஏக்கத்துடன் திரும்பத் திரும்பப் பார்த்தான்.

“ தம்பி, ஒம் பொஞ்சாதி இன்னம் திரும்பலையா ? ”

வெளுத்த உதடுகளைப் பிதுக்கினான் காசி.

“ காசி, ஒம்பிட்டு பொன்னுத்தா தட்டுப்பட்டுடுச்சா ?.”

மெலிந்த கைகளை விரித்தான் காசி.

“ ஊர் பேர் தெரியாத அந்தக்குட்டி அடுத்த கிராக்கியைப் புடிச்சுக்கிட்டிருக்கும் !...காசிதான் சோப்ளாங்கி ஆயிட்டானில்லே ! ”

யார் அவன் ?

துளசிங்கம் !...

ஆதியிலே, காசியின் முறைமைப்பெண் முத்தம்மாளைக் கல்யாணம் கட்டிக் கொள்ள காசியோடு போட்டி போட்டவன் அந்த இளவட்டம் !

திரும்பினான் காசி. துளசிங்கத்தின் சுருட்டை முடியை வாகாகப் பிடித்துக் கொண்டு. பேயாகச் சினந்து, வெறிமூண்ட விலங்காக மாறி, துளசிங்கத்தைப் பின்னி எடுத்துப் புரட்டி விட்டான்.

பாவம், சிங்கம் ஓடிவிட்டது.

அப்போது, முத்தம்மா வேதனை சூழ காசியை அண்டினாள். “மச்சான், நிழலிலே வந்து இளைப்பாறுங்க!” என்று கெஞ்சினாள். பிறகு, அவனுடைய காதுக்கு மட்டிலும் கேட்கும்படியாக உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னாள்: “பொன்னுத்தாவை இனிமெ நீங்க மறந்துப்புடுங்க. எச்சிப் பழத்தை நல்ல அணில் தீண்டவே தீண்டாதுங்க. புதுப் பட்டியிலேருந்து ராத்திரிதான் வந்தேன், நம்ப அத்தாச்சி வூட்டிலேருந்து. அங்கிட்டு ஒரு ஒசந்த இடத்திலே பூவும் பொட்டும் விளங்க பொன்னுத்தா நட்டுப்பட்டுச்சுங்க. ஈனச் செம்மம்போல! மேலே ஒண்ணும் சொல்ல வாய்வரல்லே! மச்சான், நீங்க மனசொப்பினா, ஒங்களுக்கு ஆக்கிப் போட்டுத் தொண்டூழியம் செய்யக் காத்திருக்கேனுங்க. ஒங்களுக்கின்னு என்னை முடிச்சிப் போட்டிருக்கிறதாலே தான், எனக்கின்னு வந்து மூளைச்ச சம்பந்தம் சாடிக்கை கூட தெறிச்சுப்பூடுச்சுபோல! ஒங்களையே தோத்துப்புட்டு நிக்கிற ஒங்களுக்கு ஒரு ஆறுதல் சொல்லக் கடமைப்பட்டவளாச்சுங் களே நான்?...

இருதயத் துடிப்பில் பட்ட அந்த மரண அடி தாளாமல் துடித்த காசிக்கு, முத்தம்மாவின் இறுதிப் பேச்சு முழுவதும் எப்படிக் காதில் விழுந்திருக்க முடியும்? குதி கால் நரம்புகளில் வைரம் பாய்ந்தோட, ஓடத் தலைப்பட்டான்!.

* * *

மணக் கொல்லை திமிலோகப்பட்டது.

“ராவோட ராவாத் திரும்பியாந்து, தான் வெட்டிப் போட்ட பாதாளக் கேணியிலேயே விழுந்து செத்துப் பூட்டாரும் நம்ம காசி!”

‘சுத்தப் பைத்தியக்காரன்!...’

"டேய் துளசிங்கம்! காசி உப்புப் போட்டுச் சோறு தின்னவண்டா! இந்தப் புத்தியும் இந்த ரோசமும் அவனுக்குத் தாண்டா இருக்கவேனும்! ஒன்னேமட்டும் மறந்துப் புடாதேடா. அவன் சும்மா மட்டும் திரும்பியிருக்க மாட்டாளுக்கும்!...ஏன் தெரியுமாடா, பேராண்டி?—அவன் மானமுள்ள ஜென்மம்டா!..."

பாவம், முத்தம்மா கேவிக் கேவி அழுது கொண்டேயிருக்கிருள்!...

அதோ, அந்தப் பட்டாக்கத்தி விதியாக நமட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே யிருக்கிறது!...

# பொம்மைக் குதிரை

"டோய், பொம்மைக் குதிரை டோய்! ஆடும் குதிரை டோய்! ஏ தாத்தா! எங்களுக்குக் கொஞ்ச நேரம் விளையாடத் தருகிறாயா? ஆளுக்கு ஒரு சவாரி, தாத்தா!"

மாயாண்டி திரும்பினான். பிஞ்சுக் குழந்தைகளின் ஆனந்த ஆரவாரம் அதிகரித்தது. கிழவன் சிரித்தான். தலையில் இருந்த பொம்மைக் குதிரையைத் தரையில் வைத்தான்.

"தாத்தா, எனக்குத் தான் முதலிலே சவாரிக்குத் தர வேண்டும் குதிரையை."

அந்தப் பத்துக் குழந்தைகளும் அதையே கேட்டன; "ஆகட்டும்" என்றான் அவன். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி வெள்ளம்; அன்பு உள்ளங்களின் இன்பச் சூழல் அது.

தன் காரணப் பெயரைக் காப்பாற்றிக் கொள்ளப் படாத பாடு பட்டது. பாவம், அந்த ஆடும் குதிரை.

"இவர் நல்ல தாத்தா டோய்! தங்கமான தாத்தா டோய்!"

மாயாண்டியின் வலது கை மோதிர விரலில் கண்ணீர் முத்து ஒன்று சிரித்தது. நடந்தான். குறி வைத்து ஏதோ ஒன்றைத் தேடுபவன் மாதிரி அவன் விசையாக நடந்தான். பொம்மைக் குதிரையில் அவனுடைய தளர்ந்த விரல்கள் இழைந்திருந்தன.

" பொம்மைக் குதிரை வேணுமா, பொம்மைக் குதிரை !" என்று கூவாவிட்டால், எப்படி அவனுக்கு அதைப் பணமாக்க முடியும் ? ஊமைபோல நடந்தான்.

" ஏ பொம்மைக் குதிரை !"

அழைப்பு வந்தது. கனவு கண்டு விழிப்பவன் போன்று அவன் கண்களை உருட்டி விழித்தான் ; குரல் மிதந்த பாதைக்குப் பார்வையை அணை போட்டான்.

" குதிரை என்ன விலையப்பா ? " என்று யாரோ ஒரு பெண் கேட்டாள்.

கிழவன் அவளை ஒரு முறை நோக்கினான்.

நிறைமாதக் கர்ப்பிணி அவள். உள்ளம் எதிர்பார்த்த ஓவியத்திற்கென்று, அவள் கண்களில்தான் எத்தனை கனவுகள் !

" பொம்மைக் குதிரை வேணுங்களா அம்மா ? "

" ஆமாம், விலை ? "

" விலை கிடக்கட்டும், அம்மா. தங்கச்சிக்கு இதுதான் தலைப் பிரசவம் போலே...."

" உம் " என்று சொல்லி அவள் பெருமூச்சு விட்டாள்.

" அது சரி. பணம் எத்தனை வேண்டும் ? "

" தங்கச்சி, குதிரையை வைத்துக் கொள்ளுங்கள் நீங்கள் குழந்தையும் கையுமாக இருப்பீர்கள் பாருங்கள். அப்போது வந்து நீங்கள் இஷ்டப்பட்டுத் தருகிறதை திருப்தியோடு வாங்கிக் கொள்கிறேன். ஏழுமலையான்தா உங்களுக்கு நல்ல வழி காட்டித் தாயும் பிள்ளையுமாக உங்களை க்ஷேமமாய் வைக்க வேண்டும். "

கூடத்தில் பொம்மைக் குதிரையை வைத்தான் மாயாண்டிக்கு வாயெல்லாம் பல்லாகி விட்டது ; திரும்பினான்.

கிழவனை நிமிர்ந்து பார்த்தாள் அந்தப் பெண் ஜானகி; அவளுடைய அழகிய உதட்டோரத்தில் அழகான சிரிப்பு இருந்தது. “தாத்தா, நிஜமாகவே உன் வாக்குப் பலித்து விடுமா? ஆஹா! சரி, அடுத்த வாரம் வா. என் கனவு பலித்துவிட்டால் நீ கேட்கும் பணம் தருகிறேன்” என்ருள். உணர்ச்சி புரண்டது. கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

விடை பெற்றுக்கொண்டு நடந்தான் கிழவன் மாயாண்டி. கண்ணீர் வழிந்தோடியது.

“நல்ல பொம்மைக்கார வியாபாரி!” ஜானகியின் நெஞ்சில் கிழவனின் உருவமும் ஆடும் குதிரையும் மாறி மாறிச் சுழன்று கொண்டிருந்தன.

“யாரோ ஒரு கிழவன் வந்து கொடுத்தான். விலை கேட்டால், எனக்கு நல்ல வழி பிறந்ததும் வந்து பணம் வாங்கிக் கொள்வதாகச் சொல்லிப் போய்விட்டான்” என்று தோழி கமலாவிடம் சொன்ஞள்.

“ஓகோ, மாயாண்டிக் கிழவனு? பாவம்! தங்கமானவன். நானும் அவனைப் பற்றிப் பல பேர் பல இடங்களில் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவனுக்குக் குழந்தை என்ருல் ஒரே பாசம். மாதத்துக்கு ஒன்று இரண்டு என்று செய்து விற்று வயிறு வளர்க்கிருன் போலிருக்கிறது. உம், என்னவோ, அந்தக் கிழவன் கைராசியாலே உனக்கு இந்தத் தடவையாகிலும் தெய்வம் நல்ல வழி காட்ட வேண்டும். நாலு தடவை உனக்கு ஆசை காட்டி, நாலு தடவையும் குழந்தையைப் பறித்துக் கொண்ட அந்தக் கடவுள் இந்த ஐந்தாவது தரமாவது கருணை காட்டவேண்டும்.”

“இந்த ஐந்தாவது தவணை எனக்கு வழிபிறந்தால் தான் நான் உயிர் தரிப்பேன், கமலா. கடவுளே வந்து இப்படிப் பொம்மைக் குதிரையைத் தந்துவிட்டுச் செல்கிறமாதிரி எனக்கு ஓர் இன்ப உணர்ச்சி ஓடுகிறது” என்று கண்ணீர் வடித்தாள் ஜானகி.

* * *

அன்று அமளி துமளிப்பட்டது, அதே வீட்டில் ஏழெட்டுப் பேர்கள் திண்ணையில் உட்கார்ந் திருந்தார்கள். கார் ஒன்று வந்தது. லேடி டாக்டர் வந்தாள்.

ஜானகிக்குப் ,பிரசவ வேதனை மிகுந்திருந்தது. அவள் கணவன் சேகரன் தூண்டில் புழுவாகத் துடித்தான் "தெய்வமே, இந்த ஐந்தாவது முறையாகிலும் எங்கள் இருவர் வயிறுகளிலும் பால் வார்ப்பாயா ?" என்று பூஜை யறையில் ஆண்டவனிடம் கண்ணீரும் கம்பலையுமாக வேண்டிக்கொண்டு வெளியே திரும்பினான்.

கூடத்தில் இருந்த அந்த ஆடும் குதிரை அவனுக்கு நல்ல சுப சூசனைபோலப்பட்டது. வீடு தேடி வந்த குதிரைப் பொம்மையின் கதையை நினைத்துக் கொண்டான்.

உள்ளே வேதனை தாளாமல் அலறும் எதிரொலித்து மிதந்தது. தெய்வமே !" என்று புலம்பிக் கொண் டிருந்தான் சேகரன்.

லேடி டாக்டருக்காகக் காத்திருந்தான் அவன் ; அரவம் கேட்டது. துடிக்கும் உள்ளத்துடன் திரும்பினான். மறு கணம் "ஆ" என்று அலறினான். அப்பொழுது, கூடத் திலிருந்த ஆடும் குதிரையைத் தூக்கிக் கொண்டு பழைய கிழவன் ஓட முயன்று கொண்டிருந்தான். நெஞ்சு நெருப் பாகத் தகித்தது சேகரனுக்கு. "இந்தப் பொம்மைக் குதிரை ஒரு நல்ல சூசனை, இந்த முறை நல்ல படியாகக் குழந்தை பிறந்து சுபமாக இருக்கும் என்பதற்கு இதுவே ஒரு முன் எச்சரிக்கை போல என்று ஆசையுடன் நினைத்துக் கொண்டிருந்தேனே. கடைசியில் அதே குதிரைப் பொம் மையைத் திருட வந்திருக்கிறானே !" என்று குமுறினான்.

கைநொடிப்பொழுதில், கிழவன் மாயாண்டி, சேகரனின் பிடியில் நின்றான்.

"ஐயா, இது என் குதிரை. நான்தான் கொடுத்தேன்' என்று தழுதழுக்கக் கூறினான் மாயாண்டி.

"வேஷமா போடுகிறாய்? பணமில்லாமல் பொம்மைக் குதிரையைக் கொடுத்துவிட்டுக் கடைசியில் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போவதற்கா வந்தாய், திருட்டுப் பயலே!" என்று ஆத்திரத்தில் கிழவனின் கன்னத்தில் அறைந்தான் சேகரன்.

ஆடும் குதிரையையே இமைக்காமல் பார்த்துக் கொண்டு கிழவன் மாயாண்டி கண்ணீர் மாலை மாலையாகப் புரண்டோடச் சிலையாக நின்றுகொண்டிருந்தான்.

சேகரனுக்குத் தன் நினைவு வந்தது; உள்ளே 'கசமுச' வென்று சத்தம் கேட்டது. நகர்ந்தான்.

"சேகரன், ஆண் குழந்தை பிறந்திருக்கிறது!" என்ற நல்ல சேதி வந்தது.

சேகரன் ஆனந்தமயமான கனவு உலகில் பயந்து கொண்டிருந்தான்.

"ஆகா, ஏழுமலையான் என் கவலையைத் தீர்த்து, நல்ல வழிகாட்டிவிட்டான். ஐயா, என் ஆடும் குதிரை இங்கேயே இனி இருக்கட்டும். உங்கள் மனைவியிடம் சொல்லுங்கள். இந்தக் குதிரை இந்த ஏழை மாயாண்டியினுடைய அன்புப் பரிசு. நான் போய் வருகிறேன்" என்று கூறிய கிழவன் புறப்பட்டான்.

தேடி வந்த தெய்வம் போன்று வந்த அந்த ஆடும் குதிரை, அந்த வீட்டில் இன்ப விளக்கேற்றி வைத்திருப்பதைக் கண்டு சேகரன் ஆனந்தப்பட்டான். அதே சமயம், விடை கூறிப் புறப்பட்ட கிழவனின் வார்த்தைகளும் போக்கும் புதிர்மாதிரி பட்டன அவனுக்கு.

அழைத்தான்.

"ஏய் கிழவா! நிஜமாக நீயேதானா என் மனைவியிடம் போன வாரம் இந்த ஆடும் குதிரைப் பொம்மையைக் கொடுத்துப் போனாய்?"

" ஆமாமுங்க."

" குதிரைக்குள்ள கிரயத்தைத்தான் நாங்கள் கொடுத்து விடுவோமே ; பிறகு, நீ ஏன் அப்படித் திருடன் மாதிரி வந்து அதை எடுத்துப்போகப் பிரயத்தனப்பட்டாய் ? "

" எசமான், அதுதானே விடுகதை. அன்றைக்கு இந்தப் பொம்மையை அம்மாவிடம் கொடுத்தபோது, தலைப் பிரசவமா என்று கேட்டேன். அவர்கள் ஆமாம் என்கிற மாதிரி தலையாட்டினார்கள். குழந்தை பிறந்ததும் பணம் வாங்கிக்கொள்வதாகச் சொல்லிப் பிரிந்தேன். ஆனால் நான் சுற்றி திரும்புகிறபோது, போன நாலு தடவையும் குழந்தை பிறந்து தவறிப்போய்விட்டது என்கிற செய்தியைக் கேட்டேன். இந்த ஐந்தாவது தடவையாவது நான் பொம்மைக் குதிரை கொடுத்த கைராசியைக்கொண்டு அம்மாவுக்கு நல்ல வழி பிறக்க வேண்டும் என்று ஒரு புது அம்மா வாழ்த்தினார்கள். அப்போதுதான் எனக்குப் பித்துப் பிடித்த மாதிரி போய்விட்டது. ஐயா, அந்தக் காலத்திலே இதே மாதிரி தான் என் மனைவிக்கும் நாலு தடவை கருத் தரித்து, நாலு தடவையும் குழந்தை தங்கவில்லை. அதே ஏக்கத்தில் என் மனைவியும் கண்ணை மூடி விட்டாள், நானும் இப்படி அரைப் பைத்தியம் மாதிரி ஊரெல்லாம் அலைந்து திரிகிறேன். பணம் வாங்காமல் வலியக் கொடுத்துப் போன குதிரையை நான் எதுக்கு இப்படித் திருடன் மாதிரி எடுத்துப்போக வேண்டும் என்று யோசிக்கிறீர்களா ? தங்கச்சிக்கு—உங்கள் மனைவிக்கு—நல்ல வழி பிறக்கவேண்டும் என்று நான் வேண்டிக்கொள்ளாத தெய்வம் இல்லை. கொஞ்சம் முந்தி வந்தபோது வீட்டிலே ஒரே அமளி குமளிப்பட்டது. நான் உங்கள் வீட்டிலே பொம்மைக் குதிரையை வைத்ததனால் என்னைப் பிடித்திருக்கும் அந்தப் புத்திர தோஷம் ஒருவேளை இங்கேயும் பிடித்து விட்டால் என்ன செய்வது என்கிற அச்சத்திலேதான் அப்படிச் செய்தேன். ஐயா, என் அச்சமும் வேதனையும் ஆலாய்ப் பறந்து விட்டன. கடவுள் இப்போது தான் என் வேண்டுதலுக்கு இரங்கியிருக்கிறார், குழந்தை

நீடூழி வாழ ஏழுமலையான் அருள் புரியவேண்டும்" என்று சொல்லிவிட்டு 'விர்'ரென்று நடந்தான் கிழவன்.

"மாயாண்டி, மாயாண்டி!" என்று அவனிடம் மன்னிப்புக் கேட்கத் தொடர்ந்தான் சேகரன்.

அப்போது உள்ளிருந்து வந்த சிறுமி ஒரு செய்தி சொன்னாள்: "சேகர் அண்ணா, ஜானகி அண்ணி சொன்னார்கள் இந்த ஆடும் குதிரைப் பொம்மையைக் கொடுத்துப்போன அந்தக் கைராசிக்காரக் கிழவன் மாயாண்டி கடைத்தெருப் பக்கம் சுற்றுவானாம். அவனைத் தேடிப் பார்த்து அழைத்து வரச் சொன்னார்கள். பொம்மைக்குப் பணம் கொடுக்க வேண்டுமாம். அவனுக்கு விருந்துகூட வைக்கப் போகிறார்களாம், அண்ணி. உம், புறப்படுங்கள் அண்ணா!"

—:o:—

# பதினேராம் அவதாரம்

எலிப் பண்ணை இப்படியும் அட்டூழியம் பண்ணுமா என்ன ? சே !

அடுப்படிப் பரண் மீதிருந்த கூடை 'தொபு கடீர்' என்று கீழே குடம் சாய்ந்தது. பழைய காகிதக் கிழிசல் குப்பைகள் அலங்கோலமாகச் சிந்திச் சிதறினதுதான் மிச்சம்.

வள்ளியம்மைக்கு எரிச்சலாக வந்தது. 'இந்தா. ஊஸ்ஸ் !' என்று ஆத்திரத்தோடு கூச்சல் போட்டு எலிப் பட்டாளத்தை விரட்டினாள். 'செவ்வாய்ச் சந்தைக்குப் போயிருக்கிற அத்தான்காரர் இன்னிக்காச்சும் மறக்காமல் எலி மருந்து வாங்கிட்டு வந்தால் தேவலாம். எலித் தொல்லை வரவரச் சகிக்கலையே !'

"ஆத்தா, தண்ணி !" என்றான் இளையவன். அவன் சேது ; சாது.

குழந்தைக்குச் சவரட்சணை செய்துவிட்டு நிமிர்ந்தாள் வள்ளி. அத்தான் இன்னமும் திரும்பக் காணோம். சேலைத் தலைப்பை இழுத்து வேர்வையைத் துடைத்துக்கொண்டே, கடுதாசிக் கூளங்களை அள்ளிச் சேர்க்கக் குந்தினாள்.

அப்போது, "பழைய பேப்பர் இருக்குங்களா, ஆச்சி ?" என்ற குரல் பொட்டில் அறைந்த மாதிரி கேட்டது.

' யார், மாரியப்பனா ?'

" இருக்குது !" என்று சுவாரசியம் இழந்த தொனியில் சொல்லிக்கொண்டே, இரண்டாம் கட்டைத் தாண்டி நிலைப் படியை அடைந்தாள் அவள். முகம் சலனம் அடைந்தது. நாசூக்காகச் சமாளித்துக்கொண்டாள். " மாரியப்பனா ? வாப்பா, ஆளையே இங்கிட்டுக் கண்ணுப் புறத்திலே காண வாய்க்கலையே ?" என்றாள் வள்ளியம்மை. கொண்ட பெண் டாட்டியை 'விலக்கி' வைத்து விட்டு, குடியும் கூத்தியுமாகத் தடம் தவறித் தறிகெட்டுச் சுற்றித் திரியும் அவன் கதை அவளது பெண் நெஞ்சை உலுக்கியது இயல்புதான். நல்ல காலம், அவன் இப்போது ' சுயபுத்தி'யோடுதான் காணப்படு கிறான்.

" நிதமும் சோலி சரியாய்ப் போயிடுதுங்க, ஆச்சி. நேர மாகுது. பழசு பட்டது காகிதங்க சேர்ந்திருந்தால் எடைக்குப் போடுங்க !"

" கிலோ எம்புட்டு, மாரியப்பா ?"

" ஒரு ரூபாய் போட்டுக்கிடலாம்."

" கொஞ்சம் கூடப் போடப்புடாதா ?"

" கட்டாதுங்க. வாடிக்கைக்காரங்க நீங்க. உங்க விச யத்திலே இந்த வாட்டி ஒரு பத்துக் காசு கூடுதலாவே போட்டுத்தான் சொல்லியிருக்கேனுங்க, ஆச்சி."

" ம். சரி, சரி. நிறு !" என்றாள் ஆச்சி. இந்த மாரி முத்து எழுதிக் கொடுத்திருந்த பிராமிஸரி நோட்டுச் சம் பந்தமாக இரவு தன் கணவர் ஆத்திரத்துடன் சொல்லி வருத்தப்பட்ட தாக்கல் தகவல் அவள் உள்ளத்தை வேர்ப் புழுவாகக் குடைந்து கொண்டே இருந்த நடப்பை அவள் எப்படி மறந்துவிட முடியும் ?

எல்லாவற்றையும் கூட்டிக் குவித்து அள்ளிப் போட்டு நிறுக்கத் தலைப்பட்டான் மாரியப்பன்.

அந்தச் சமயத்தில், நடையில் தொட்டில் ஆடி விளையாடிய அல்லி, "ஆத்தா, ஆத்தா! நம்ம அப்பாரோட பீரோவுக்கு அடியிலே வேறே கடுதாசிக் கூடை கவிழ்ந்து கிடக்குதே!" என்று குரல் கொடுக்கவே, "இந்தாலே வாரேன்" என்று சொல்லி உள்ளே விரைந்தாள் ஆச்சி, அதையும் கொண்டு வந்து கொட்டலானாள் அவள்.

ஏறிட்டுப் பார்த்தான் பழைய பேப்பர் வியாபாரி மாரியப்பன். மறு நிமிஷம், அவனுடைய கரிய பெரிய விழிகள் இரண்டும் 'சடக்'கென்று மின்னல் கட்டிப் பளிச்சிட்டன. "சபாஷ்!" என்று சிரித்தபடி, அவசர அவசரமாக எல்லாவற்றையும் ஒன்று திரட்டித் தராசில் திணித்தான். இடக்கை நடுங்கத் தொடங்கியது. சமாளித்துக் கொண்டான்.

நாலே முக்கால் கிலோ நிறுவை நின்றது.

"இந்தாங்க, அஞ்சு ரூபாய்ச் சலவைத் தாளாவே தந்திட்டேன். கணக்குப் பிரகாரம் நாலே முக்கால் ரூபாய் ஆகும். ஒரு கால் ரூபாய் கூடுதலாவே தந்திட்டேனுங்க. திருப்தி தானுங்களே, ஆச்சி?" என்று சொல்லிக்கொண்டே, எல்லாக் காகிதங்களையும் தன் கூடையிலே வாரிப் போட்டான் அவன்.

ஆச்சி ஐந்து ரூபாய் நோட்டை வாங்கி நன்றாகச் சோதித்து மடியில் செருகிக் கொண்டாள். இருபத்தைந்து காசை மாரியப்பனிடம் நீட்டினாள். "இந்தாப்பா கால் ரூவா. எனக்கு உண்டானது லவிச்சால் போதும்" என்றாள்.

"வாஸ்தவந்தான்!"

மாரியப்பன் புறப்பட ஆயத்தப்பட்டவனாக, முண்டாசைக் கட்டிக் கொள்ளலானான்.

" வரட்டுங்களா ?"

" கொஞ்சம் நில்லப்பா மாரியப்பா !"

ஆச்சியைக் கலவரம் சூழ நோக்கினான் மாரியப்பன். ப்வர்வைதான் கொட்டியதா ?

" மாரியப்பா, மூணு வருசத்துக்கு முந்தி வியாபாரத் தோதுக்காக எங்க வீட்டுக்காரச் செட்டியார்கிட்டே கடன் கேட்டுக் கெஞ்சி வாங்கிக்கிணு போனே. நாளை புதன் கிழமை அந்தப் புரோ நோட்டு காலாவதி ஆகுதின்னு, நேத்து உன்கிட்டே வந்து 'செல்' வச்சுக் கொடுன்னு செட்டியார் கேட்டதுக்கு, 'அதெல்லாம் முடியாது. முடிஞ்சாக் கோர்ட்டிலே போட்டுத் தாவா பண்ணிக்கிடுங்க'ன்னு எடுத் தெறிஞ்சி நிட்டூரம் பேசிட்டியாமே ? தர்ம நியாயம்னு ஒண்ணு இல்லையாப்பா ?" என்று வேதனை தாளாமல் கேட்டாள் வள்ளியம்மை.

மாரியப்பன் அசட்டுச் சிரிப்பை வெளி யிட்டான். " ஆச்சி. தர்ம நாயம்னு ஒரு சங்கதி எப்படிங்க இல்லாமல் இருக்க ஏலும் ? நேத்து அந்திக்கு நேரம் கெட்ட நேரத்திலே வந்து காட்டமாப் பேசினுங்க. வட்டியும் முதலும் கைக்கு மெய்யா வந்திடணும்னு சட்டம் படிச்சாங்க. இல்லாட்டி பிராது பண்ணிப்புடுவேன்னு பயம் காட்டினுங்க. ஒட்டிக்கு ரெட்டியாய் எழுதிக் கொடுத்த நோட்டைக் கோர்ட் மேலே போட்டுப்புடறதா அழிச்சாட்டியம் பண்ணினதும், எனக்கும் கோபம் மூண்டிரிச்சுங்க. நான் கை நீட்டி வாங்கின கடன் இரு நூத்தி அம்பதுதானுங்க. இந்த அசலையும் அதுக்கு உண்டான வட்டியையும் எப்படியும் நாளைக்குப் புதன் உச்சிக்கு வந்து கட்டிப்புட்டுப் புரோ நோட்டைக் ' காது கிள்ளி ' வாங்கிக்கிட்டுப் போயிடறேனுங்க. நூத்துக்கு மாசம் ஒண்ணுக்கு ஒரு ரூபாய் வட்டின்னு எங்களுக் குள்ளாற வாய்ப் பேச்சுங்க. செட்டியார் வந்ததும், நான் எழுதிக்கொடுத்த நோட்டை எடுத்துப் புள்ளி போட்டு

வச்சிடச் சொல்லிடுங்க. நான் வருத்தப் பட்டதாகவும் ஐயாகிட்டே சொல்லுங்க. புறப்படுறேன். பசிக்குது!'' என்று சொல்லிப் புறப்பட்டான் மாரியப்பன்.

“மாரியாத்தா'' என்று அமைதி கனியப் பெருமூச்சு விட்டாள் வள்ளியம்மை.

அறந்தாங்கியிலிருந்து இரண்டேமுக்கால் மணி பஸ்ஸுக்குத் திரும்பிவிட்டார் 'சூனா பானா'. இம்மாதிரியான தருணங்களிலே, வீட்டில் அடியெடுத்து வைத்தவுடன், குழந்தைகளைக் கூப்பிட்டு, கொஞ்சிவிட்டுத்தான் விசிப் பலகையில் அமருவது வழக்கம். ஆனால், இன்றோ வந்ததும் வராததுமாக, அவர் நடைக்கு நடையைக் காட்டினார். கவலையோடும், கலவரத்தோடும் பீரோவுக்கு அடியிலும் சுற்றிலுமாக எதையோ தேடினார். பிறகு, இடுப்பில் செருகியிருந்த சாவிக் கொத்தை எடுத்துப் பீரோவைத் திறந்து, ஒரு துணிக்கட்டைப் பிரித்தார். அடுக்கடுக்காக வைத்திருந்த பிராமிசரி நோட்டுக்களைப் பதற்றத்துடன் ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்தார். முகத்தில் ஏமாற்றத்தின் நிழல் படர்ந்தது. நெஞ்சு துரிதகதியில் அடித்துக் கொள்ளத் தொடங்கியது.

எங்கே அந்தப் புரோநோட்டு?

சோற்று வட்டிலையும் வெஞ்சனத் தட்டையும் கழுவி முற்றத் திண்ணையில் வைத்துவிட்டு, “என்னங்க! பசியாறிட்டு மத்த அலுவலைக் கவனிக்கப் படாதாக்கும்?'' என்று செல்லமாகக் குழைந்த வண்ணம் வந்து நின்றாள் வள்ளியம்மை.

“வள்ளியம்மை, பழைய பேப்பர்க்கார மாரியப்பனோட புரோநோட்டை ராத்திரி பீரோவிலேருந்து பிரிச்செடுத்துப் பீரோவுக்கு அடியிலே வச்சேன். விடியகாலையிலே பட்டுக் காட்டைக்குப் போய் அவனைப் பிராது பண்ணுறதுக்காகவே

ஞாபகமாய் எடுத்து வச்சேன். இப்ப அதை இங்கிட்டுக் காணலேயே ? நீ கண்டியா ?''

"ஐயையோ ! இல்லீங்களே, அத்தான் !''

"அட கடவுளே ! ஐநூறு ரூபாய் பெறுமதி கொண்ட புரோநோட்டாச்சுதே ?''

வள்ளியம்மைக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை; கொண்ட கணவரை ஏறிட்டு நோக்கினாள் அவள். பிறகு, "நோட்டு எழுதினது ஐநூறுக்குத்தான். சரி; ஆனா, அந்த மாரியப்பன் கைக்கு மெய்யாய் வாங்கினது அதிலே செம்பாதிதானுமே ?'' என்று குறுக்கே மறித்தாள்.

சுப்பையா மனைவியை ஊடுருவிப் பார்த்துப் பெருமூச் செறிந்தார். "வாஸ்தவந்தான் வள்ளியம்மை ! கடவுளுக்குப் பயந்து லேவாதேவித் தொழில் பண்ணுறவன் நான் நேற்றுச் சாயரட்சை அந்தக் குடிகார மாரியப்பனாவது, என்னைத் துச்சமாய் மதிச்சுத் தூக்கியெறிஞ்சு பேசறதாவது ! அவனோட புத்தியைத் தெளிய வைக்கிறதுக்காகவே பொழுது விடியக் கோர்ட்டுக்குப் புறப்பட்டுப் போகணும்னு இருந்தேன். இல்லாட்டி நானா தப்புத் தண்டா காரியத்திலே இறங்குவேன் ? நம்ப பணம் நமக்கு நிலைச்சால் பத்தாதா ?'' என்றார். ஆத்திரமும் வேதனையும் இன்னமும் இடம் பெயரவில்லை. 'அது சரி. அந்த மாரியப்பன் இங்கிட்டாலே வந்தானா ?' என்று சந்தேகத்துடன் கேட்டார் செட்டியார்.

களை இழந்த வள்ளியம்மை கைகளைப் பிசையத் தொடங்கினாள். "ஆமாங்க. பதினஞ்சு நாழிகைப் பொழுதுக்கு அந்த ஆள் வந்தானுங்க. அடுப்படிப் பரண் மேலேயும் வச்சிருந்த கடுதாசிக் கூடைங்களைப் பாழாய்ப்போன எலிகள் தள்ளிப் போட்டுச்சுங்க. எல்லாத்தையும் கூட்டி அவன்கிட்டே வித்தும் புட்டேனுங்க !'' என்று மென்று விழுங்கினாள். மூச்சு முட்ட, வேர்வையும் முட்டியது.

சுப்பையா கைகளை உதறினார். ஐயோ! காரியம் கெட்டுப் போச்சுதே? பிராமிசரி நோட்டு, அந்தப பாவி மாரியப்பன் கைக்குத்தான் போய்ச் சேர்ந்திருக்க வேணும்! என்று ஏக்கத்துடன் கூறினார் அவர்.

இப்ப என்னுங்க அத்தான் பண்ணுறது ?

சுப்பையா பெருமூச்சு விட்டார். “மாரியப்பனுக்குச் சுளை சுளையா மூணு வருஷத்துக்கு முன்னே எண்ணிக் கொடுத்த சாடாவும் இனி ஆத்திலே வீசிப் போட்ட பணம் கணக்குத்தான்! இயன்ற மட்டுக்கும் மனசறிஞ்சு நியாய மான பாதையிலே நடந்து சம்பாதிச்ச என் பணம் இப்படியா தொலைய வேணும்? அந்த மாரியப்பன் என்னை மதிக்காமல் நடந்துக்கிட்ட கோபத்திலே அவன் ஒட்டிக்கு ரெட்டியாய் எனக்கு எழுதிக் கொடுத்திருந்த புரோநோட்டைக் கொண்டு அவனைக் கச்சேரிக்கு இழுத்துப்பிட வேணும்னு ஒரு தப்பான கள்ள நினைப்பு மனசிலே தோணிச்சே? அந்தப் பாவத்துக்கு வட்டியும் முதலுமாய்க் கூலி கொடுத்திருக்காப் போலே ஆத்தா மாரியாத்தா!” கண்களைத் துவாலையினால் துடைத்துக் கொண்டார் அவர்.

வள்ளியம்மைக்கு இருப்புக் கொள்ளவில்லை “அத்தான், மாரியப்பன் கிட்டே பேச்சுக் கொடுத்தேனுங்க. நேத்துக் குடிபோதையிலே வசம் கெட்டிருந்து உங்களை ஏசின தப்பை உணர்ந்து ரொம்பக் கிலேசப்பட்டான். அவன் நம்பளுக்குப் பட்டிருக்கிற கடன் தொகை ரூபாய் இருநூத்தி அம்பதையும் அதுக்குள்ள பேச்சு வட்டியையும் கணக்குப்படி நாளை உச்சிப் பொழுதுக்கு உங்க கையிலே கொண்டாந்து கொடுத்துக் கடனைத் தீர்த்திட்டு, நோட்டை ‘ரத்து’ப் பண்ணி வாபஸ் வாங்கிக்கினு போயிடுறதாகவும் சொன்னானுங்க” என்று விவரம் கூறினாள்.

‘சூனு பானு’ சுரத்தில்லாமல் ‘ஊம்’ கொட்டினார்.

வள்ளியம்மையின் மனத்தைக் குற்ற உணர்வு அரித்தது. “தப்பு என் பேரிலேதான் இருக்குது. காகிதக் குப்பைகளை

நிறுவைக்குப் போடையிலே சோதிச்சுப் பார்த்துப் போடத் தவறிட்டேனுங்க, அத்தான்!'' என்று தாழ் குரலில் தெரிவித்தாள். தொடர்ந்து, "நான் இப்பவே சாலேக்குப் போய், மாரியப்பனைக் கண்டு தண்டி, அவன்கிட்டே எடைக்குப் போட்ட கடுதாசிகளைச் சோதனை பண்ணிட்டு வந்திடுறேனுங்களே?'' என்றாள் அவள்.

சுப்பையா விரக்தி தெறிக்கச் சிரிக்கலானார்: "அந்த எமகாதன் மாரியப்பன் நம்ப புரோநோட்டை இந் நேரத்துக்குக் காகிதக் குப்பையிலேயே போட்டு வச்சிருப்பான்னு நினைக்கிறியா, வள்ளி? சுத்தப் பைத்தியக்காரியா இருக்கியே? ஊம். எடைக்கு நீ பழைய பேப்பர்களைக் கொட்டையிலே அந்த நோட்டு அவன் கண்ணிலே தடம் காட்டியிருக்கும். அந்தக் கொண்டாட்டத்திலே, அரிச்சந்திர னூட்டம் பணமும் கையுமாய் வந்திடுறதாப் பொய் புளுகிட்டுப் பறிஞ்சிருக்கான்'' என்றார்.

"வாங்க அத்தான், சாப்பிடலாம்."

"எனக்குப் பசி இல்லே. ஒரேயடியா ராத்திரிக்கே சாப்பிடுறேன். இப்ப என்னைக் கொஞ்ச நேரம் தனியே விட்டு விட்டுப் போ, வள்ளி!''

புதன்கிழமை.

உச்சிவேளை தாண்டியது.

வள்ளியம்மை வாசலுக்கும் உள்ளுக்குமாக ஆயிரம் நடை நடந்து பாதங்கள் தேய்ந்தது தான் மிச்சம். பழைய பேப்பர் வியாபாரி மாரியப்பன் இன்னமும் வரவில்லை.

"இனிமே மாரியப்பன் வரமாட்டான். வள்ளியம்மை பணம் போனதுதான்."

" நீங்க ஒரு நடை அந்தத் தில்லுமல்லுக்காரன் மாரி யப்பனைத் தனியே கண்டா என்னுங்க ?"

" தனியே கண்டு...?"

" தனியே கண்டு இதம்பதமாப் பேச்சுக் கொடுத்து அவனை எப்படியாச்சும் தன நு பண்ணி, அவன் நமக்குத் தரக் கட்டுப்பட்ட பணத்தை வசூல் பண்ணிட்டால் ?"

" மாரியப்பனோ மலைவிழுங்கி மகாதேவன். அவன் கிட்டவா நம்ப கூத்துப் பலிக்கப் போகுது ?"

" மாரியப்பன்கிட்டே, அவன் எழுதித் தந்த புரோ நோட்டு அவன் நிறுத்துக்கினு போன கடுதாசியோட கடு தாசியாய்க் கலந்து அவன் கைக்கே போய்ச் சேர்ந்திட்ட நடப்பை எடுத்துச் சொல்லுங்க. அவன் அந்த நோட்டைத் திருப்பித் தந்திரட்டும். இல்லாட்டி, நோட்டுப் பணத்தைத் தந்திரட்டும் ஆத்தரனுக்குப் பயப்படாம, இந்த ரெண்டு தர்ம நியாயங்களுக்கும் கட்டுப்படாமல் வீறுப்புப் பேச ஆரம் பிச்சா, நீங்க மறு பேச்சாடாமல் திரும்பிடுங்க. அவன் பாவத்துக்குத் தக்க கூலியை மாரியாத்தா கொடுத்துக் கிடட்டும்."

" சரி, வள்ளி. உன் ஆசையைத்தான் கெடுப்பா னேன் ?" என்று சொல்லி எழுந்தார் செட்டியார் ; வாசலை அடைந்தார்.

" அப்போது, அங்கே சாட்சாத் மாரியப்பனே நின்று கொண்டிருந்தான்.

" வாப்பா, மாரியப்பா. அப்படித் திண்ணையிலே குந்து."

" ஆகட்டுமுங்க ஐயா. நீங்க தப்பிதமா நினைச்சுக்கப் படாது. ஆச்சிகிட்டே கொடுத்த வாக்குப் பிரகாரம் இங் கிட்டு வந்து விழறதுக்குச் சுணங்கிப் போச்சுங்க !"

" பரவாயில்லை."

" என் கணக்கைப் பார்த்தீங்களா ? ஆச்சிகிட்டயே சொல் விட்டுப் போனேன். அசல், வட்டி எல்லாம் எம்புட்டுக்கு வந்து நிக்குதுங்க, ஐயா ? "

" வந்த காலோட நிக்காமல் முதலிலே அப்படி உட்காரப்பா."

" சரிங்க."

" உனக்கு நான் கொடுத்த கடன் பணம் ரூபாய் இரு நூத்தி ஐம்பதும், ஒண்ணு வட்டி வீதம் மூணு வருஷத் துக்கு உண்டான வட்டியும் சேர்ந்தால், ரூபாய் முந்நூத்தி நாற்பது கூட்டுப்புள்ளி ஆகுது, மாரியப்பா."

" அப்படீங்களா ? வட்டி தூங்காதின்னு சொல்வாங்க ; சரியாப் போச்சு. அது கிடக்கட்டும். பட்ட கடனைத் தலையை அடகு வச்சானும் அடைக்க வேண்டியதுதானே மனுசனுக்கும் நாணயத்துக்கும்.அழகு ?"

" வாஸ்தவந்தான்; மாரியப்பா."

" இதோ பாருங்க, சாடாப் பணத்தையும் கொண்டாந் திருக்கேனுங்க, செட்டியார் ஐயா. என் நோட்டைத் துருசு பண்ணி எடுத்திட்டு வந்து, பணத்தை வாங்கிக்கிட்டு, நோட் டைக் காதுகிள்ளி என்கிட்டே கொடுத்துப்புடுங்க !" என்று சொல்லி, இடுப்பு மடியில் கட்டியிருந்த ரூபாய் நோட்டுப் பொட்டலத்தை ஒரு நிமிர்வோடு பிரித்துக் காட்டினுன் மாரிமுத்து.

" பாவம், ' சுப்பையா தவியாய்த் தவித்தார் ; தண்ணீ ராய் உருகினர்.

" சீக்கிரம் என்னை அனுப்பி வையுங்க, ஐயா !"

" மாரியப்பா !"

" என்னுங்க, தவிக்கிறீங்க ?"

" அவசரப்படாதேப்பா, மாரியப்பா. நீ என் பேருக்கு எழுதிக் கொடுத்த அந்தப் பிராமிசரி நோட்டு இப்பைக்கு என் கையிலே இல்லே !"

" பின்னே ?"

" அது உன்கிட்டே இருக்குது, மாரியப்பா ! உன் நோட்டைப் பீரோவுக்கு அடியிலே வச்சிட்டுச் சந்தைக்குப் பறிஞ்சிட்டேன். பழைய பேப்பரை எங்க ஆச்சி உன்கிட்டே போட்டப்ப, அதுவும் காகிதக் குப்பைங்களோடே சேர்ந்து உன் கையிலே அகப்பட்டுச் சிக்கிக்கிட்டுது !"

" அட பரிதாபமே ! அந்தப் புரோநோட்டை நான் கண்ணுலேகூடக் காணவே இல்லீங்களே, செட்டியார் ஐயா !" என்று பதற்றம் காட்டினுன் பழைய பேப்பர் மாரிப்பன்.

" நிஜமாத்தான் பேசுறீயா மாரியப்பா ?"

" நான் பொய் பேச வேணுமென்கிற தேவை எனக்கு ஏதுங்க. செட்டியாரே ?"

' மாரியாத்தா !" என்று துடித்தார் ' சூனு-பானு ' பிறகு நிதானமான சுயப்பிரக்ஞையோடு, " சரி. இப்ப என்னோட பணத்துக்கு வழி என்ன, மாரியப்பா ?" என்று வினவினுர்.

" வழியை என்கிட்டே கேட்கிறீங்களே ? நீங்க என்னோட புரோநோட்டைக் காட்டினுல், நான் அடுத்த நிமிசமே பூராப் பணத்தையும் கட்டிப்பிடுறேனுங்க, ஐயா !"

" அந்த நோட்டுத்தான் இப்ப என் வசந்திலே இல்லேயே மாரியப்பா."

“ அதுக்கு நான் என்ன செய்வேன். ஐயா ?”

“ நீ என் கையிலேருந்து ரூபாய் இருநூத்தி ஐம்பது கடன் வாங்கினது உண்மை தானே ?”

“ ஆமா !”

“ பின்னே என்ன ? உன் புரோநோட்டு இல்லாட்டி என்னவாம் ? நாணயத்துக்குக் கட்டுப்பட்டவனாக இருந்தால், எனக்குச் சேர வேண்டிய தொகையை என்கிட்டே செலுத்திப்புடவேண்டியதுதானே நியாயம் ?”

மாரியப்பன் நிர்த்தாட்சிண்யமாகவும் அட்டகாசமாகவும் சிரிக்கலானான் : “ ஐயா செட்டியாரே ! எனக்கு முன்னாடியே காது குத்தியாச்சுங்க. உங்க கூத்தும் தந்திரமும் என்கிட்டவா பலிக்கும் ? நான் உங்களுக்கு எழுதிக்கொடுத்த நோட்டு காணுமப் போயிடுச்சின்னு சொல்லி, நையம் பாடி, இப்ப ஒரு வாட்டி எவ்லாப் பணத்தையும் கறந்துக்கிட்டு, அப்பறம் நீங்க கமுக்கமாய் ஒளிச்சு வச்சிருக்கிற அந்தப் புரோநோட்டைக் கோர்ட்டிலேபோட்டு ரெண்டாம் வாட்டியும் சாடாப்பணத்தையும் வசூல் பண்ணிக்கிட வேணுமென்கிறது உங்க சூதுமதித் தந்திரம் ! சுயபுத்தியோட வந்திருக்கிற எனக்கு இது கூடவா புரியாது, செட்டியாரே ?” என்று மீண்டும் எக்காளமிட்டுச் சிரித்தான் மாரியப்பன்.

சுப்பையவேின் இரத்த நாளங்கள் அத்தனையும் சூடேறித் துடித்தன. “ அட பாவி ! என்னை மோசடிக்காரனாகவா நீ எடை போடத் துணிஞ்சிட்டே ? அயோக்கியப் பயலே !” என்று ரோசம் பொங்க, மாரியப்பனை அறையக் கையை ஓங்கினார் சுப்பையா.

அந்தக் கணத்திலே, “ அத்தான், அத்தான் ” என்று கூவிக்கொண்டே குறுக்கே விழுந்து தடுத்து விட்டாள் வள்ளியம்மை.

அதே நேரத்தில், "மச்சான், மச்சான்!" என்று கூறிய படி வந்தாள் செண்பகம்.

மண்முட்டி விண்முட்டச் சிரித்த மாரியப்பன் இருந்திருந் தாற் போலே ஏன் இப்படி விம்மிப் புடைத்து உருகிக் கரைய வேண்டும்?

சுப்பையா திகைத்தார்.

வள்ளியம்மையையும் செண்பகத்தையும் விநயமாக ஒரு முறை பார்த்து விட்டு, மாரியப்பன் பேசத் தலைப்பட்டான் "செட்டியார் ஐயா! முதலிலே நீங்க பெரிய மனசு பண்ணி என்னை மன்னிச்சாக வேணும். தங்கமான உங்களைத் தவறுத லாக எடை போட நான் துணிவேனுங்களா? சும்மா அப்படி நடிச்சு ஒரு பொய்க்கூத்து நடத்தினேன். ஐயா, முதலிலே உங்க பணத்தைப் பிடியுங்க. முந்நூத்தி நாற்பது இருக்குதுங்க!"

மாரியப்பன் பணத்தைச் சுப்பையாவின் கைகளிலே சமர்ப்பித்தான்.

மாரியப்பன், "ஐயா, நான் உங்களுக்கு எழுதிக் கொடுத்த அந்தப் பிராமிசரி நோட்டு காணமப் போயிடுச் சேன்னு ரோசிக்கிறீங்களாங்காட்டி? மதியம் இங்கே பேப்பர் நிறுக்கையிலே அந்த நோட்டு என் கையிலேதான் சிக்கிச்சு துங்க! காகிதக் குப்பைங்களுக்கு ஊடாலே அந்தப் புரோ நோட்டைக் கண்டடியும் நானும் மிருகமாகத்தான் மாறிப் பேடன். ஆனா, தெய்வம்னு ஒண்ணு இருக்குதுங்களே, அது என்னோட கண்ணைத் திறந்து விட்டிருச்சுங்க! கேளுங்க கதையை!" என்று சொல்லி நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந் தான்:

"ஐயா, அதோ நிக்குதுங்களே செண்பகம், அதுதானுங்க நான் தொட்டுத் தாலி கட்டின பெண்சாதி. அதுக்குத் துரோகம் செஞ்சிட்டுக் குடியும் கூத்தியுமாய்த் தட்டுக்